KALKI 10.2.2008 ரூ.8.00 80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



என்னதான் செய்தார் கலைஞர்?

- சீறும் சரத்குமார்



நான் வியாபாரி அல்ல..!

-மனம் திறக்கும் பிரகாஷ்ராஜ்


பொன்னு விளையுற பூமி
பொன்பூமியில் விளையும்
தங்க நெக்லஸ் அனைத்தும் பொக்கிஷம்
Jewellery Mahal
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகை
தி.நகர். சென்னை - 17. Ph : 044-24330888
Shop online at www.ktmjewellery.com

உடம்பில் சின்னதாக அடிபட்டு, டாக்டரிடம் சென்றால், உடனே டி.டி. இன்ஜெக்‌ஷன் போட வேண்டும் என்கிறார்களே! அது அவசியம்தானா?

- எம்.உமா மகேஸ்வரி, சேலம்

பொது மருத்துவர் மற்றும் சர்ஜன் டாக்டர் (மேஜர்) ரெங்கன் :

ப்ரிஸ்கிரிப்ஷன்



டெட்டனஸ் என்ற பாக்டீரியாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு அளிக்கவே டி.டி. வேக்சின் போடப்படுகிறது. சாலை விபத்தில் அடிபடும்போது, சுகாதாரமற்ற சூழ்நிலை காரணமாக, காயத்தில் தூசு, மண், சாணம் போன்றவை ஒட்டிக்கொள்ள வாய்ப்புகள் அதிகம். அவற்றில் இருக்கும் டெட்டனஸ் பாக்டீரியா, உடனடியாக, காயம் வழியாக உடலுக்குள் சென்று, உயிருக்கே அபாயம் ஏற்படுத்தும் ஆபத்து உண்டு. எனவே, டெட்டனஸ் வேக்சின் போடவேண்டியது அவசியமே. அதேசமயம், ஒரு முறை டெட்டனஸ் வேக்சின் போட்டுக்கொண்டால், ஐந்து வருட காலம் வரை அதற்குத் தடுப்புச் சக்தி உண்டு. எனவே, ஐந்து வருட காலத்தில் ஒவ்வொரு முறை காயம் படும்போதும், டி.டி. போட்டுக்கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. ஏற்கெனவே, டி.டி. போட்டுக்கொண்ட விவரத்தை டாக்டரிடம் கூறினால் போதும்.

விபத்துகளில் காயம் பட்டவுடன் என்ன செய்ய வேண்டும் என்பதே பலருக்குத் தெரிவதில்லை. முதலில் காயம்பட்ட இடத்தைத் தூய்மையான தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும். ஆன்டிசெப்டிக் திரவங்களைத் தவிர்த்துவிட்டு, சாதாரணக் குளியல் சோப்பு கொண்டு சுத்தம் செய்தாலும் சரி. இரத்தப் போக்கு இருந்தால், விரலை வைத்து இலேசாக அழுத்தம் கொடுத்தாலே போதும்; இரத்தம் வருவது நின்றுவிடும். காயத்தைச் சுத்தமான துணியால் மூடி விடுங்கள். டாக்டரிடம் போகும் முன்பு, இந்த முதலுதவி போதுமானது. விபத்து காரணமாக எலும்பு முறிவு ஏற்படும் சாத்தியம் உண்டு என்பதால், காலில் அடிபட்டிருந்தால், நடக்கவேண்டாம்; கையில் அடி என்றால், கையை அசைக்க வேண்டாம். இந்த வழிமுறையைப் பின்பற்றினாலே, மிகச் சீக்கிரம் குணம் பெறலாம்.

எனக்கு 45 வயது. டீன்ஏஜ் பருவத்திலிருந்து மூக்குக் கண்ணாடி அணிந்திருக்கிறேன். இப்போதெல்லாம் கண்ணாடி அணிந்துகொண்டு பேப்பர் படிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆனால், கண்ணாடியைக் கழற்றிவிட்டுப் படிப்பது கொஞ்சம் வசதியாக இருக்கிறது. இது எனக்கு ரொம்ப

வும் ஆச்சர்யமாக இருக்கிறது. ஏன் இப்படி?

- மதி, சென்னை

கண்மருத்துவர் டாக்டர் அருள்மொழிவர்மன் : இதன் பின்னணியைத் தெரிந்துகொண்டால் ஆச்சர்யம் விலகிவிடும். பல வருடங்களாக நீங்கள் அணிந்துகொண்டிருப்பது கிட்டப்பார்வைக்கான கண்ணாடியாக இருக்கும். வயது நாற்பதைத் தாண்டும்போது, வெள்ளெழுத்து ஏற்படுவது சகஜம். அது வரை மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் தூரப் பார்வை என்னும் குறைபாடு கண்களில் உண்டாகும். இதற்கு ப்ளஸ் பவர் கொண்ட மூக்குக் கண்ணாடியை அணிய வேண்டியிருக்கும்.

ஒரு வேளை நீங்கள் ஏற்கெனவே அணிந்துள்ள மூக்குக்கண்ணாடி மைனஸ் 1.5 பவர் கொண்டது என்று வைத்துக்கொள்வோம். சமீபத்தில் ஏற்பட்டுள்ள தூரப் பார்வைக் குறைபாட்டுக்காக ப்ளஸ் 1.5 பவர் கொண்ட கண்ணாடியையும் அணிய வேண்டும். இந்த இரண்டு பவர்களும் ஒன்றையொன்று சரிசெய்து கொள்வதால், உங்களுக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டுப் படிப்பது சௌகரியமாக இருக்கலாம்.

எனினும், பிற செயல்களுக்காக நீங்கள் ப்ளஸ், மைனஸ் இரண்டு பவர்களும் கொண்ட கண்ணாடியை அணிய வேண்டியிருக்கும். தவிர, காலப்போக்கில் இவற்றில் எந்த லென்ஸின் பவர் மாறினாலும், கண்ணாடி இல்லாமல் இயல்பான தூரத்தில் வைத்துக்கொண்டு படிக்கக்கூடிய தற்போதைய சௌகரியம் மாறிவிடும்.

தொகுப்பு : **மானஸா, ஜி.எஸ்.எஸ்.**

உடனே ஊசி போடணுமா?

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

'சமத்துவ மக்கள் கட்சி'யின் முதல் மாநில அரசியல் மாநாடு, பிப்ரவரி பத்தாம் தேதி மதுரையில் நடக்கவிருக்கிறது. மாநாட்டு வேலைகளில் பிஸியாக இருந்த அதன் தலைவர் சரத்குமாரைக் கேள்விகளோடு சந்தித்தோம்...

தி.மு.க.விலிருந்து பிரிந்துபோய் பலர் தனிக்கட்சி துவங்கியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நீங்கள் எந்த வகையில் வேறுபடுகிறீர்கள்?

''தி.மு.க.விலிருந்து பிரிந்துபோய் கட்சி நடத்தியவர்கள்; நடத்துபவர்கள் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், என் தலைமையில் இயங்கும் சமத்துவ மக்கள் கட்சி வித்தியாசமானது என்பதை மக்கள் உணர்வார்கள்; உணர வைக்கப் பாடுபடுவோம். மறக்கப்பட்ட அரசியல் பண்புகளையும், சில அடிப்படை அரசியல் நாகரிகங்களையும் நாங்கள் வலியுறுத்திக் கடைபிடிப்போம். இப்போது ஒரு ஆட்சி போடும் மக்கள் நலத் திட்டத்தை, அடுத்த ஆட்சி முடக்கிப் போட்டு விடுகிறது. இது தவறு என்று சுட்டிக்காட்டுவோம். கட் - அவுட், பேனர் கலாசாரத்துக்கு குட் - பை சொல்லி, ஊடகங்களைப் பயன்படுத்தி எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வோம். எனவே, காலப் போக்கில் மக்கள் வித்தியாசத்தை உணர்வார்கள்.''

உங்கள் கட்சியிலும் குடும்ப ஆதிக்கம்... சாதி ஆதிக்கம்தானே...?

என்னதான் செய்தார் கலைஞர்?



'' 'சமத்துவம்' என்கிற பெயரில் கட்சி நடத்துவதே சாதி - மத - மொழி வேறுபாடுகளைத் தாண்டி, புதிய சமுதாயம் படைக்க வேண்டும் என்பதற்காகத்தான். தவிர, குடும்ப ஆதிக்கம் வர வாய்ப்பே இல்லை. ராதிகா, பெரிய நிறுவனத்தை நடத்திக்கொண்டு திரைத்துறையில் பிஸியாக இருக்கிறார். என் குடும்பத்தினர், மற்ற தொண்டர்களைப் போலத்தான் நடத்தப்படுவார்கள். கட்சியில் எந்தப் பொறுப்பும் வகிக்கமாட்டார்கள். அதே சமயம், தொண்டர்கள் தேவைக்கேற்ப, என் குடும்பத்தினருக்கோ கட்சிப் பணி செய்பவர்களுக்கோ முக்கியத்துவம் தர விரும்பினால், கட்சி அதை முடிவு செய்யும்.''

'அரசியல்' என்பதே பிழைக்கும் வழி

– சீறும் சரத்குமார்

என்று மக்கள் வெறுக்கும்போது, அவர் களைக் கவர என்ன அணுகுமுறை வைத்திருக்கிறீர்கள்?

''கடந்த நாற்பது ஆண்டுகளில் அரசியல்வாதிகளின் செயல்பாடுகளைக் கண்டு, வெறுத்துப்போன மக்கள் இவ்வாறு நினைப்பதில் தவறில்லை. ஆனால், அதை மாற்றிக் காட்டத்தான் புதிய சிந்தனைகளுடன் களத்தில் குதித்திருக்கிறோம். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு மட்டுமே கட்சியில் இடமுண்டு. தொழிலாக நினைத்துப் பிழைக்க வருபவர்கள், அடையாளம் கண்டு விரட்டப்படுவார்கள்.''

மற்ற கட்சிகளில் பதவி கிடைக்காதவர்கள்தானே புதிய கட்சிகளில் சேர்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு என்ன சாதிக்க முடியும்?

ஒரு கட்சியிலிருந்து ஒருவர் விலகி வருகிறார் என்றால், அதற்கான உண்மையான காரணங்களைக் கட்சித் தலைமை சொல்வதில்லை. ஆனால், எங்கள் கட்சியில் சேர்ந்து, பொறுப்புகளில் இருப்போரின் செயல்பாடுகள் திருப்தி தரவில்லையென்றால், அவர்கள் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக்கொண்டு விடுவார்கள். மேலும், எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் எங்கள் கட்சியில் இணைந்தாலும், அவர்களின் சிந்தனைகளை மாற்றி, சேவை மனப்பான்மை வளர

பயிற்சிகள் நடத்தப்படும். மேலும், பல்வேறு துறைகளில் சிறப்பாக விளங்கும் பிரமுகர்களை அழைத்து, அந்தந்தத் துறைகளில் நாடு இருக்கும் நிலை, மாற்ற வேண்டிய விஷயங்கள், தொலைநோக்குத் திட்டங்கள் என்று உரத்த சிந்தனையை வளர்க்கும் விதத்தில் விவாதங்கள் நடத்





தப்படும்.''

எந்தக் கட்சியுடனும் கூட்டணி கிடையாது என்று சமீபத்தில் ஓர் அறிக்கை விட்டிருக்கிறீர்களே?

''தமிழ்நாட்டில், தி.மு.க. - அ.தி.மு.க.வுக்கு மாற்றாக, மக்கள் ஒரு புதிய அரசியல் சக்தியை விரும்புகிறார்கள். ஆனால், அந்த இடம் வெற்றிடமாக இருக்கிறது. அடுத்து, நல்ல அரசு வரவேண்டும் என்ற ஏக்கம் மக்களிடம் அதிகரித்து வருகிறது. நான் சொல்லிய அந்த வெற்றிடத்தை நோக்கிப் பயணப்பட்ட விஜயகாந்த், எந்த அளவுக்குத் தாக்கத்தை உண்டு பண்ணுவார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், தொலைநோக்குடன் கொள்கைகளை மக்கள் முன் வைத்து, உழைப்பையே மூலதனமாகக் கொண்டு செயல்படப் போகும் எங்களையே மக்கள், அந்த வெற்றிடத்தை நிறைவு செய்வதற்குத் தேர்வு செய்வார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், கூட்டணி கிடையாது என்று சொன்னேன். இனி 'கூட்டணி யுகம்' என்ற பேச்சு மாறும் காலம் வந்து கொண்டிருக்கிறது.''

> **அரசுப் பணத்தில் இலவசங்கள் ஒரு சாதனையா? அடிப்படை கட்டுமான வசதியைப் பொறுத்த வரை, இந்த அரசின் சாதனை என்பது பூஜ்ஜியம்தான்!**

என்னதான் நீங்கள் சொன்னாலும் தேர்தல் என்று வரும்போது, கூட்டணி தவிர்க்க முடியாததாகிவிடும்! விஜயகாந்த் கட்சியுடன் கூட்டு உண்டா?

''இப்போது என் கவனம் முழுவதும் மாநாட்டில் இருக்கிறது. சமத்துவ மக்கள் கட்சியின் கொள்கைகளும், திட்டங்களும், கிராமத்து மக்களைச் சென்றடைய வேண்டும். கட்சி செல்வாக்குடன் வீறு நடை போட வேண்டும். இதுதான் இப்போதைய எண்ண ஓட்டம். எனவே, விஜயகாந்த் கட்சியுடனோ அல்லது வேறு கட்சிகளுடனோ கூட்டணி பற்றி தற்சமயம் எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், எங்கள் வளர்ச்சியைக் கண்டு வியந்து, மற்ற கட்சிகள் எங்கள் கதவைத் தட்டும் வாய்ப்புண்டு.

கலைஞரின் ஆட்சி சாதனையா - வேதனையா?

''கொஞ்சம்கூடத் தொலைநோக்குப் பார்வையில்லாமல் ஓர் ஆட்சி நடக்கிறது. என்னதான் செய்தார் கலைஞர் பாராட்டுவதற்கு? அரசுப் பணத்தில் இலவசங்கள் ஒரு சாதனையா? சுற்றுச்சூழல், சுகாதாரம், விவசாயம் தொடர்பாக, அடிப்படை கட்டுமான வசதி என்று எதை எடுத்துக் கொண்டாலும் இந்த அரசின் சாதனை பூஜ்ஜியம்தான். முன்பெல்லாம் தலைவர்கள் உடல்நிலை சரியில்லையென்றால், அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுப்பார்கள். இப்போது ஆள்கின்றவர்களுக்கே நம்பிக்கையில்லை. நட்சத்திர மருத்துவமனைகளில் சென்று படுத்துக்கொள்கிறார்கள். அரசு ஆஸ்பத்திரியை நம்பும் பாமரனின் கதிதான் என்ன? காவிரி பிரச்னையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்த திறமையில்லை. மென்பொருள், கார் தயாரிப்பு ஆகிய துறைகளில் தமிழகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் தனிப்பட்ட தொழிலதிபர்களின் முனைப்புதானே தவிர, அரசாங்கத்தின் பங்களிப்பு ஏதுமில்லை. திறந்த மார்க்கெட்டில் சிமென்ட் விலை

யைக் குறைக்க முடியவில்லை. நாற்பத்தெட்டு லட்சம் இளைஞர்கள் தமிழகத்தில் வேலையில் லாமல் இருக்கிறார்கள். இவர்கள் எண்ணிக்கையைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுத்தார் கலைஞர்? எல்லாவற்றையும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.''

கட் - அவுட் கலாசாரத்தை ஒழிக்க முற்படும் நீங்கள், 'மாநாடு' கலாசாரத்தில் மாட்டிக்கொண்டது ஏன்? மக்களைச் சிரமப்படுத்தவா?

''எங்களுடையது புதிய கட்சி. முதல் முறையாக எல்லாப் பொறுப்பாளர்களையும் சந்திக்கும் வாய்ப்பாகவும், கொள்கைகளை விளக்க ஒரு மேடையாகவும், மாநாடு நடத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. கட் - அவுட், டிஜிட்டல் பேனர், மாநாடு கலாசாரம் மாற வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. நாங்கள் கூட்டம் கூட்ட வேண்டிய தருணம் இது. இந்த மாநாட்டால் பொது மக்களுக்கு மிக மிகக் குறைந்த அளவே பாதிப்பு உண்டாகும். இந்த மாநாட்டுக்குப் பிறகு, இல்லம்தோறும் கட்சியை எடுத்துச் செல்வதே எங்கள் முதல் வேலையாக இருக்கும்.

- ப்ரியன்



''உங்களுக்குத் தொலைநோக்குப் பார்வையே இல்லைன்னு சொல்றாங்களே தலைவரே?''

''நான், பத்துத் தலைமுறைக்குச் சொத்துச் சேர்த்து வெச்சிருக்கிறது யாருக்குத் தெரியும்?!''

- *சீகாழி ரேவதி*

ஜாலி ஸ்டோர்ஸ்



ஒரே ஸ்கிரீன்'

'சிவாஜி' சூடு தணியும் முன்பே 'குசேலன்', 'ரோபோ' என ரஜினியின் சினிமா லிஸ்ட் நீண்டுகொண்டே போகிறது. ஆனால், இன்னொரு பெரிய 'தலை'யான கமலின் தசாவதாரம் ஸ்டில்ஸைத் தவிர, வேறு எதையும் பார்க்கமுடியாத ஆதங்கத்தில் அவரது ரசிகர்கள் இருக்கிறார்கள். ஒரு நாள் கும்பலாக அவரைச் சந்தித்தனர்.

"என்ன தலைவரே, நீங்க கடைசியா நடிச்ச 'வேட்டையாடு விளையாடு' படத்தை டி.வி.யிலகூடப் போட்டாச்சு. அடுத்த படத்தை நாங்க எப்பதான் பார்க்கறது?"

"உங்க ஆதங்கம் எனக்கு நல்லாப் புரியுது. ஆனா, நீங்க அவசரப்படற மாதிரி நானும் அவசரப்பட்டா, அப்புறம் படம் அவசர அவசரமா பெட்டிக்குப் போயிடும். அதுக்காக உங்களை ரொம்ப நாளைக்குச் சோதிக்கவும் மாட்டேன். தசாவதாரம் முடிஞ்சதும் வரிசையா மூணு படம் செய்யப்போறேன்."

"அந்த மூணு படமும் ரஜினி படத்துக்குப் போட்டியா இருக்கணும்."

"கண்டிப்பா இருக்கும். அவரோட 'குசேலனு'க்குப் போட்டியா நான் நடிக்கப் போற படத்தோட பெயர் 'குகன்'. எப்படி!"

"சூப்பர் சார்! 'கு'னாவுக்கு 'கு'னா. கதை என்ன சார்?"

"ஒரு காடு. அங்கே ஒரு காட்டாறு. கரையில பாதியும் தண்ணியில பாதியுமா தத்தளிக்கிற படகு. கரையை ஒட்டி ஒரு குடிசை. அந்தக் குடிசையில தனியா ஒருத்தன். கட்டில்ல பாதியும் தரையில பாதியுமா படுத்திருக்கிறான். படகு மாதிரியே அவன் மனசும் தத்தளிக்குது. அவன் யார்? அங்கே என்ன பண்றான்? அவன் ஊர் எது? உறவுகள் எங்கே? அந்தப் படகு மாதிரி தான் அவனும். சமுதாயம்ங்கற காட்டாறைக் கடக்க, பலருக்குத் தோணியா இருக்கான். இந்தப் படத்துல ஒரு புதுமை செய்யறேன். தத்தளிக்கற அவன் மனசுக்கு உருவம் கொடுத்து, திரையில் உலா விடப் போறேன். மனசுக்கு உருவம் என்னோட குருநாதர் பாலசந்தர் ஏற்கெனவே செய்துட்ட விஷயம் தானேன்னு நினைப்பீங்க. உண்மைதான்! நான் அந்த உருவத்தை நவீனப்படுத்தப் போறேன். திரையில் அந்த உருவம் தெரிஞ்சும் தெரியாமலும் வரும். மறைவா இருக்கும்; ஆனா, மறைஞ்சும் இருக்காது."

"புரியலியே சார்."

"படத்தைப் பார்க்கறப்ப புரியும்."

"நீங்க சொல்றதைப் பார்த்தா 'ஆர்ட்

ஒரே கதை, இரண்டு படங்கள்!

குசும்புராஜ்

ஃபிலிம்' மாதிரி தெரியுதே தலைவா! உங்களுக்கு எங்களை மாதிரி ரசிகர்கள் இருக்கறதை மறந்துடாதீங்க வாத்யாரே!''

''மறப்பேனா குரு. படத்தோட புதுமையைப் பத்தி இன்னும் முழுசா சொல்லி முடிக்கலை. ஒரே கதை, ஒரே ஸ்கிரீன். ஆனா, ரெண்டு திரைக்கதை. ஸ்கிரீன்ல ரெண்டு பாதியா படம் ஓடும். ஒரு பாதியில ஆர்ட் ஃபிலிம். அதே காட்சிய மசாலா தூவி, அடுத்த பாதி ஸ்கிரீன்ல ஓட விடுவோம். இந்தப் பாதியில நந்திதா தாஸ், அந்தப் பாதியில மல்லிகா ஷெராவத். இதுல பசுபதி, அதுல வடிவேல்....''

''தலைவா ஒண்ணு சொன்னா ஃபீல் பண்ணமாட்டீங்களே.''

''மாட்டேன், சொல்லுங்க.''

''உங்களோட சில படங்களை ஃபுல் ஸ்கிரீன்ல பார்த்தாலே மண்டை குழம்பும். இதுல ஒரே ஸ்கிரீன்ல ரெண்டு படம்னா.. படம் முடிஞ்சு வெளியே வர்றப்ப நாங்க நாங்களா இருப்போமா?''

''பயப்படாதீங்க. இது புது டெக்னிக்கை யூஸ் பண்ணி எடுக்கற படம். இது சம்பந்தமா அமெரிக்காவுக்குப் போய் டிரெய்னிங் எடுத்துட்டு வரப் போறேன். படம் பார்க்க வர்றவங்களுக்கு ஒரு கண்ணாடி கொடுப்போம். அதைப் போட்டுக்கிட்டா ஒரு பாதி ஸ்கிரீன் மட்டுமே தெரியும். ஆர்ட் ஃபிலிம் பார்க்கறவங்களுக்குப் பழுப்பு நிறக் கண்ணாடி. மசாலா பார்க்கறவங்களுக்கு நாலு கலர் மிக்ஸ் பண்ணின கண்ணாடி கொடுப்போம். எந்த மூலையில உட்கார்ந்து பார்த்தாலும், நீங்க பார்க்க நினைக்கிற பாதிதான் தெரியும்.''

''நல்ல ஐடியாவா இருக்கே. படம் எப்ப வரும்?''

''அதுக்கு முன்னாடி தியேட்டர்ல சில மாற்றங்கள் செய்யணும். ஸ்கிரீனோட வடிவமைப்பைக் கொஞ்சம் மாத்தணும். இருக்கைகளைத் தொண்ணூறு டிகிரி சாய் கோணத்துல பொருத்தணும். தியேட்டரோட தரைக்கும் பூமிக்கும் நடுவுல நாலு இன்ச் இடைவெளி இருக்கணும். இதையெல்லாம் முடிச்சுட்டா, படத்தை முழுமையா பார்க்கலாம். இந்தப் படம் முடிஞ்சதும் அடுத்ததா...''

''போதும் வாத்யாரே போதும். முதல்ல தசாவதாரம் வரட்டும். அதை வைச்சே நாங்க நாலஞ்சு வருஷத்தை ஓட்டிக்கறோம்.''

(எங்கே அடுத்த கதையைச் சொல்ல ஆரம்பித்துவிடுவாரோ என்ற பயத்தில், ரசிகர்கள் திசைக்கு ஒருவராய் நழுவுகிறார்கள்.)



நீங்கள் கேட்டவை

● எஸ்.பிரசன்னகுமார்,
காட்பாடி

? 'பிரதிபா பாட்டீல் கையால் வாஜ்பாய் பாரத ரத்னா வாங்குவதைவிட வாங்காமல் இருக்கலாம்' என்று சோ பேசியிருக்கலாமா?

! அவ்விருது வாஜ்பாய்க்கு அளிக்கப்பட்டிருந்தால், இதே வார்த்தையைப் பேசியிருப்பாரா?! விருது வழங்குவது குடியரசு தலைவர்; பிரதிபா அல்ல.

● எஸ்.டி.எஸ்.கோவிந்த
ராஜன், கோவை

? பிரதமர் மன்மோகன் சிங் ஆர்ப்பாட்ட அரசியல்வாதியாக இல்லாதது ஒரு குறையா? சிறப்பா?

! ஆர்ப்பாட்ட அரசியல் வாதியாக இல்லாதது சிறப்புதான். உறுதி காட்டும் பிரதமராக இல்லாததுதான் குறை. இதற்கு, கூட்டணி நிர்ப்பந்தங்களும் ஒரு காரணம்.

● பொன்விழி, அன்னூர்

? கும்ப்ளே 600 பற்றி..?

! அவரது பந்து சுழற்சி வார்னேவுக்கு இணையானது அல்ல; ஆனால், குறி தப்பாமல் வீசக்கூடியவர். ஒவ்வொரு பந்தும் அவர் திட்டமிட்ட இடத்தில் சரியாக 'பிட்ச்' ஆகும். 600 விக்கெட் வீழ்ச்சிக்குள், ஒரே இன்னிங்ஸில் பத்து விக்கெட்கள் போன்ற வேறு பல சாதனைகளும் அடக்கம்.



● சாதனை பிளஸ்!



● ஆர்ப்பாட்டம் மைனஸ்!

● இரா.சக்கரபாணி, மதுரை

? நாடாளுமன்றம் மற்றும் அரசு நிர்வாகத்தின் அதிகாரத்தைப் பறிக்க நீதித் துறை முயற்சிப்பதாக, மக்களவைத் தலைவர் கவலை தெரிவித்துள்ளது பற்றி?

! இந்தக் கவலையை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியே வெளியிட்டு, 'அதிகார வரம்பைப் புரிந்துகொள்ளுங்கள்' என்று நீதிபதிகளுக்கு அறிவுரை கூறியிருக்கிறார். ஆனால், இதையே அரசியல்வாதி கூறும்போது அங்கு சுயநலம் எட்டிப் பார்க்கிறது; வரம்பு மீறியவராகிறார்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? "நான் இன்ஸ்டன்ட் தலைவர்தான்; ஆனால், ஆக்ஸிடென்ட் தலைவர்கள்தான் உருவாகக் கூடாது" என்று விஜயகாந்த் ஜெ.வுக்குப் பதிலடி கொடுத்துள்ளாரே?

! இன்ஸ்டன்ட் தலைவரும் தேர்தல் முடிவுகளிலே ஆக்ஸிடென்டைச் சந்திக்கலாம். ஆக்ஸிடென்ட் தலைவரும் இன்ஸ்டன்ட் வெற்றி பெறலாம்!

● செ. ஆசைத்தம்பி, தாரமங்கலம்

? நாட்டில் பக்தி வளரும் அளவுக்கே தீவிரவாதமும் வளர்கிறதே?

! பக்தியை நாட்டுப் பற்றாகவும், மதத் தீவிரவாதத்தை மதங்களைக் கடந்த இறையுணர்வாகவும் மாற்றும் அளவுக்குச் சீரிய, செல்வாக்குமிக்க தலைமை இல்லாததே காரணம்.

● தலை ரெடி!



● சேவை வெயிட்!



பக்தீ வளரும் அளவுக்கே தீவிரவாதமும் வளர்கிறதே?

● ஆர்.சந்திரன், சென்னை - 117

? காலை எழுந்தது முதல் இரவு படுக்கப் போகும் வரையில், வளவளவென்று பேசும் பெண் பற்றி சிறிய விளக்கம்..?

! விஷய ஞானமின்றியும் கேவலமான சொற்களைப் பிரயோகித்தும், மேடைப் பேச்சில் கொட்டி முழக்கும் ஆண் அரசியல் வாதிகளைவிட.., இவர்கள் ஒன்றும் மோச மில்லை. ஒன்று சுபாவம்; மற்றது சுய லாபம்.

● வெ.ராம்குமார், வேலூர்

? இந்தியா - ஆஸ்திரேலியா மூன்றா வது டெஸ்டில் நமது சாகச வெற்றி குறித்து...?

! உலக சாம்பியன்கள் வரிசையில் இந்திய அணி இரண்டாம் இடத்தைப் பிடிக்க உதவியது. ஆஸ்திரேலியாவின் தொடர் வெற்றிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. 'யானைக்கும் அடி சறுக்கும்' என்று நிரூபித்தது. டீம் ஸ்பிரிட்டுக்கு டானிக் கொடுத்தது.

● எஸ்.சுகந்தி, B.P.அக்ரஹாரம்

? 'கடவுளுக்கு அருகில் பூனையும் எலியும் கூட உலாவுகின்றன. ஆனால், மனிதனாகப் பிறந்தும், என்னால் ஹிந்து கோவில்களுக்குள் நுழைய முடியவில்லை என்பது மிகுந்த வருத்தத் தைத் தருகிறது' என்று யேசுதாஸ் வருத்தப் பட்டுள்ளாரே?



● சந்தித்த ஆக்ஸிடண்ட்!



● தலைமை இன்ஸ்டண்ட்!

! நீடிக்கக்கூடாத தடை. எம்மதமும் சம்மதம் என்கிற உணர்வில்லாத ஒருவர், வேற்று மத ஆலயத்தில் வழிபட நினைக்கமாட்டார். யேசுதாஸ் தீவிரவாதியும் அல்ல; நாடறிந்த நல்லவர். அப்புறம் தடை எதற்கு? ஹிந்து மதத்துக்கு இழுக்குக் கற்பிக்கவா?

● வி.விமல், சென்னை - 4 ★

? பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை, மே 2008 முதல் அமலுக்கு வருமாமே? அன்புமணி இதற்கு மே மாதம் வரை ஏன் காத்திருக்க வேண்டும்?

! சிகரெட் உற்பத்தி நிறுவனங்களுக்கும் புகைப் பழக்கத்துக்கு அடிமையானோருக்கும் அந்த அவகாசம் அவசியம் என்று அமைச்சர் கருதியிருப்பார். மேலும், ஒரு மசோதாவை உருவாக்கி, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து, விவாதம் நடந்து, அது சட்டமாக நிறைவேறவும் அவகாசம் தேவை.

☐ ரூ.100/- பரிசு பெறுபவர் :
எஸ்.டி.எஸ். கோவிந்தராஜன், கோவை
✱ ரூ.50/- பரிசு பெறுபவர் :
வி.விமல், சென்னை - 4

● பி.பத்மாவதி, கோவை

? மோடி குஜராத்தில் நல்லாட்சியைத் தந்திருக்கலாம். ஆனால், அவர் பேரில் உள்ள இனப் படுகொலை குற்றச் சாட்டும், அவரது வன்முறைப் பேச்சுகளும் நியாயமா?

! அவருடைய ஆட்சியில் நிகழ்ந்த மாநிலத்தின் வளர்ச்சி, அவருடைய தவறுகளை நியாயப்படுத்தி விடாது. மாறாக, வெளிச்சம்போட்டுக் காட்டி வருத்தத்தை அதிகரிக்கும்.



● இலக்கிய பாலிடிக்ஸ்!



● வரலாற்று வில்லன்!

● என். காளிதாஸ், சிதம்பரம்

? 'சட்டம் - ஒழுங்கு நாறால் கெட்டது!' என்று பேரவையில் தி.மு.க. - அ.தி.மு.க. காரசார விவாதம் நடத்தியது பற்றி...?

! 'உன்னாலே நான் கெட்டேன்; என்னாலே நீ கெட்டே: இருவரும் மாறிமாறி ஆட்சி செய்ததில், சட்டம் - ஒழுங்கு கெட்டது' என்று இருவர் சார்பிலும் பட்டிமன்றத் தீர்ப்பு வழங்கலாம்.

● வி.சௌரிராஜன், ஸ்ரீரங்கம்

? 'கனிமொழி ஒரு கவிஞர் என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை' என்கிறாரே சோ?

! சோ ஒப்புக்கொண்டால்தான் ஒருவர் கவிஞர் என்று அறியப்படும் அல்லது அங்கீகரிக்கப்படும் நிலைமை, நல்லகாலமாக தமிழகத்தில் இல்லை.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? தேவகௌடா சுயசரிதை எழுதப் போவதாக அறிவித்துள்ளார். அவர் உண்மையை எழுதப் போவதில்லை என்பது உலகத்துக்கே தெரியும். ஆனால், ஒரு சுயசரிதை எப்படி இருக்க வேண்டும்?

! 'சத்தியசோதனை' போல வெற்றிகளை வினயத்துடன் சொல்லி, தோல்விகளைப் பாடமாக ஏற்கும் பக்குவத்துடன் எழுதப் பட்டதாக இருக்கவேண்டும்.

● ஜோ.ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை

? 'பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் அத்வானி குற்றம் சாட்டப் பட்டிருப்பதால், அவர் பிரதமராக வர முடியாது' என்று லாலுபிரசாத் யாதவ் கூறியுள்ளாரே?

! Kettle calling the pot black! லாலு அமைச்சராக முடியுமெனில், அத்வானி ஏன் பிரதமராகக் கூடாது?



புள்ளிகள்... கோலங்கள்...

கொஞ்சம் யோசனையுடன் கதவைத் தள்ளினான் குணசேகர். ஹாலில், சோபாவில் அண்ணி பார்வதி சரிந்து இருந்தாள். தூங்குகிறார்களா என்ன...

கதவைத் திறந்துபோட்டு, உள்ளே ஆள் வருவதுகூடத் தெரியாமல்...

அருகில் சென்று குரல் கொடுத்தான்.

''அண்ணி...''

''ஹக்...''

திடுக்கிட்டுப் பார்த்தாள், பார்வதி.

''வாங்க தம்பி... எப்படி வந்தீங்க? நான் கதவைத் திறக்கலையே...''

''கதவு திறந்தே இருந்திச்சு அண்ணி.''

''அ... அப்படியா? நான் கவனிக்கல..''

''அண்ணி.''

''ம்...''

''ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க... உடம்பு சரியில்லையா?''

''அப்படியெல்லாம் இல்லை...'' பார்வதி சேலைத் தலைப்பில் முகம் அழுந்த துடைத்துக்கொண்டு,

''தம்பி... உங்க அண்ணா இன்னும் வரலை. நீங்க ஆஃபீஸ் வரை போய்ப் பார்த்துட்டு வர முடியுமா...?'' என்று கேட்டாள்.

மணி பார்த்தான். பதினொன்று.

''ஃபோன் பண்ணினாரா...?''

''ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி பண்ணி, 'கலேகா என்ன பண்றாள்'னு கேட்டார். 'நான் வர லேட்டாகும். நீங்க சாப்பிடுங்கள்'னாரு. ஏதோ பதற்றத்துல இருந்த மாதிரி தோணிச்சு. கொஞ்ச முன்ன, நானே ஆஃபீஸுக்கு ஃபோன் பண்ணினேன். கந்தசாமிதான் இருந்தான். 'அரை மணி நேரத்துல திரும்பி வர்றேன்னு சொல்லிட்டு, காரை அவரே ஓட்டிக்கிட்டுப் போனார். இன்னும் வரல'ன்னான். ஒன்னும் தெரியலயே.''

''பிசினஸ் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயமா இருக்கும் அண்ணி. பதற்றப்படாதீங்க; வந்துடுவார்...''

''என் பயத்துக்குக் காரணம் இருக்கு தம்பி'' என்றாள் பார்வதி, கலக்கமாக.

''அண்ணி...?''

''அதை எப்படிச் சொல்றதுன்னு புரியல...''

''எதுவாயிருந்தாலும் சொல்லுங்க அண்ணி.''

பார்வதி குணசேகரைப் பார்த்தாள். அவள்மீது மிகவும் பாசம் வைத்திருப்பவன். குடும்பப் பொறுப்பு அதிகம் கொண்டவன். நம்பிக்கைக்கு உரியவன். இவனிடம் மட்டும்தான் எதையும் சொல்ல முடியும்.


''அது ஒரு கனவு...'' என்று ஆரம்பித்தாள் பார்வதி.

(தொடரும்)

பறுதுலம் சுகுமாரன்



கல்கி



2008 பிப்ரவரி 10
சர்வஜித் தை 27
மலர் : 66
இதழ் : 28

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா

– *பாரதியார்*

கனிமொழி சொல்வதைக் கேளுங்கள்!


தமிழகத்தில் பெண்களுக்கும் பெண்மைக்கும் என்ன 'மரியாதை' கிடைக்கிறது என்பதற்கான சோக சாட்சியம்தான் சமீபத்தில் நடந்த சட்டசபை விவாதம்! பா.ம.க. உறுப்பினர் வேல்முருகன் தொடங்கி வைக்க, ஆற்காடு வீராசாமியும் துரைமுருகனும் அளித்த பதில்கள் அதிர்ச்சியுடன் அவமானமும் ஏற்படுத்தின.

இந்தக் கேவலத்தைச் சாடி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பதர் சயீத் பேசியிருப்பது மிகுந்த ஆறுதல் தருகிறது. பெண்களின் உண்மையான பிரச்னைகளைக் குறித்து சட்டசபையில் விவாதிப்பதற்குப் பதிலாக 'ஈரைப் பேனாக்கி'ப் பேசியதைக் கண்டித்திருக்கிறார் பதர் சயீத். வேல்முருகன் Vs துரைமுருகன் விவாதத்தை அனுமதித்ததோடன்றி, அகௌரவமான சொற்களில் பெண்கள் குறித்துப் பேசப்பட்டவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்கத் தவறிய சபா நாயகரையும் கடுமையாக விமர்சித்திருக்கிறார் பதர் சயீத்.

'சிவாஜி' பட விழாவுக்கு வந்தபோது, சங்கடப்படுத்தும் விதமாக உடை உடுத்தி வந்ததற்காக ஸ்ரேயா மன்னிப்புக் கேட்டாகிவிட்டது. அதன் பிறகு விவாதத்துக்கே அவசியம் இல்லை.

மேலும், உண்மையான பிரச்னை ஸ்ரேயாவின் உடை மட்டும் அல்ல. ஒரு பெண்ணை மீடியாவும் சமூகமும் எப்படிப் பார்க்கின்றன என்பதே பிரச்னையின் ஆணிவேர். பத்திரிகைகளும் சினிமாவும் டி.வி.யும் பெண்ணை போகப் பொருளாகச் சித்தரிப்பதால், ரசிகர்





களும் அவர்களை அவ்வாறுதான் காண முடிகிறது. அரசியல் தலைவர்களும், தமிழ்ப் பண்பாட்டைக் காப்பதாகக் கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்களும் மீடியா பிரதிநிதிகளாகத்தான் இயங்குகிறார்களேயொழிய, பெண்களின் கௌரவத்தை மதித்துப் போற்றும் சிந்தனையாளர்களாக இல்லை. பதர் சயீத் பேசியபோதுகூட அவர்கள் வெட்கித் தலை குனியவில்லை. தங்களுக்குள் சிரித்துக்கொண்டு கிளுகிளுத்ததோடு அல்லாமல், பதர் சயீத் பேசிய தமிழையும் கிண்டல் செய்திருக்கிறார்கள். தமிழில் அவர் பேச முயன்றதை வரவேற்று மகிழ்ந்திருக்க வேண்டாமோ!

எல்லாவற்றைக் காட்டிலும் வேடிக்கை, தமிழக சட்டசபையில் பெண்களைக் கேவலமாகப் பேசிய தினத்தில்தான், ஆளுங்கட்சி எம்.பி. கனிமொழி, சென்னையில் ஒரு கூட்டத்தில் பெண்களை மீடியா இழிவுபடுத்திக் காட்டுவது பற்றி வருந்தி விரிவாகப் பேசியிருக்கிறார்.

ஜனநாயக நாட்டில் நடை - உடை - பாவனைக்குச் சட்டம் விதிக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால், நாகரிக வரம்புகள் மீறப்படுகிறபோது எச்சரிப்பதும் கண்டனம் செய்வதும், பொதுவாழ்வில் பொறுப்பான நிலைகளில் இருப்போரின் கடமை. அத்தகைய வரம்பு மீறல்களுக்கு அவர்கள் துணை போகாமல் இருப்பது அவசியம்; ஊக்குவிக்காமல் இருப்பது அதைவிட அவசியம்.

முதல்வரும் அமைச்சர்களும், பெண்களை போகப் பொருளாகச் சித்தரிக்கும் சினிமா, குத்துப்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்று, மணிக்கணக்காக அவற்றில் நேரமும் செலவிடுகிற போது, தமிழகத்தின் ரசனையும் கலாசாரமும் ஒட்டுமொத்தமாக அடிவாங்குவது உண்மை.

பெண்களை போகப் பொருளாக்குவதும் அவர்களைப் பற்றி மலினமாகப் பேசுவதும் வரிசையாகப் பல சமூகப் பிரச்னைகளுக்கு வழி வகுக்கும். பெண்மையை மதிக்காத சமுதாயம் விரைந்து பாழாகும்.

இதை பதர் சயீத்தோ அல்லது கல்கி தலையங்கமோ சொன்னால், இன்றைய ஆட்சியாளர்களுக்கு விளங்காமல் போகலாம்; விளங்கினாலும், ஏற்புடையதாக இராது. அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த கனிமொழியின் கருத்தையாவது கேட்டுப் புரிந்துகொள்ளட்டும்; ஏற்றுக் கொள்ளட்டும்! ●

மாடியில் 'டமால், டமால்' என்று சத்தம். டி.வி.யை அணைக்காமலே, ஓடினார்கள் உமாவும் ரவியும். மேலே, மூடிய அறையிலிருந்துதான் சத்தம்.

உள்ளே ''டேய்! உன்னைச் சும்மா விடமாட்டேன். தலைவேறு, கால்வேறா பண்ணி கொன்னுடறேன். என் புத்தகத்தை எல்லாம் சுக்குச்சுக்காய், பாழடிச்சது நீதானே!'' மறுபடியும் கட்டையால் அடிக்கிற சத்தம்.

இருவரும் படபடவென்று கதவைத் தட்டினார்கள். ''ஐயோ வேண்டாண்ணா, அடிக்காதே, அடிக்காதே, கொல்லாதே,'' என்று தம்பி பாபு, கத்தக் கத்த, அடிக்கிற சத்தம் அதிகரித்தது.

''ஐயையோ! பாபுவை என்னடா பண்றே? கண்ணா, கதவைத் திறடா'' நேற்றுதான் டி.வி.யில் அண்ணன், தம்பியைக் கொன்ற செய்தியைக் கண்ட பெற்றோர்கள், பயந்து அலறினார்கள்.

''அப்பாடி! ஒரு வழியா தீத்துக் கட்டிட்டேன்!'' வெற்றி வீரனாகக் கதவைப் படீரென்று திறந்து வெளியே வந்தான் கண்ணா! அவன் கையில் வால் இருக்க, தலைகீழாகத் தொங்கியது ஒரு செத்த எலி!

கொலை!



– வசுமதி



மனு!

முதியோர் இல்லத்தில் என் அப்பாவைச் சேர்த்த பிறகு, மனைவி, மகனுடன் காரில் ஏறும் முன், மகன் மீண்டும் முதியோர் இல்லத்தின் உள்ளே சென்றான்.

நானும் அவன் பின்னால் சென்றேன். நேரே மேனேஜரிடம் சென்றவன், ''எனக்கு ஒரு மனு வேணும் சார்'' என்றான்.

''எதுக்குடா மனு?'' என்றேன் நான்.

''தாத்தாவை இங்கே சேர்க்க ஒரு வருஷத்துக்கு முன்னால மனு போட்டீங்க. உங்களைச் சேர்க்க இப்பவே மனு போடப் போறேன்ப்பா'' என்றான்.

என் கன்னத்தில் ஓங்கி அறைந்தது போல இருந்தது.

''டேய், அதிகப் பிரசங்கி, பேசாமா வாடா' என்றாள் கூட வந்த மனைவி.

''அம்மா, உங்களுக்கும் பெண்கள் முதியோர் இல்லத்தில் மனு வாங்கிடறேன்'' என்றான்.

அவள் பெட்டிபாம்பாய் அடங்கினாள்.

– ந.க.பரமசிவம்



வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
THRILLERS IN தமிழ்
ஆங்கில நாவல்களுக்கு இணையாக
1930-களில்
தமிழகத்தை கலக்கி
தமிழ் வாசகர்களை அசர வைத்த
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார், பி.ஏ.,
எழுதிய நாவல்கள் - புதுப்பொலிவுடன்
ஆங்கிலத்தில் ஷெர்லாக் ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
தமிழகத்தில் அன்றும் இன்றும் என்றும்
திகம்பர சாமியார்
என்று போற்றப்படக் கூடிய தரமான, திரில்லர்கள்
விறுவிறுப்பான துப்பறியும் கதைகள்
கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவிற்கு கட்டிப் போடும்.
உவகையூட்டும் நாவல்கள் வெளிவந்து விட்டன.
வரம்பு மீறல்கள், நயவஞ்சகம் சூழ்ச்சி ஆகியவற்றை பிரமிப்பூட்டும் வகையில்
முறியடிக்கும் திகம்பர சாமியார் மற்றும் பிற கதாபாத்திரங்கள்.
1. பூர்ண சந்திரோதயம் (5 பாகங்கள்) ..... ரூ. 650.00
2. கும்பகோணம் வக்கீல் (2 பாகங்கள்) ..... ரூ. 200.00
3. மாயா விநோதப் பரதேசி (3 பாகங்கள்) ..... ரூ. 385.00
4. மேனகா (2 பாகங்கள்) ..... ரூ. 250.00
5. மதன கல்யாணி (3 பாகங்கள்) ..... ரூ. 355.00
6. சௌந்திர கோகிலம் (4 பாகங்கள்) ..... ரூ. 460.00
7. பாலாமணி (அ) பக்காத் திருடன் (2 பாகங்கள்) ரூ. 170.00
8. வசந்த மல்லிகா ..... ரூ. 110.00
9. வித்யாசாகரம் ..... ரூ. 100.00
10. பன்னியூர் படாடோப சாமா ..... ரூ. 150.00
11. திவான் லொடபடசிங் பகதூர் ..... ரூ. 40.00
12. திரிபுரசுந்தரி (அ) திகம்பரசாமியார் திடும்பிரவேசம் ரூ. 130.00
13. வஸந்த கோகிலம் ..... ரூ. 90.00
14. தங்கம்மாள் (அ) தீர புருஷனின் தியாக கம்பீரம் ரூ. 75.00
அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை - 600 004. தொலைபேசி : 24641314

ராஜாஜி தந்த வைட்டமின்கள்!

நாலு நாட்களாக வலது காதில் ஓர் அடைப்பு. 'வயது காரணமாக காது மந்தமாகி வருகிறதோ' என்று ஒரு சந்தேகம். ஆனால், டெலிஃபோன் ரிஸீவரை எடுத்து காதில் வைத்தால் டயல் டோன் இலேசாகக் கேட்டது. துளிர்விடும் நம்பிக்கையுடன் கா.மூ.தொ. டாக்டரிடம் போனேன். காதை சுரங்கமாக்கி அதிலிருந்து அழுக்கைப் பலமுறை தோண்டி எடுத்துப் போட்டார் டாக்டர் ரவி. ''இதற்கு வெருமென் என்று பெயர். உள் காதுக்குள் தூசு துரும்பு எல்லாம் புகுந்து விடாமல் காக்க, இறைவன் ஒரு மெழுகை காதில் சுரக்க வைக்கிறார். அதில் அழுக்கு சேரச் சேரப் பிரச்னையாகிறது. ஓரிரு வருஷங்களுக்கு ஒரு முறை வந்து காது குளியல் செய்துக்கங்க'' என்று கூறியபடியே பிச்சாங்குழல் வைத்து நீர் அடித்தார். காது சுத்தமாகி, அடைப்பு முற்றிலும் நீங்கிவிட்டது.

இந்த நாலு நாட்களில் எனக்கு அடிக்கடி ராஜாஜி ஞாபகம் வந்தது. அவருக்கு ஒரு காது ரொம்ப மந்தம். இந்தக் குறையையும் ஒரு வசதியாக்கிக்கொண்டார் அவர்! சுதந்திரா கட்சிக் கூட்டங்கள், தேர்தல் நெருங்க நிறைய நடக்கும். ராஜாஜி 'டூர்' போவார். 'மீட்டிங்'குகளில் முதலில் உள்ளூர் தொண்டர்கள் உற்சாகமாகப் பேசுவார்கள். அப்புறம் ஊர்ப் பிரமுகர்கள்; பிறகு வெளியூரிலிருந்து வந்துள்ள தலைவர்கள்; கடைசியாக ராஜாஜி. இவர்களில் பலரது பேச்சில் சாரம் இராது. ராஜாஜி, உன்னிப்பாகக் கேட்பதுபோல வலது காதை அவர்கள் பக்கம் பார்க்க வைத்துக் கொண்டு, இடது காதை இடது உள்ளங்கை மீது சாய்ப்பார். அவரளவில் பூரண அமைதி நிலவும். அடுத்த வாரம் சுயராஜ்யா பத்திரிகைக்கு என்ன தலையங்கம், எப்படி ஆரம்பித்துக் கொண்டுபோய் எவ்வாறு முடிப்பது என்று யோசித்துக்கொண்டிருப்பார்! அதே சமயம் சாரமான பேச்சு எனில், இடது காதருகே உள்ளங்கையைக் குவித்து ஒலியை வாங்கி கவனமாகக் கேட்பார். அந்தப் பேச்சு பற்றி தமது உரையில் குறிப்பிட்டு மேலும் சில கூறுவார்.


இதனால் ராஜாஜி சில பேச்சாளர்களை அலட்சியம் செய்தார் என்பதல்ல அர்த்தம்.

● அறுபத்தைந்து வயதிலேயே வாக்கிங் ஸ்டிக்...



வார்த்தை ஜாலங்களை ஒதுக்கி, விவேக முத்தெடுப்பது அவருக்குக் கைவந்த கலை. நேரம் அவருக்குப் பொன்னானது. ஒவ்வொரு நிமிஷமும் பயனுள்ளதாக அமைய வேண்டும் - ஓய்வு உள்பட!

மதியம் சற்று கண்ணயர்வார். டூர் போகும்போதுகூட டாட்ஜ் காரில் பின் ஸீட்டில் படுத்துவிடுவார். இதற்காக சதாசிவம் இரண்டு ஸ்டூல்களைப் பிரத்யேகமாகத் தயாரித்து, கால் வைக்கும் இடத்தில் போட்டு அகலக் கட்டிலாக்கும் வசதி செய்திருந்தார். பகலில் படுக்கும்போது கண்களுக்கு மேலாகக் கறுப்புத் துணியாலான ஒரு பட்டையை விரிப்பார். மூளைக்குள் அலாரம் அடிக்குமோ என்னமோ, சரியாக முக்கால்மணி நேரம் சென்றதும் விழித்தெழுந்துவிடுவார்.



* அரை வயிற்றுக்குச் சாப்பிட வேண்டும்...

மாலை நேரத்தில் கல்கி காரியாலய தோட்டத்தில், புல்வெளியில் தடியை ஊன்றி அவர் நடை பழகுவதே ஓர் அழகாக இருக்கும். மூப்பு காரணமாக வேகமாக நடக்க மாட்டார். ஆனால், நடையில் ஒரு சீரான தாளகதி இருக்கும். அறுபத்தைந்து வயதிலேயே 'வாக்கிங் ஸ்டிக்' பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார் ராஜாஜி. இது பற்றிக் கேட்டபோது, ''தடியை நன்றாக ஊன்றி நிமிர்ந்து நிற்கவும் நடக்கவும் வேண்டும். இல்லையென்றால் கூன் போடுவதற்கு வாய்ப்புண்டு!'' என்றார்.

நீண்ட நாள் உயிர் வாழ்வது பெரிதில்லை; கூடிய வரை ஆரோக்கியமாகவும் வாழ வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார் ராஜாஜி. ''(இதன்) ரகசியம் என்ன தெரியுமா?'' என்று ஒரு முறை என்னிடம் கேட்டார். அவரே பதில் சொல்லட்டும் என்று மௌனம் காத்தேன். 'உடலுழைப்பு - தேகப் பயிற்சி' என்று சொல்வார் என எதிர்பார்த்தேன். ''அரை வயிற்றுக்கு சாப்பிட வேண்டும்'' என்றார்.

''அப்படித்தான் நினைக்கிறேன்; ஆனால், விஜயா 'முறுகலாயிருக்கு, இன்னும் ஒரு தோசை போட்டுக் கோங்கோ' என்னும்போது 'சரி' என்று சொல்லிவிடுகிறேன்'' என்றேன்.

''நாக்கை நம் வசப் படுத்தணும். ஒரு

கல்கி ராஜேந்திரன்

'நீண்ட நாள் உயிர் வாழ்வது பெரிதில்லை; கூடியவரை ஆரோக்கியமாகவும் வாழ வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார்' ராஜாஜி!



● ஒவ்வொரு நிமிஷமும் பயனுள்ளதாக...

ஸ்பூன் பாதாம் அல்வா சாப்பிட்டாலும் ஒரு கிண்ணம் பாதாம் அல்வா சாப்பிட்டாலும் ருசி ஒன்றேதான், இல்லையா? ஒரு ஸ்பூன் பாதாம் அல்வா ருசிப்பதுடன் ஏன் நிறுத்திக்கொள்ளக் கூடாது?'' என்று கேட்டார்.

சொல்வதைச் செய்துகாட்ட ராஜாஜியால் முடிந்தது. அளவாகச் சாப்பிட்டாலும் ருசித்துச் சாப்பிடுவார். எங்கள் வீட்டுக்கு வந்தால், ''மல்லிப்பூ மாதிரி இட்லி வார்த்திருக்கேன்'' என்று என் தாயார் சொல்வாள். ''உபசாரம் பண்ணாமலிருந்தால் சாப்பிடறேன்'' என்பார் ராஜாஜி. ஒரு இட்லி கொண்டுவரச் சொல்லி மூன்று - நாலு 'பக்கவாத்தியங்களுடன்' சாப்பிடுவார்! இட்டிலியை எட்டு துண்டங்களாக்கி, சாம்பார், கொத்துமல்லி சட்னி, துளியூண்டு மிளகாய்ப்பொடி, தயிர் என்று நாலுவிதமாக தொட்டுக்கொண்டு ரசித்து உண்பார்.

சதாசிவம் இல்லத்தில் கிருஷ்ணய்யர் என்று ஒரு ஹெட்-குக் இருந்தார். ஒரு நாள் மாலை, ராஜாஜி வாக்கிங் முடிந்து புல்வெளியில் நாற்காலியில் அமரும் சமயம் அவரை நெருங்கி, ''இன்னிக்கு ஸ்பெஷலா அக்கார வடிசல் பண்ணியிருக்கேன்'' என்று கூறி, கிண்ணத்தைத் தட்டில் வைத்து நீட்டினார். கிண்ணத்திலிருந்து பாதிக்குமேல் ஸ்பூனால் தட்டில் தள்ளிவிட்டு, மீதமுள்ள அக்கார வடிசலை நிதானமாக ருசித்துச் சாப்பிட்டார் ராஜாஜி. ''ரொம்ப நன்னா இருக்கு. ஆனா, நீ வெல்லம் வைச்சிருக்கிற பாத்திரத்தில் கட்டெறும்பு வந்திருக்கும், போய்க் கவனி'' என்றார்.



● பொதுக்கூட்டத்தில்...

கிருஷ்ணய்யருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அன்று அக்காரவடிசல் செய்ய வெல்லம் எடுத்தபோது கட்டெறும்பு ஊர்வது கண்டு வெய்யிலில் சற்று நேரம் வைத்து, பிறகு இறுக்கமான மூடி போட்ட பாத்திரத்துக்கு மாற்றியிருந்தார் அவர்.

இது தெரிய வந்ததும், ''எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''வெல்லத்தில் எறும்பு ஊர்ந்தால் ஃபார்மிக் ஆஸிட் (formic acid) சுரக்கும். தயாராகும் பண்டத்தில் இலேசான புளிப்பு எட்டிப் பார்க்கும்'' என்றார் ராஜாஜி.

இன்றைக்கும் விஜயா ஊத்தப்பம் வார்த்தால், ''சாதா ஊத்தப்பமா, ராஜாஜி ஊத்தப்பமா? எது வேணும்?'' என்று கேட்பாள். ''ராஜாஜிக்கே என் வோட்டு'' என்பேன்.

'ராஜாஜி ஊத்தப்பம்' என்பது சின்னதாக உள்ளங்கை அளவிலானது. மத்தியில் மிருதுவாகவும் சுற்றிலும் ஓரம் மட்டும் சற்று கரகரப்பாகவும் இருக்கும். நெய் விட்டு இப்படி வார்த்து அளித்தால், விஜயாவின் திருப்திக்காக ஒன்றுக்கு பதில் ஒன்றரை ஊத்தப்பம் சாப்பிடுவார் ராஜாஜி.

இவையெல்லாம் சின்னச் சின்ன விஷயங்களாகத் தோன்றலாம். ஆனால், ஒவ்வொன்றும் நலமுடன் வாழ ஒரு முக்கிய கருத்தை உள்ளடக்கிய வைட்டமின் மாத்திரை.

"சத்தம் எழாமல் சாப்பிடப் பழகணும்" என்று நான் சிறுவனாக இருந்தபோது எனக்குப் பண்பாடு கற்றுத் தந்தார் ராஜாஜி. ஒரு விருந்தில் அவர் எதிரே அமர்ந்த நான், பால் பாயஸம் பரிமாறியதும் ஆசை மிகுதியில் அள்ளி எடுத்து உறிஞ்சியபோது, சொல்லிக் கொடுத்தார். ஆயினும் என்ன? 'ரசம் சாதமோ பாயஸமோ உறிஞ்சாமல் எப்படிச் சாப்பிடுவது?' என்று இன்று வரை எனக்குப் பிடிபடவில்லை! ராஜாஜியும், டி.கே.சி.யும் இயல்பாக இதைச் செய்து காட்டினார்கள். உணவின் மணத்துடன் பேச்சின் இலக்கிய மணம் போட்டியிடும்.

உணவு தயாரிப்பதற்கும் ராஜாஜிக்குத் தெரியும்! "ரவா உப்புமா பண்ணுவதற்கு எனக்குக் கற்றுத் தந்தவரே ஸி.ஆர். அண்ணாதான்" என்று என் தாயார் (ருக்மிணி) என்னிடம் கூறியதுண்டு. காந்தி ஆசிரமத்தில் 'விமோசனம்' பத்திரிகை நடத்திய காலத்திலிருந்தே ஸி.ஆர். அண்ணா, குடும்பத்தில் ஒருவராகக் கருதப்பட்டு வந்ததால், அம்மா சொன்னதை அப்போது நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஒரு சமயம் தேர்தல் பிரசார சுற்றுப் பயணத்தின்போது, ராஜாஜி பெரிய டாட்ஜ் காரில் முன்னால் போக, நாங்கள் - ஓவியர் சாமா, ஆத்மநாதன், நான் ஆகியோர் - ஒரு ஃபியட் காரில் பின்தொடர்ந்தோம். எஸ்.வி.எஸ்., டாட்ஜில் முன் ஸீட்டில் அமர்ந்திருந்தார். மாலை மயங்கும் நேரத்தில், டாட்ஜ் கார் நின்றது. நாங்கள் இறங்கி, சற்றே கவலையுடன் ராஜாஜியை அணுகினோம்.

"நான் மெதுவா வர்றேன்; நீங்க முன்னாடி டவுனுக்குள் போய், நல்ல ஹோட்டலாகப் பார்த்து ரவா உப்புமா தயாரிக்கத் தரச் சொல்லுங்க. அநேகமா கல்லாப் பெட்டியில்தான் முதலாளி அமர்ந்திருப்பார். அவரிடம் ராஜாஜிக்குன்னு சொல்லுங்க" என்ற ராஜாஜி, தொடர்ந்து உப்புமா தயாரிப்புக்கு ஒரு 'டிப்ஸ்' கொடுத்தார்: "வாணலியில் ரெண்டு முட்டை நெய்விட்டு, ரவையை இலேசா வறுத்து எடுத்துடணும்; அப்புறம் அவர்கள் வழக்கமா உப்புமா தயாரிக்கிற மாதிரியே செய்யட்டும்." தேர்தல் கூட்டம் நடக்குமிடத்தில் சந்திப்பது என்று முடிவு செய்துகொண்டு முன்னால் சென்றோம்.

முந்திரிப் பருப்பு வறுத்துப் போட்டு, எலுமிச்சம்பழம் பிழிந்து, மலர மலர, மணக்க மணக்க ராஜாஜிக்காக ஸ்பெஷலாகத் தயாரான அந்த உப்புமாவை ருசித்துவிட்டு, "பேஷாயிருந்தது" என்று அவர் சொன்னதும், அந்த ஓட்டல் முதலாளிக்கு தேவேந்திர பதவியே கிடைத்துவிட்டது போல அப்படி ஒரு சந்தோஷம். பசி நேரத்தில் அந்த உப்புமாதான் என்ன ருசி! ராஜாஜி அளவாகச் சாப்பிட்ட பத்துப் பதினைந்து ஸ்பூன் உப்புமா போக, மிச்சமெல்லாம் எங்களுக்குத்தானே!

(பேசுவோம்)

* சுற்றுப் பயணத்தில் ராஜாஜியுடன் கட்டுரை ஆசிரியர்



ஜோசியர் வீட்டுக்கு...



''உங்க மனைவி பெயருக்குத் தினமும் அர்ச்சனை பண்றீங்களே ஏன்?''

''வீட்டுல தினமும் அவள் எனக்குப் பண்ற அர்ச்சனைக்கு ஏதோ ஒரு வகையில் பழிக்குப் பழி வாங்கற திருப்தி!''

\- உ.ராஜாஜி



''ஜோசியர் வீட்டுக்கு எப்படிப் போகணும்?''

''ஜாதகம், பணத்தோட போகணும்!''

\- ச.ஆ.கேசவன்

''என்னோட ஞாபகமறதி உங்களையே பாதிக்கக்கூடிய அளவுக்கு வந்திருச்சு டாக்டர்?''

''எப்படிச் சொல்றீங்க?''

''வீட்டிலிருந்து கிளம்பும் போது மணி பர்ஸை எடுத்துவர மறந்துட்டேன்!''

\- பெ.கலாசாமி

''குருவே பசியை அடக்கத் தெரிஞ்சவன் 'யோகி'யாக முடியுமா?''

''அல்சர் பேஷண்டா வேணா ஆக முடியும்!''

\- வெ.சீதாராமன்





''எப்படிப் பொருத்தம்!''



''அமைச்சரே, நேற்று இரவு நாம் நகர்வலம் சென்ற போது அரண்மனையில் என்ன கலாட்டா?''

''யாரோ ஒருவன் உங்களைப்போல் வேஷம் போட்டுக்கிட்டு அந்தப்புரத்தில் நுழைந்துவிட்டானாம்!''

– ஆர்.இம்மானுவேல்



''ஆபீஸ்ல 'வாழு, வாழவிடு!'ன்னு ஏன் எழுதி வெச்சிருக்காங்க?''

'' 'வாங்கு! வாங்கவிடு'ன்னு எழுதினா பிரச்னை ஆயிடுமே!''

– சீர்காழி வி.ரேவதி

''உங்களுக்கும் உங்க மனைவிக்கும் தினமும் இரண்டு தடவை சண்டை நடக்கும்ங்கறீங்க. எப்படி ரொம்ப நிம்மதியா இருக்கீங்க?''

''முதல் சண்டையில அவள் ஜெயிச்சான்னா.. ரெண்டாவது சண்டையில நான் தோத்துப் போயிடுவேன்.''

– பெ. கலாசாமி



''தலைவர் தொண்டர்களைச் சந்தேகப்படுறது. டூ மச்!''

''ஏன் என்னாச்சு?''

''உண்ணாவிரதம் இருக்கிற தொண்டர்கள் ஏதாவது சாப்பிட்டிருக்காங்களான்னு வயிற்றை ஸ்கேன் எடுத்துப் பார்க்கணும்ங்கிறாரு!''

– இனாம் மணியாச்சி ச.ஆ.கேசவன்



தேள் கொடுக்கு நாக்காக உருமாறினால் எப்படி இருக்கும்? சாட்சாத் பால் தாக்கரேயின் நாக்கு போலவே என்று திட்டவட்டமாகச் சொல்லிவிடலாம். ஆனால், மனிதர் அவ்வப்போதுதான் பேசுவார். பெரும்பாலும் பத்திரிகையில் எழுதுவார்.

பத்திரிகை கார்ட்டூனிஸ்டாக வாழ்க்கையைத் தொடங்கிய தாக்கரே, நாட்டின் முன்னணிப் பத்திரிகைகள் அனைத்திலும் கார்ட்டூனாக இடம் பெற்றுவிட்டார் என்றால், அதற்கான அத்தனை புண்ணியமும் அவருடைய வார்த்தைகளுக்கே!

ஒரு சாம்பிள் பார்க்கலாமா?

'முஸ்லிம்கள் கேன்சர் நோயைப் போன்றவர்கள். கேன்சர் கட்டியை அறுவை சிகிச்சை செய்து அழிப்பது போல, அவர்களையும் செய்யவேண்டும்.'

'மராட்டியம் மராட்டியர்களுக்கே' என்கிற கோஷத்தை உச்சஸ்தாயியில் எழுப்பியவர் தாக்கரே. அதற்கு வலு கொண்ட பட்டியல் தயாரானது.

'படியுங்கள்... அமைதியாக இருங்கள்'- இதுதான் அந்தப் பட்டியலுக்கு தாக்கரே கொடுத்த தலைப்பு!

இந்தச் சீண்டலும் தூண்டலும் கலந்த விஷமத்தனமான அணுகுமுறை மக்கள் மனத்தில் மற்ற மாநில மக்களுக்கு எதிராக ஓர் எதிர்ப்புணர்வை விதைத்தது. தாக்குதல்கள் நடந்தன. தாக்கரேயின் எதிர்பார்ப்பும் இதுதான்.

மராட்டிய மக்கள் மனத்துக்குள் எழுந்த கனலின் கதகதப்பிலேயே 'சிவசேனை' கட்சியைத் தொடங்கினார் தாக்கரே. கட்சி வளர்ச்சிக்கு நீரூற்ற அவ்வப்போது பல்வேறு விஷயங்களைக் கையிலெடுத்துக் கொள்வார். கொஞ்சநாள் மராட்டியர்கள் உரிமை. அடுத்து, முஸ்லிம்கள் எதிர்ப்பு. அதற்கடுத்து, மும்பையின் வெளிமாநில வாசிகள். ஊறுகாய் கணக்காக, அவ்வப்போது திரைப்படங்கள்.

1995ஆம் ஆண்டு நடந்த தேர்தல்

கலாம் மீது கொட்டிய

சேர்க்கும் வகையில்தான் அவருடைய ஒவ்வொரு அசைவும் இருந்தது; இருக்கிறது.

முதலில் பிள்ளையார் சுழியைப் பார்த்துவிடலாம்.

தமக்குச் சொந்தமான மார்மிக் பத்திரிகை வாயிலாக வெளிமாநில மக்களுக்கு எதிராக அதிரடி ஆபரேஷன் ஒன்றை நடத்தினார் தாக்கரே. பம்பாயில் உள்ள அரசு அலுவலகங்களில் பணியாற்றும் வெளிமாநில நபர்களின் விவரங்களைப் பட்டியலாக வெளியிடுவதுதான் ஆபரேஷனின் அஜெண்டா. 1,500 பேர்



பிரசாரக்கூட்டத்தில் பொறி பறக்கப் பேசினார் தாக்கரே. தெறித்து விழுந்த அத்தனை வார்த்தைகளும் முஸ்லிம்களைக் குறிவைத்தே இருந்தன. அவ்வளவுதான். வெகுண்டெழுந்தது தேர்தல் ஆணையம். தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே, 'ஆறு ஆண்டுகளுக்கு தாக்கரே தேர்தலில் போட்டியிடவும் கூடாது; வாக்களிக்கவும் கூடாது' என்று தடைபோட்டது. மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது இந்திய வரலாற்றில் முதன் முறை.

அதற்காக தாக்கரே வாய் மூடி மௌனியாக இருந்து



★ கார்டூன் ஆன கார்டூனிஸ்ட்!

கலகம் பிறந்தது எனக்காக 5

கனல் சொற்கள்!

ஆர்.முத்துக்குமார்

விடுவாரா என்ன? வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் முஸ்லிம்களை வார்த்தை களால் வறுத்தெடுத்துக்கொண்டிருந்தார். உச்சபட்சமாக ஒருநாள் தமது சாம்னா பத்திரிகையில் எழுதினார்.

'தொல்லை தரும் முஸ்லிம்களை நாட்டிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். நான்கு கோடி வங்கதேச முஸ்லிம்களை வெளியேற்றிவிட்டால், நாம் பாதுகாப்பாக இருக்க முடியும். தீவிரவாதச் செயல்களில் ஈடுபடும் முஸ்லிம்களிடமிருந்து இந்துக் களைப் பாதுகாக்க தற்கொலைப் படைகள் உருவாக்கப்பட வேண்டும்.'

இதே கருத்தை, கட்சியின் ஆண்டுவிழா ஊர்வலத்திலும் ஆவேசமாகப் பேசினார். இது நடந்தது 2002ல். தாக்கரேயின் தடாலடி வார்த்தைகள் இனமோதலைத் தூண்டு கின்றன என்று கூறி, இந்திய தண்டனைச் சட்டம் 153(a) பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனாலும், அவர் ஓய்ந்த பாடில்லை.

ஒரு விஷயம் தெரியுமா? முஸ்லிம்கள் விளையாடுகிறார்கள் என்ற ஒரே காரணத் துக்காக தாக்கரேவுக்குக் கிரிக்கெட் பிடிக் காது. அதுவும் பாகிஸ்தானுட னான ஆட்டம் என்றால், அவ ருக்கு வேப்பங்காய் சாப்பிடுவதுபோல. இதனால், சிவசேனைகள் மும்பை வான்கடே ஸ்டேடியம், கொல்கத்தா ஈடன் கார்டன் போன்ற மைதானங்களைத் தோண்டி ரகளையில் ஈடுபட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் என்று இல்லை, மும் பைக்கும் மகாராஷ்ட்ராவுக்கும் தொல்லை கொடுக்கிறார்கள் என்றால், அண்டை மாநில மக்களையும்கூட விட்டு வைக்க மாட்டார் தாக்கரே, அவர்கள் இந்துக்களாக இருந்தாலும்கூட.

'மும்பையில் ஏற்படும் எல்லாப் பிரச் னைகளுக்கும் காரணம், வாஜ்பாய் ஊர்க் காரர்களும் (குஜராத்திகள்), லாலு ஊர்க் காரர்களும்தான் (பிகாரிகள்). அவர்களால் எந்தப் பலனும் இல்லை. குற்றவிகிதம் உயர்ந்ததற்குக் காரணமும் அவர்களே. ஒட்டுமொத்த மும்பையையும் குடிசை யாக்கிவிட்டார்கள். அவர்கள் எல்லோருமே மின்சாரத் திருடர்கள்; தண்ணீர் திருடர்கள். சட்டவிரோதமாக நிலங்களை ஆக்கிரமித்து விட்டார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்த் தால், மகாராஷ்ட்ராவில் இருக்கும் வெளி மாநில மக்கள் அத்தனை பேருமே காலைச் சுற்றிய பாம்புகள். எப்போது வேண்டு மானாலும் கடிப்பார்கள். எச்சரிக்கை!'

தமக்குப் பிடிக்கவில்லை என்றால், தம் மகன், நாட்டின் முதல் குடிமகன் என்றெல்லாம் பார்க்கமாட்டார். வாயில் வந்த வார்த்தைகளால் வெளுத்து வாங்கி விடுவார் தாக்கரே. ஜனாதிபதியாக இருந்த அப்துல் கலாமையே ஒருமுறை நெருப்பு வார்த்தைகளால் விமர்சனம் செய்து அதிர்ச்சி வைத்தியம் அளித்தார் தாக்கரே. எப்படி?

(தொடர்வோம்)



கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. 2003ல் ஆஸ்திரேலியா சென்றது இந்திய அணி. அதற்கு முன்னால் டெண்டுல்கர் தலைமையில் ஆஸி சென்ற இந்திய அணி சொல்ல முடியாதத் துயரங்களை அனுபவித்தது. அப்படித்தான் நடக்கும் என்று 2003லும் நினைக்கப்பட்டது.

ஆளப் பிறந்த

கிரிக்கெட்டில் இரண்டு தொடர்களுக்குத்தான் ரசிகர்கள் ஆவலோடு இருப்பார்கள்.

ஒன்று - இந்தியா Vs பாகிஸ்தான். அடுத்தது, ஆஸ்திரேலியா Vs இங்கிலாந்து.

மூன்றாவதாக ஒன்று உருவாகியிருக்கிறது. இந்தியா Vs ஆஸ்திரேலியா.

சென்ற மாதம் பாகிஸ்தான் அணி இந்தியா வந்தது காரமும் சுவையும் இல்லாத பண்டத்தை உட்கொண்டது போல இருந்தது ரசிகர்களுக்கு. உள்பூசலில் பாகிஸ்தான் அணி சிதிலமடைந்து கிடக்கிறது. எப்படியெல்லாம் நடக்கும் இந்தியா - பாகிஸ்தான் ஆட்டங்கள்! ஆஷஸ் என்று அழைக்கப்படும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்துக்குமான தொடர்களுக்கும் இதே கதைதான். ஆஸ்திரேலிய அணியின் மகத்தான ஆற்றலுக்கு முன்னால், இங்கிலாந்து மண்டியிட நேர்வதால், அந்தப் போட்டிகளிலும் 'நிறம், மணம், திடம்' எதுவும் இல்லை.

வழக்கம்போல ஆஸ்திரேலியா செல்லும்போதெல்லாம் அடி வாங்கிக்கொண்டு வரும் இந்திய அணி. ஆனால், அதே ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்தால், போட்டி சூடு பறக்கும். அப்படியும் ஒரு முறை இந்திய மண்ணில் ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடரை வென்றது. நிலைமை

ஆனால் கங்குலி, ஆஸியின் உத்திகளைக் கடைபிடிக்க ஆரம்பித்தார். வெற்றி அடையாவிட்டால், சாவுதான் என்கிற மாதிரி வெறிகொண்டு ஆடியது இந்திய அணி-குறிப்பாக, இந்திய பேட்ஸ்மேன்கள். எல்லா வீரர்களுமே நினைத்துப் பார்க்காத அளவுக்கு ரன்களைக் குவித்தார்கள். 1 - 1 என்று டெஸ்ட் தொடரைச் சமன் செய்தது. அப்போது தொடர்ந்து பதினாறு டெஸ்ட் மேட்சுகளில் வெற்றி பெற்று உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்திருந்த ஆஸ்திரேலியாவின் முதுகை வளைத்தது இந்தியா.

2007. அதேபோல ஒரு சாதனைக்குத் தயாராக இருந்தது ஆஸ்திரேலியா. சிட்னியில் ஜெயிக்க வேண்டிய மேட்சைக் கோட்டைவிட்டது இந்திய அணி. தொடர்ந்து 16 டெஸ்ட் மேட்ச் வெற்றிகள்.



ச.ந.கண்ணன்

இந்தியா!

அடுத்து ஒன்று ஜெயித்தால், உலக சாதனை. கிரிக்கெட் தோன்றி இத்தனை ஆண்டு காலங்களில் எந்த டெஸ்ட் மேட்ச் அணியும் தொடர்ந்து 17 ஆட்டங்களில் ஜெயித்தது கிடையாது. மீண்டும் ஆஸியின் சாதனைக்கு முட்டுக்கட்டைப் போட்டது இந்தியா. ஒப்புக்கொண்டுவிட்டார் பாண்டிங். 'இந்தியாதான் எங்களுடைய ஒரே எதிரி.'

கடந்த ஐந்து வருடங்களில் இந்திய அணியைப் போல வேறு எந்த அணியும் வெளிநாடுகளில் இவ்வளவு வெற்றிகளை ருசித்தது கிடையாது. இங்கிலாந்தில் தொடர் வெற்றி. அதற்கு முன்னால் மேற்கு இந்தியத் தீவிலும். பாகிஸ்தானில் எப்போது டூர் சென்றாலும் தொடர் வெற்றி இந்தியாவுக்குத்தான். தென் ஆப்பிரிக்காவில்கூட ஒரு டெஸ்ட் மேட்ச் ஜெயிக்க முடிந்தது. என்ன காரணம்? எப்படி இந்திய டெஸ்ட் அணி இவ்வளவு வலுவான அணியாக மாறியது?

(பத்மவிபூஷண்) சச்சின், டிராவிட், லக்ஷ்மண், கங்குலி, சேவாக். இந்த வலுவான வரிசை ஆஸ்திரேலியா தவிர வேறு எந்த அணிக்கும் கிடையாது. டெஸ்ட் மேட்ச் என்பது வாழ்க்கைபோல. அனுபவசாலிகள் மட்டுமே ஜெயிக்க முடியும். இதே டெஸ்ட் தொடரில் ஜாஃபர், யுவ்ராஜ் சிங், டோனி போன்ற இளம் வீரர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கும்ப்ளே, ஹர்பஜன் என்கிற இரு தரமான ஸ்பின்னர்கள் இந்தியாவிடம் மட்டும்தான் உண்டு. ஆஸ்திரேலியாவுக்கு ஒரு ஸ்பின்னர் கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருக்கிறதே! ஆனால், ஆஸியை மிரட்டும் சக்தி கொண்ட முரளி கார்த்திக்குக்கு அணியில் இடம் கிடைப்பது அவ்வளவு சிரமமாக இருக்கிறது எனும்போது திறமைகளைப் புரிந்துகொள்ளலாம்!

எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் விமர்சனங்களும் போட்டிகளும் அதிகம். ஒரு மேட்சில் சரியாக ஆடாவிட்டால், வார்த்தைகளால் அந்த ஆட்டக்காரரைக் காயப்படுத்த டி.வி.க்கு முன்னால் விமர்சகர்கள் திரள்வார்கள். எல்லா உள்ளூர் போட்டிகளிலும் சரியாக ஆடும் கம்பீர், ஆகாஷ் சோப்ரா, பத்ரிநாத் இவர்களையெல்லாம் எங்கு கொண்டு நிரப்புவது என்பது பி.சி.சி.ஐக்குப் பெரிய தலைவலியாக இருக்கிறது. இதனால் இந்திய அணியில் இடம் கிடைக்கும் வீரர்கள் ஒழுங்கு மரியாதையாக ஆடி இடத்தைத் தக்கவைத்துக்கொள்கிறார்கள்.

இன்னும் இரண்டு வருடங்களில் நிலைமை தலைகீழாக மாறலாம். இன்னொரு சச்சின், டிராவிட், கங்குலி, கும்ப்ளேயைத் தேட வேண்டிய நிலைமை வந்துவிடலாம். அதுவரைக்கும் இந்தியாவின் வெற்றிகளையும் விடாமுயற்சியையும் ருசித்துக்கொண்டிருப்போம். ●



எம்.ஜி.கன்னியப்பன்

கேமரா கதை

5

ஆட்டக்காரன்!

கம்ப்யூட்டர் அலுவலக வாசலில் டை கட்டிய இளைஞர்கள், சுடிதார் அணிந்த அழகழகான யுவதிகள் கும்பல் கும்பலாக நின்று பேசிக்கொண்டிருந்தனர். அத்தனையும் இன்டர்வியூவுக்கு வந்த கூட்டம். ராம்ஜிக்குக் கவலை ஒட்டிக்கொண்டது. நிச்சயம் வேலை கிடைக்கும் என்று வரும்போதிருந்த நம்பிக்கை நூல், ஒவ்வொரு இழையாக அறுந்துகொண்டிருந்தது. ஒன்றிரண்டு காலி இடங்களுக்காக இவ்வளவு பேர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. திரும்பிவிடலாமா என்றுகூட நினைத்தான். முதல் சம்பளமே பதினைந்தாயிரம் என்கிறபோது அப்படித் திரும்பவும் மனம் ஒப்பவில்லை.

ராம்ஜி இத்தனை ஆண்டுகளாக ஒரு வேலை தேடிக்கொள்ள வேண்டும் என்று நினைத்ததில்லை. சதா சர்வகாலமும் கிரிக்கெட் பேட்டும் கையுமாக அலைந்தவன். எந்த பாலை எப்படி அடித்தால் சிக்ஸர் ஆகும், பவுண்ட்ரி போகும் என்று பல்வேறு நுணுக்கங்களை அறிந்தவன். சிறிய வயதில் பள்ளிக்கூடம் விட்டதும் பையைக் கடாசிவிட்டு நேரே கிரவுண்டுக்குத்தான் ஓடுவான். இவனைப் பார்த்ததும் சிட்டாம்புட்டிகள் கைத்தட்டிக் குதியாட்டம் போடும். எல்லா பொடிசுகளுமே ராம்ஜியைத் தங்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப் போட்டி போடுவார்கள். பிறகு, கல்லூரி அளவில் நடந்த போட்டிகளில் கப்புகள் வாங்கக் காரணமாக இருந்தான். மாவட்ட அளவிலான பரிசுகள். இப்படிப் படிப்படியாக முன்னேறி, போன ஆண்டு மாநில அளவிலான போட்டியில் கப் வாங்கிக்கொண்டு வந்தது, இவன் தலைமையிலான டீம். பரிசு கொடுக்க வந்த மத்திய அமைச்சர், 'ராம்ஜிக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. அவரோட திறமை மாநில அளவில் மட்டும் சுருங்கிப் போய்விடக்கூடாது' என்று அவனையும் 'கோச்'சையும் பாராட்டிவிட்டுப் போனார்.

இந்நிலையில்தான் அப்பாவின் சட்டென்ற மரணம் தலைகுப்புறக் கவிழ்த்தது. வீட்டுத் தேவைகளுக்கான வருமானம் நின்றது. வீட்டில் முடங்கிக் கிடக்கும் அம்மா, இரண்டு தங்கைகளைக் கட்டிக் கரைசேர்க்க வேண்டிய பொறுப்பு. அதுவுமின்றி தான் காதலிக்கும் சௌமியைத் திருமணம் செய்துகொண்டு லைஃப்பில் செட்டிலாக வேண்டும். அதற்காக திடுதிப்பென்று ஒரு வேலை தேடியே ஆக வேண்டிய கட்டாயம்.

அலுவலக ப்யூன், பத்துப் பத்துப் பேராக அழைத்து உள்ளே அமரவைத்து பின், ஒவ்வொருவராகத் தேர்வு அறைக்குள் அனுப்பி வைத்தார். அப்படி பத்தாவது நபராக வெளியே வந்தாள் அவள். ஒரு நடிகையின் சாயலில் இருந்தாள். அவளை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது ராம்ஜிக்கு. ராம்ஜியைக் கடக்கும்போது அவனை ஒரு தடவை பார்த்துவிட்டுப்

போனாள்.

மூன்று கட்டத்தேர்வும் அன்றே நடந்தது. முதல் கட்டத்தில் பதினைந்து பேரும், இரண்டாம் கட்டத்தில் ஏழு பேரும், இறுதிக் கட்டத் தேர்வுக்காக இரண்டு பேர் மட்டும் தேர்வு செய்யப் பட்டனர். அதில் ராம்ஜியும், அவன்

சொல்லி, இந்த வேலையை விட்டுக் கொடுக்கச் சொல்லிக் கேட்கலாமா என்று எண்ணியவனுக்குத் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. நடப்பது நடக்கட்டும். காத்திருந்தான்.

அவன் நினைத்ததுபோல் இல்லாமல் மோனிஷாவுக்கே வேலை கிடைத்தது. சதிகாரி, ஏதேனும் மாயம் செய்து தனக்கான



எங்கோ பார்த்ததாக நினைத்த அவளும்! இந்த இருவரில் ஒருவருக்கு வேலை நிச்சயம் என்றானது. அந்த ஒரு அதிர்ஷ்ட சாலி யார்? அவன் அவனருகில் வந்தமர்ந் தாள். இடையிடையே இரண்டு தரம் வெளியே சென்று ஃபோன் பேசிவிட்டு வந்தமர்ந்தாள். ஓரக்கண்ணால் ஃபைலைப் பார்த்துப் பெயர் படித்தான். மோனிஷா. இவனிடம் குடும்பச் சூழ்நிலையைச்

வேலையைப் பறித்திருப்பாளோ? உள் ளுக்குள் திட்டித் தீர்த்தான்.

கைக்கெட்டியது வாய்க்கு எட்டாத கதைதான். அலுவலகம் விட்டு வெளியே வந்தான். 'அடுத்த அப்ளிகேஷனை ரெடி பண்ண வேண்டும்' எண்ணியபடி நடந்தான். பின்னால் யாரோ கூப்பிட்டது போல் இருந்தது. திரும்பினான். மோனிஷா அவனை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

அவன் நடையில் வேகம் இருந்தது.

''என்ன ராம்ஜி சார்? வேலை கிடைக்க லேன்னு உடைஞ்சிட்டாப்போல இருக்கு. இந்த வேலை எனக்குக் கிடைச்சதுல சின்ன சதி வேலை இருக்கு.''

''நெனைச்சேன்!'' கடுமை காட்டினான்.

''சும்மா, ஆத்தாவுக்கு ஆஸ்த்துமா, அப்பனுக்கு ஆபரேஷன், அக்காவுக்கு வரதட்சணைன்னு அள்ளிவிட்டேன். உடனே அப்பாய்ன்மெண்ட் ஆர்டரை அடிக்கச் சொல்லிட்டாங்க'' குறும்பாகக் கண் சிமிட்டினாள்.

அவனுக்குள் பொறி பறந்தது. பறித்தது மட்டுமில்லாமல், கொக்கரிப்பு வேறு.


அவன் முகத்தைப் பார்த்தாள். ''திட்டு றாப்புல இருக்கு. திட்டுங்க பரவாயில்லை. உங்க காதலியும், என் ப்ரெண்டுமான சௌமி, உங்களைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கா. ஒரு திறமையான கிரிக்கெட் வீரர் பதினைந்தாயிரம் ரூபாய் சம்பளக் கவருக்குள்ள அடைபடக் கூடாதுன்னுதான் இந்த வேலைய நான் வாங்கிட்டேன். நீங்க வளரணும். மாநிலம் தாண்டி, நம்ம இந்திய டீம்ல சேரணும். சிறந்த பேட்ஸ்மேனா இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்க்கணும். அதுக்கான வயசும், நுணுக்கமும் உங்கக் கிட்ட இருக்கு.

முதல் ஒன்றிரண்டு ஆட்டத் துலயே சிறப்பா விளையாடணும். அப்படி விளையாடினா, தமிழ் நாட்டுக்காரன்னு உங்களை எந்த அரசியலாலும், போர்டால யும் நிராகரிக்க முடியாது. அப்படியே நிராகரிச்சாலும் ஒட்டுமொத்த இந்திய கிரிக்கெட் ரசிகர்களும் குரல் கொடுக்கணும். ஒரு சிறந்த பேட்ஸ் மேனை இந்தியா இழந்துடக்கூடாது. குடும்பத்துக்காக வேலை தேடறேன்னு சொல்லீங்க அதானே. பதினைந்தாயிரம் சம்பளம் வரும். என் தேவைக்குப் பத்தா யிரமே அதிகம்தான். அதனால, உங்க குடும்பத்துக்கும் கொஞ்சம் உதவ முடி யும். நான் வற்புறுத்தல; அவசரத்துக்குத் தேவைப்படும்போது யோசிக்காம என் னைக் கேட்கலாம் நீங்க. கிரிக்கெட்ல ஜெயிச்சா திருப்பித் தாங்க... முன்னப் பின்ன அறிமுகம் இல்லாதவகிட்ட எப் படின்னு யோசிக்காதிங்க ப்ளீஸ். உங் களுக்காக இதைச் செய்யலை. என் இந்திய நாட்டுக்காக விளையாடப்போற வருங்கால வீரருக்குச் செய்யறேன்னு நெனைச்சுக் கறேன்'' என்றவள், கையிலிருந்த ஒரு கவரைக் கொடுத்தாள். ராம்ஜி அதைப் பிரித்துப் பார்த்தான். அதில், 'ஆல் த பெஸ்ட்' என்று பொறிக்கப்பட்ட சின்ன கிரிக்கெட் பேட் இருந்தது. ●



தனுஷ் வாய்ஸ்!

யாரடி நீ மோகினி படத்துல வர்ற ஸ்டில்தான் இந்தக் கதைக்கான படம் பார்த் தது. ஸ்டில்ல உள்ள குறும்புத் தனத்தை சினிமா முழுக்க நீங்க பார்க்கலாம்! இந்த சீன் எடுக்கும்போது அடிச்ச லூட்டியில நயன்தாரா விழுந்து விழுந்து சிரிச்சாங்க. எனக்கு இந்தப் படம் 'திருடா திருடி' மாதிரி இளைஞர்கள் மத்தியில நல்ல நடிகன்னு பேர் வாங்கித் தரும்.



வே. இராமசாமி

14

எல்லைக் கிடாய்

செவக்காட்டுச் சித்திரங்கள்

வெங்கடசாமி நாயக்கர், சந்திரன் தாத்தா தலையாரிப் பெரியப்பா, நடராசத் தேவரு. அய்யாப்பிள்ளை செட்டியார், சிங்காசாரி இப்படி எல்லாருமாச் சேந்து ஆளுக்கொரு திசையில், கொப்பரைக் காதைப் பிடிச்சு, தெருத்தெருவாப் போயி அன்னம் எடுத்தார்கள்.

நெல்லுச்சோறு, சோளக்கஞ்சி, சாமிச் சோறு, கேப்பைக்களி, கம்மங்கஞ்சின்னு வகைக்கு ஒண்ணா கொப்பரையில் விழுது. சின்னப் பயகள்லாம் 'மழைக்கஞ்சி' ஊத்தப் போறாங்கன்னு விவரம் தெரிஞ்சுக்கிட்டு கும்பா, வட்டவை, செம்பு, போணி, தூக்குவாளின்னு கஞ்சி வாங்கிக்குடிக்க, ஏனத்தை எடுத்துக்கிட்டு, இப்பமே கிழமந்தைப் பொட்டலுக்குப் போயி வட்டங் கட்டி உக்காந்துக்கிட்டாங்க.

முக்கியப் புள்ளிங்க அஞ்சாறு கொப்

பரை நிறைய கஞ்சியத் தூக்கிட்டு முன்னால வர, ஊருச்சனம் அத்தனையும் பின்னால கையில ஏனத்தோட வந்தாங்க. வந்ததும், பொட்டல் நடுவில கொப்பரைங்கள வெச்சுத் தண்ணிய ஊத்தி, கஞ்சியக் கரைச்சாங்க. அதுக்குள்ளயும் சனம் நீ, நானுன்னு முட்டிமோதுதுங்க. 'எல்லாரும் அங்கன அங்கன உக்காருங்க'ன்னு பெரிய ஆளுக சத்தம் போட்டாலும் யாரும் கேக்கல. இது சரிப்படாதுன்ட்டு வெங்கடசாமியார் ஏனத்தை வாங்கி மோந்து மோந்து குடுக்கத் தொடங்கிட்டாரு. சனம் வயிறாரக் குடிக்குதுங்க. வெட்கம், பெரிய மனுஷத்தனம் ஏதுமில்லாம எல்லாரும் வாய் ஒழுகக் குடிக்காங்க.

இப்படியே சட்டுன்னு எல்லாக் கொப்பரைக் கஞ்சியையும் கரைச்சுக் குடிச்சிட்டு, எல்லா மக்களும் ஒண்ணாச் சேந்து கைகளைச் சங்கிலி மாதிரிச் சேத்துக்கிட்டு அழுதாங்க. 'ஏ பாவி மேகமே, எறங்கி வர மாட்டியா'ன்னு ஒப்பாரி வெச்சு அழுதாங்க. அவங்கதான் அழுவாங்களான்னு கேக்குற மாதிரி இளவட்டங்க, குமரிப் பிள்ளைய, பெரியாளு, சின்னாளுன்னு இல்லாம எல்லாம் வாயெடுத்து அழுதாங்க. அதைப் பாத்துட்டு சின்னப் பயக நாமளும் அழவுவோம்னு கண்ணுல தண்ணி விடுதாங்க. அந்த அழுகாச்சி ஓலமே மழை பெயுற மாதிரி கேக்குது. இந்தமானிக்கு தொயந்து மூணு நாளைக்குக் கஞ்சியெடுத்து மக்கமாரெல்லாம் மழை கேட்டு அழுதாங்க.



இந்த வழமையத்தான் மழைக் கஞ்சின்னு சொல்வாங்க. இது எல்லாருக்கும் தெரிஞ்ச சங்கதிதான். இதோட சேந்த சாங்கியம் இன்னொண்ணும் இருக்கு. அதுதான் எல்லைக்கிடாய்.

அதாவது ஊர்ல இருக்கிற ஆட்டுக்காரங்கெல்லாம் அவுங்க கெடைல இருந்து ஒரு கிடாய பொதுவுல குடுத்திரணும். அது செம்மறியாட்டுக் கிடான்னாலுஞ் சரி. வெள்ளாட்டுக்கெடான்னாலும் சரி. ஒரு தடவை முந்துன தலைமொறைல ஆட்டுக்காரங்க நீங்குடுக்கமாட்டேன், நாங் குடுக்க மாட்டேன்னு கிரித்தரியம் பிடிச்சுக்கிட்டு எல்லைக்கிடாவுக்கு, கிடாய் ஒதுக்கமாட்டன்ட்டாங்க. பிறகு என்ன? எல்லாக் கிடையிலும் ஆடுக தன்னைப் போல சுருண்டு விழுந்து சாவுதுங்க. எல்லைச்சாமி குத்தமாயிடுச்சு. அதுக்குப் பெறவு திருந்தி ஒழுங்கு மருவாதியா கெடா குடுத்திட்டு வாராங்க.

கெடாய் கெடச்சுட்டாலும் வெள்ளைப் பிள்ளையார்னு ஒண்ணு இருக்கே. அது கெடைக்கணுமே. அந்தக் காலத்துல பஞ்சம் வந்தபோது, பக்கத்து ஊர்கள்ல வெள்ளைப் பிள்ளையாரப் போட்டுப் போயிருவாங்க. அது எந்த ஊரு எல்லை கெடக்கோ அந்த ஊர்ல சென்மத்துக்கும் மழை வராது. போடுததுதான் போடுவாங்க. கண்ணு மறைவா ராத்திரியோடு ராத்திரியா வந்து போட்டுட்டுப் போயிருவாங்க.

வெள்ளைப் பிள்ளையாரைத் தோண்டி, தொடைச்சு, மழைக்கஞ்சி முடிஞ்சு மறுநாள், சாமியாடி தலையில தூக்கிட்டு எல்லைக்குப் போவாங்க. அது பொழுது சாயுற நேரம். பின்னாலே எல்லைக்கிடாய்கள நடத்திக் கூட்டியாருவாங்க.

ஊர் எல்லைக்கு வந்ததும், டக்குன்னு தீப்பந்தத்தை அங்கனவுள்ள சுமைதாங்கிக் கல்லுல கட்டிட்டாங்க. முந்தி எப்பமோ கறி சமைச்ச அடுப்புக் கல்லுக பாதி புதைஞ்சும் புதையாமலும் இருப்பத தோண்டி எடுத்து அடுப்புக் கூட்டுனாங்க. அதுல ஒரு பிரிவு கெடாக்களைப் போட்டுத் தள்ளி, கறிக் கட்டைல வெச்சு

கண்டந்துண்டமா வெட்டுவாங்க. பக்கத்துல எங் கனயோ நரை மண்டிக் கெடந்த கெணத்துல தண்ணியக் கொண்டாந்து ஊத்து வாங்க. கொப்பரைல ஊத்தினாங்க. விறகு எல்லாம் அங்கங்கயே ரெடிபேட்தான்.



ருசியாவது கிசியாவது? எல்லாம் மானாங்கன்னியா நடக்கும். புண்ணியத்துக்குக் கொஞ்சம் மஞ்ச மசாலாவப் போட்டாங்க. எல்லாத்துக்கும் தலைமை தாங்குறது தலையாரிப் பெரியப்பாதான். அந்த இருட்டுக்குள்ள அஞ்சாறு பேட்ரி லைட்டு 'பெரு மகன்களும்' இருந்தாங்க. கறி கொப்பரைல வேகும் வரைக்கும் திட்டுத்திட்டா உக்காந்து, எட்டாம் வருசப் பஞ்சத்துல அப்பிடின்னு பஞ்சம் பத்தின கதைகளைப் பேசிட்டு இருந்தாங்க. இப்படியே பேசப் பேச கறி மாடமடங்கா ரெடியாயிடும்.

சின்னப் பயகளுக்குச் சாறுதான் கிடைக்கும். அதை புர்ர் புர்ர்னு உறிஞ்சிக் குடிப்பாங்க. கறித் துண்டு நழுவி விழுந்தாத்தான் உண்டு. பெரிய ஆளுங்க சவக்குன்னு மெல்லுவாங்க. 'ஏலேய், எவனும் வீட்டுக்குக் கொண்டுட்டுப் போயிறாதீங்கலே, முனி அடிச்சிரும்'னு ஒரு பெருக சொல் லுச்க. கொப்பரை வெறுங் கொப்பரையாப் போனதும், அந்த நட்ட நடுக்காட்டுல அத்தன சனமும் ஒண்ணா கை கோத்து, மழை கேட்டு வானம் பாத்து அழுவாங்க. அதைப் பாத்தா மானம் கரைஞ்சு மழை யாகாதான்னு தோணும்.

அந்த நட்ட நடுக்காட்டுல, அத்தனை சனமும் கைகோத்து, மழை கேட்டு, வானம் பார்த்து அழுவாங்க. அதைப் பார்த்தா வானம் கரைஞ்சி மழையாகாதான்னு தோணும்.

அழுது முடிஞ்சதும் சனங்க ஊருக்குள்ள போயிரும். வெவரமான புள்ளிங்க நல்ல எளவட்டங்களாகச் சேந்து வெள்ளைப் பிள்ளையாரத் தூக்கிட்டு அசலூர்ப் பக்கம் போவாங்க.

இந்த வட்டமும் இந்த மாதிரி போன ஊரு ஆலங்குளம் போனவங்க சிலையை ஒரு துணியச் சுத்திக் கொண்டு போவக் கூடாது? அப்படியே போயிருக்காங்க.

அந்த ஊர்ல எப்படியோ துப்புத் தொலங்கிடுச்சு. மழை யாருக்குத்தான் வேண்டாமப் போவும்? அறுவாக் கம்பு, பாலாக்கம்புன்னு தூக்கிட்டு வெரட்டிருக்காங்க. இவங்க ஓடிப்போயி ஒரு படப்பு மேட்டுல ஒளிஞ்சிக்கிட்டாங்க. அவங்க தேடுதேடுன்னு தேடிப் பாக்காங்க. கிடைச்சாக்க குடல உருவி மாலை போட்ருவாங்க. இவங்களுக்குத் தப்பிக்கறது பிரச்னை இல்ல. வெள்ளைப் பிள்ளையார எங்கிட்டுப் போட? அதாம் பிரச்னை.

படப்பு மேட்டுல மொத்தம் பன்னெண்டு படப்புக. எல்லாம் நிலா வெளிச்சத்துல ஊமையா நிக்கிதுங்க. அதுல ஒரு பெரும் படப்பாப் பாத்து முடிவு பண்ணிப் அதுல அடியைத் தொளைச்சு வெள்ளைப் பிள்ளையார உள்ள திணிச்சிட்டாங்க. பெறவு அலுங்காம, வந்தது எந்த ஊருக் காரங்கன்னு தெரியாதபடிக்கு ஊருக்கு வந்து சேந்துட்டு வீவீன்னு விசிலடிக்காங்க. விசிலுச் சத்தம் கேட்டதும் பிள்ளையாரைக் கொண்டு போனவங்க திரும்பிட்டாங்கன்னு தெரிஞ்சது. அப்ப போது நேரம் வெள்ளங்காட்டி ஆயிருச்சு.

ஆனா, பாவம் வெள்ளைப் பிள்ளையார் புதைஞ்ச படப்பு என்னிக்கு முடிஞ்சு தரை தெரியுதோ, அன்னிக்குத்தான் அவங்க வெவரம் தெரிஞ்சு, எல்லைக்கிடா நடத்தி மழைக்கு வழி பண்ண முடியும்.

(அடுத்த இதழில் முடியும்)



'பரவாயில்லைடா, நான் லெஃப்ட்ல ஆடுறேன்' என்று சின்னப் பசங்களை பெட் மேட்சுக்கு அழைத்துப் பிறகு, 'டேய், லெக் சைட்ல போடா தடா, அதான் அவனுங்க அடிக்கறாங்க இல்லை' என்று பவுலர்களிடம் 'சென்னை 28'-ல் கெஞ்சிய ஷிவாவுக்கு அதுதான் முதல் படம். ஷாக்கர்ஸ் அணியின் கேப்டனாக நடித்த ஷிவா, ரேடியோ மிர்ச்சியின் பிரதான தொகுப்பாளர். இப்போது அதே கூட்டணியில் உருவாகும் 'சரோஜா'விலும் நடிக்கிறார்.

''யுவன்ஷங்கர் ராஜா என்னோட ஃப்ரெண்ட். அவர் மூலமா பிரேம்ஜி நட்பு கிடைச்சது. இவர் அண்ணன்தான் 'சென்னை 28' டைரக்டர் வெங்கட் பிரபு. படம் ஆரம்பிக்கும்போது நான் வெங்கட் பிரபுவைச் சந்திச்சேன். ஏரியாவிட்டு ஏரியா மாறுகிற வேஷத்துக்குத்தான் என்னை நடிக்கச் சொன்னார். ஆனா, எனக்கு ஷாக்கர்ஸ் கேப்டன் கதாபாத்திரம் ரொம்பப் பிடிச்சிருந்தது. படத்துல, காதலிகிட்ட எப்படி கவிதை சொல்லணும்கிறதை, கண்ணாடி முன்னாடி நின்னு சொல்லிப் பார்க்கற மாதிரி ஒரு சீன் இருக்கும். அந்தக் கேவலமான கவிதையை நானே எழுதி நடிக்கக் காண்பிச்சேன். வெங்கட் பிரபு ரொம்ப ரசிக்க, எனக்கு அந்த கேரக்டரையே கொடுத்துட்டார்'' என்றவர்' மேலும் 'சென்னை 28' அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

'மச்சான், இப்படி நடி, அப்படி நடின்னு நான் சொல்லித் தர மாட்டேன். சீனுக்கு ஏத்த

- நெகிழும் ஷிவா

"கமல் சொன்ன எக்ஸலென்ட்!"

மாதிரி நல்லா நடிக்க வேண்டியது உன் பொறுப்பு'ன்னு சொல்லிடுவார் வெங்கட் பிரபு. நாம என்ன சொன்னாலும் நல்லாயிருந்தா எத்துப்பார். படத்தோட ஆரம்பக் காட்சியில் ஸ்கூல் பசங்கிட்ட கலாட்டா பண்ற ஒரு காட்சி வரும். 'இரு, உன் அப்பாவுக்கு இப்பவே ஃபோன் பண்றோம்'னு என் ஃபோனிலிருந்து ஒரு கால் பண்ணுவேன். 'அவுட்கோயிங் ஃபெசிலிடி ஈஸ் நாட் அவைலபிள் இன் திஸ் டெலிஃபோன்'னு ரிக்கார்டட் வாய்ஸ் கேட்கும். இந்த ஐடியாவை ஷாட் எடுக்கும்போது நான் சொன்னேன். வெங்கட்டுக்கு இந்த ஐடியா ரொம்பப் பிடிச்சுப் போய் சீன் நடுவுல சேர்த்துட்டார். படத்துல கிரிக்கெட் ஆடற பசங்களுக்கும் நல்லா கிரிக்கெட் ஆட வரும். 'என்ன கொடுமை சார்'னு சொல்லி அதகளம் பண்ணின பிரேம்ஜி ஆக்சுவலா நடிக்கவேயில்லை. ஏன்னா, அவருக்குத்தான் கிரிக்கெட் விளையாடவே தெரியாது. படத்துல வர்ற மாதிரி நிஜத்துலயும் அவருக்கு கேட்ச் பிடிக்கத் தெரியாது.

ஃப்ரெண்ட் தங்கச்சியை லவ் பண்ணினதுக்காக, நான் என் ஃப்ரெண்ட் கால்ல விழுந்து கதறுகிற காட்சி நிஜமான தெருவுல எடுக்கப்பட்டதுதான். தெருவுல நடந்துபோனவங்க எல்லோரும் கேமராவுல பதிவானாங்க. அந்தக் காட்சி படமாக்கறதுக்கு முன்னாடி நான் ஆயிரம் முறையாவது கடவுளை வேண்டியிருப்பேன். நல்லவேளையா ஒரே ஷாட்டுல ஓ.கே. ஆச்சு. ஷாட் முடிஞ்சதும் வெங்கட் பிரபு கண்கள்ல கண்ணீர் வந்துருச்சு. நூறாவது நாளின்போது படம் பார்த்த கமல் எங்கிட்ட வந்து எக்ஸலென்ட்'னு பாராட்டினார். எனக்குக் கிர்'னு ஆயிடுச்சு'' என்று பேசும் ஷிவாவின் பர்சனல் வாழ்க்கை படத்தைவிட



சுவாரஸ்யமாக இருக்கிறது.

''நான் பத்தாம் வகுப்பைக்கூடத் தாண்டாதவன். கட்டுப் போட்டும் படிப்பு ஏறாத என்னை வெச்சுட்டு என்ன பண்றதுன்னு ஒரு கட்டத்துல வீட்ல ரொம்ப முழிச்சாங்க. நான் தொடர்ந்து நாடகங்கள்ல நடிச்சுட்டு இருந்தேன். நல்லவேளை ரேடியோ மிர்ச்சியில என் படிப்பைப் பார்க்காம, என் குரலை மட்டுமே ஒரு தகுதியா நினைச்சு வேலை கொடுத்துட்டாங்க. இப்போ மூணு வேளையும் நிம்மதியா வீட்ல சாப்பிடுறேன். சினிமாவுல அடுத்தடுத்து சாதிக்க ரெடியா இருக்கேன். இதோ 'சென்னை-28' மாதிரியே 'சரோஜா'வும் பட்டையைக் கிளப்புற படமா இருக்கும். சமீபத்துல அந்த கதை கேட்டேன், அதுல ஒரு கதை கேட்கும்போதே நல்லா தூங்கிட்டேன். நிச்சயம் போரடிக்காத ஒரு கதையில, ஹீரோவா என்னை எல்லோரும் பார்க்கத்தான் போறீங்க.''

- சநுகன்




தியானம்

மனசு சுத்தமாவதற்காக, பழைய பாவ கர்மப் பலனைத் தாங்கிக்கொள்வதற்காக, புதிய பாவம் செய்யாமல் இருப்பதற்காக, எல்லோரும் முடிந்த மட்டும் தியானம் செய்ய வேண்டும். உறுதியான சங்கல்பம் இருந்தால், காலம் கிடைக்காமல் போகாது. அநாவசிய வம்பிலும், செய்தித்தாள் விமர்சனத்திலும் செலவாகிற நேரத்தை மட்டுப்படுத்தினால், நித்திய சிரேயஸைத் தருகிற தியானத்துக்கு வேண்டிய அவகாசம் நிச்சயம் கிடைக்கும். தியானம் செய்வதே வாழ்க்கையின் முதலான காரியம் என்று கருத வேண்டும். ஐஸ்வரியம் இருந்தாலும் தாரித்திரியம் வந்தாலும், கஷ்டம் வந்தாலும் சுகம் ஏற்பட்டாலும், ஆரோக்கியம் இருந்தாலும் வியாதி வந்தாலும் எப்போதும் எத்தனை நாழிகை முடியுமோ அவ்வளவுக்குத் தியானம் செய்ய வேண்டும்.

நாம் செய்வதோடு நம் பழக்கத்துக்கு உட்பட்டவர்களையும் தியானம் செய்யும்படிச் சொல்ல வேண்டும். செய்யவில்லை என்று கோபித்துக்கொள்ளக் கூடாது. அன்போடு அவர்களுக்குப் படும்படிச் சொல்ல வேண்டும். அன்போடு சொன்னால், எப்படிப்பட்ட மனமும் கரையும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு



ஈரோடு தமிழன்பன்

ஒரே ஒரு துளியால்
மழை என்னைக்
கண்டுபிடித்துவிட்டது
மண்ணின் கர்ப்பமாக
இருந்தேன் அப்போது

ஒரே ஒரு
நட்சத்திரத்தால்
இருள் என்னைத்
திறந்து வைத்தது
சூரிய விதையிலிருந்து
அப்போது
வெளி வந்துகொண்டிருந்தேன்

ஒரே ஒரு பூவால்
காலம் வசந்தத்தை
நியமனம் செய்தது என்னுள்
அப்போது
கனவுகளின்
காதல் ஒப்பந்தமாக
இருந்தேன்

ஒரே ஒரு விரலால்
தொட்டுவிட்டது காற்று என்னை
அப்போது
எழிசையின் மௌன உதடுகளாக
இருந்தேன்

ஒரே ஒரு சொல்லால்
கவிதை
தன்னைப் பெற்றெடுத்து என்னுள்
அழகின் யாத்திரை
தேசமாக இருந்தேன்
அப்போது

ஒரே ஓர் ஆசையால்
வாழ்க்கை
நெருப்பு நிலையம்
நிறுவியது என்னுள்
அப்போது
மரணத்தின் ஆழத்தை
அளவெடுத்துக்
கொண்டிருந்தேன்

அப்போது நான்!

18. பராந்தகபுரத்தில்

சூன்யமான அந்த மகேந்திர மண்டபத்தை பொன்னன் உள்ளும் புறமும் பல முறை சுற்றிச் சுற்றித் தேடினான். மகாராஜா எப்படி மாயமாய்ப் போயிருப்பார் என்று சிந்தனை செய்தான். நேற்று சாயங்காலம் காட்டு வெள்ளத்தில் கரை சேர்த்தது முதல் நடந்தனவெல்லாம் ஒரு வேளை கனவோ என்றுகூட அவனுக்குத் தோன்றியது. இதற்கிடையில் வைத்தியனும் வண்டிக்காரனும் அவனைத் தொந்தரவு செய்யத் தொடங்கினார்கள். தன்னிடம் ஆபத்து காலத்தில் செலவுக்காக வைத்திருந்த பொற்காசுகளில் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்து அனுப்பினான்.

இளவரசருக்கு ஜுரம் முற்றி, ஜன்னியின் வேகத்தினால் எழுந்து ஓடிப் போயிருப்பாரோ என்று பொன்னன் மனத்தில் தோன்றியபோது, பகீர் என்றது. அவனும் பித்தம் கொண்டவனைப்போல் அங்குமிங்கும் அலையத் தொடங்கினான். குடுகுடுவென்று நதிக்கரைக்கு ஓடுவான். மறுபடியும் மகேந்திர மண்டபத்துக்கு வந்து ஆசையுடன், நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொள்ள, உள்ளே எட்டிப் பார்ப்பான். மனம் கலங்கியிருந்தபடியால், இன்னது செய்கிறோமென்று தெரியாமல் விக்கிரமன் படுத்திருந்த வைக்கோலை எடுத்து உதறுவான். பிறகு வெளியிலே வந்து, உறையூர்ச் சாலையோடு கொஞ்ச தூரம் போவான்; மறுபடியும் திரும்பி வருவான்.

இப்படி ஒரு தடவை அவன் திரும்பி மண்டபத்தை நோக்கி வந்தபோது, மண்டபத்திலிருந்து சற்று தூரத்திலிருந்த ஒரு பெரிய இலுப்ப மரத்துக்குப் பின்னால் ஒரு உருவம் மறைவதைக் கண்டான். அது ஒரு சித்திரக் குள்ளனின் வடிவமாகத் தெரிந்தது. கொல்லி மலையில், அருவிப் பாதையில் தான் அன்று பார்த்த பயங்கர உருவங்கள் பொன்னனுக்கு ஞாபகம் வந்தன. நேற்றிரவு இருளில் நடந்த சம்பாஷணையும் நினைவு வந்தது. 'ஓஹோ! மகாராஜா நரபலிக்காரர்களின் கையிலே தான் அகப்பட்டுக்கொண்டார்' என்று எண்ணியபோது, பொன்னனுக்கு வந்த ஆத்திரத்துக்கும் துயரத்துக்கும் அளவேயில்லை. இந்த ஆத்திரத்தையெல்லாம் அந்தக் குள்ளன் மேல் காட்டிவிடுவது என்ற நோக்கத்துடன் பொன்னன் இலுப்ப மரத்தை நோக்கி வேகமாய்ப் பாய்ந்து சென்றான். தன்னைப் பிடிக்க வருகிறான் என்று தெரியாமல் மறைந்து நின்ற குள்ளன் மேல், திடீரெனப் பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இரண்டு குலுக்குக் குலுக்கினான்.

முதலில் சற்றுத் திகைத்த குள்ளன், விரைவில் சமாளித்துக்கொண்டு, ''என்ன அப்பா! என்ன சமாசாரம்? எதற்காக இவ்வளவு ஆத்திரம்?'' என்று கேட்டான்.

''அடே குள்ளா! மகாராஜா எங்கே?'' என்று பொன்னன் அலறினான்.

அமரர் கல்கி

பார்த்திபன்

''மகாராஜாவா? அது யாரப்பா மகா ராஜா?''

உடனே பொன்னனுக்குத் தன்னு டைய தவறு ஞாபகம் வந்தது. உதட்டைக் கடித்துக்கொண்டு, ''அந்த மண்டபத்தில் படுத்திருந்தவர் எங்கே?'' என்று கேட் டான்.

குள்ளன் தன்னுடைய இடுப்புத் துணி யின் மடியை அவிழ்த்து உதறினான். பொன்னனைக் கேலியாகப் பார்த்து, ''ஐயையோ! என் மடியிலே வைத்திருந் தேன். காணோமே!'' என்றான்.

பொன்னனுக்கு இந்தக் கேலி ரசிக் காமல் குள்ளனை அடிப்பதற்காகக் கையை ஓங்கினான். துடுப்புப் பிடித்து வைர மேறிய அந்தக் கையின் அடி குள்ளன் மேல் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக் குமோ, தெரியாது. ஆனால், அதற்குள்ளே குள்ளன் உடம்பை ஒரு நெளி நெளித்து பொன்னனுடைய பிடியிலிருந்து விடு வித்துக்கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மறுகணம் மாயமாய் மறைந்தான்.

பொன்னன் அளவிட முடியாத கோபத்துடன் அங்குமிங்கும் ஓடினான். இதற்குள் இருட்டிவிட்டபடியால் பத்தடி தூரத்துக்கு மேல் கண் தெரியவில்லை. மேலும், அந்த இடத்தில் நாலாபுறமும் புதர்களாயிருந்தன. எனவே குள்ளனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மிக்க மனச் சோர்வுடன் பொன்னன் திரும்ப யத் தனித்தபோது, திடீரென்று அந்த இலுப்ப மரத்தின் மேலேயிருந்து 'ஊ' என்று ஆந்தை கத்துவது போல் ஒரு குரல் கேட் டது. பொன்னன் திகிலுடன் மேலே அண்ணாந்து பார்த்தான். அடர்ந்த மரக் கிளையில் இருண்ட குள்ள வடிவம் காணப்பட்டது. இன்னொரு தடவை 'ஊ' என்று அழகு காட்டுவதுபோல் அவ்வு ருவம் கூவிற்று.

பொன்னனுக்கு அப்போது வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அந்த மரத்தை வேரோடு பிடுங்கிச் சாய்த்து விடலாம் என்று எண்ணினான். அப்போது குள்ளன், ''அடே புத்தி யற்றவனே! மகா பத்திரகாளியின் பக் தனை உன்னால் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான்.

பொன்னனுடைய மனத்தில் இப் போது ஒரு யுக்தி தோன்றியது. அதைப் பற்றி அவன் யோசித்துக்கொண்டிருக்கும் போதே குள்ளன், ''அடே முரடா! நீயும் மகாகாளியின் பக்தன் ஆகின்றாயா? உன் கஷ்டங்கள் எல்லாம் நீங்கும்'' என்றான்.

''என்னையா காளி பக்தனாகச் சொல் கிறாய்?'' என்று பொன்னன் சிரித்தான்.

''ஏன்டா சிரிக்கிறாய்? ஜாக்கிரதை! காளியின் கோபத்துக்கு ஆளாவாய்!''

அப்போது பொன்னன், ''நான் சேர்ந்து விட்டேன், அப்பா! சேர்ந்துவிட்டேன். ஆனால், என்ன பிரயோசனம்? கபால





பைரவர் எனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றத் தவறிவிட்டேனே! ஐயோ, அவருக்கு என்ன சொல்வேன்?'' என்றான்.

அப்போது குள்ளன் வியப்புடன், ''அப்படியா! என்ன கட்டளையிட்டிருந்தார்?'' என்று கேட்டான்.

''இந்த மண்டபத்தில் படுத்திருந்தவனைப் பத்திரமாய்க் கொல்லி மலைக்குக் கொண்டு வரச்சொன்னார். நேற்று ராத்திரி இந்த இடத்தில்தான் கட்டளை இட்டார். ஐயோ! தவறிவிட்டேனே!'' என்று பொன்னன் அழுகிற குரலில் கூறினான்.


''அடடா! முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா? நீ வருவதற்குச் சற்று முன்னால், காஞ்சிச் சக்கரவர்த்தியின் மகனும் மகளும் இந்த வழியே போனார்கள். அவர்கள் அந்த மண்டபத்தின் அருகில் நின்றார்கள். மண்டபத்திலிருந்து ஒருவனை எடுத்துக்கொண்டு வந்து பல்லக்கில் ஏற்றிக்கொண்டார்கள். அவன் யார் என்று எனக்குத் தெரியவில்லை, உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வி பொன்னன் காதில் விழவில்லை. ஏனெனில், அவன் வைத்தியனையும் கட்டை வண்டியையும் அழைத்து வந்தபோது, எதிரில் குதிரை பல்லக்கு முதலிய ராஜ பரிவாரங்கள் வருவதைக் கண்டு ஒதுங்கி நின்றான். குதிரை மேல் குந்தவி தேவியைக் கண்டதும், அவளுடைய கண்ணில் பட்டுவிடாமல் வண்டியின் பின்னால் நன்றாய் மறைந்துகொண்டான். பல்லக்கை அவன் கவனிக்கவில்லை. இப்போது அதெல்லாம் பளிச்சென்று ஞாபகம் வந்தது. குள்ளன் சொல்வது உண்மையாயிருக்கலாமென்று தோன்றிற்று.

''ஏனப்பா மௌனமாயிருக்கிறாய்! என்ன யோசிக்கிறாய்?'' என்று குள்ளன் மரத்தின் மேலிருந்து கேட்டான்.

பொன்னன் அவனைப் பார்த்து, ''என்ன யோசிக்கிறேனா? உன்னை எப்படி காளிக்குப் பலி கொடுப்பது என்றுதான் யோசிக்கிறேன்'' என்று கூறி, கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து, அவன் மேல் வீசி எறிந்தான்.

குள்ளன் அப்போது முன்னம் விக்கிரமன்





கத்தியை ஓங்கியவுடன் செய்ததைப் போல் வாயைக் குவித்துக்கொண்டு, தீர்க்கமான ஒரு கூச்சலைக் கிளப்பினான். அந்தப் பயங்கரமான ஒலியைக் கேட்டதும் பொன்னனுக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலெடுத்தது. அங்கிருந்து அவன் ஒரே ஓட்டமாக உறையூர்ச் சாலையை நோக்கி ஓடத் தொடங்கினான்.

அந்தக் காட்டாற்றங்கரையிலிருந்து சுமார் காத தூரத்திலிருந்த பராந்தகபுரம் என்னும் ஊரை பொன்னன் அடைந்த போது, இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலிருக்கும். ஆனால், அங்கே தீவர்த்தி வெளிச்சமும் வாத்திய முழக்கமுமாய் ஏக தடபுடலாகயிருந்தது. பொன்னன் என்ன வென்று விசாரித்தபோது, சக்கரவர்த்தியின் திருக்குமாரரும், திருக்குமாரியும் விஜயம் செய்திருப்பதாகவும், அவர்களுக்கு வரவேற்பு உபசாரங்கள் அவ்வூர்க் கோயிலில் நடந்துகொண்டிருப்பதாகவும், அதற்காக ஊருக்கு வெளியே கூடாரங்கள் அடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிந்து கொண்டான்.

அவர்கள் ஆலயத்தில் இருக்கும் சமயத்தில் தன்னுடைய சோதனையை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்த இடத்துக்கு பொன்னன் விரைந்து சென்றான்.

ஊரைச் சேர்ந்தாற்போல் ஒரு மைதானத்தில் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. யுவராஜா மகேந்திரனும் குந்தவி தேவியும் கோயிலுக்குப் போயிருந்தபடியால் இங்கே அவ்வளவு ஜனக் கூட்டம் இல்லை. சில காவற்காரர்கள் மட்டும் அங்குமிங்கும் நின்றார்கள். பணிப் பெண்களும் ஏவலாளர்களும் கூடாரங்களுக்குள் படுக்கை விரித்தல் முதலிய காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். மைதானத்தின் ஒரு புறத்தில் இளுவைச் செடிகளால் ஆன உயரமான வேலி அமைந்திருந்தது. அந்த வேலி ஓரமாக பொன்னன் சென்றான். ஓரிடத்தில் இரண்டு பணிப்பெண்கள் வம்பு பேசிக்கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது.

''ஏண்டி, மரகதம்! திருவெண்ணெய் நல்லூரில் போய் இரவு தங்குவதாக அல்லவா ஏற்பாடு இருந்தது? இங்கே எதற்காகத் தங்கியிருக்கிறோம்?'' என்று ஒருத்தி கேட்டாள்.

''உனக்குத் தெரியாதா என்ன? வைத்தியர் சொன்னாராம், நோயாளிக்கு அமைதி வேண்டும் என்று. பல்லக்கிலே நெடுந்தூரம் தூக்கிக்கொண்டு போனால், அவரது உடம்பு நெகிழ்ந்து கொள்ளலாம் என்றாராம். அதற்காகத்தான்...''

''ஆமாண்டி, அது யாரடி அப்பேர்ப்பட்ட நோயாளி? அவனுக்காக இவ்வளவு தடபுடல் படுகிறதே?''

''அவன் செண்பத் தீவிலிருந்து வந்த இரத்தின வியாபாரியாம். தேவசேனன் என்று பெயராம். மாமல்லபுரத்து வீதியில் நமது தேவியைப் பார்த்தானாம். உறையூரில் இருக்கும் தன் தாயாரைப் பார்க்கப் போவதாகச் சொன்னானாம். அவன் அந்த ஆற்றங்கரை மண்டபத்தில் அநாதையாய்க் கிடக்கவே, தேவி அவனை நம்மோடு உறையூருக்கு அழைத்துக்கொண்டு போகலாமென்று பல்லக்கில் ஏற்றிக்கொண்டாள்.''

''அடி மரகதம்! இதில் ஏதோ மர்மம் இருக்கிறதடி!''



''என்னடி மர்மம்!''

''கட்டாயம் இருக்கிறது. இல்லா விட்டால் வழியில் அநாதையாய்க் கிடந்தவனுக்கு இப்படி இராஜ வைத்தியமும் இராஜோபசாரமும் நடக்காதடி மரகதம்!''

''சீச்சீ...''

''அவனை இந்த ஊரிலேயே விட்டு விட்டு வைத்தியம் பார்த்து அனுப்பி வைக்கச் சொல்லலாமல்லவா? நம்மோடு எதற்காகப் பல்லக்கில் ஏற்றி அழைத்துப் போக வேண்டும்?''

''ஆமாண்டி, தங்கம்! அதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால், உனக்குச் சொல்ல மாட்டேன்.''

''சொல்லாமற் போனால், நான் உன்னோடு பேசப் போவதில்லை.''

''இல்லையடி, கோபித்துக்கொள்ளாதே. இங்கே கிட்ட வா, சொல்லுகிறேன். யார் காதிலாவது விழப் போகிறது!''

''சொல்லு பின்னே...''

''உறையூர் இராஜகுமாரன் செண்பகத் தீவில்தான் இருக்கிறானாம். அவனை நம் தேவி காஞ்சி நகர் வீதியிலே பார்த்ததும், அவனை மன்னிக்கும்படி சக்கரவர்த்தியிடம் வேண்டிக்கொண்டதும் தெரியுமோ, இல்லையோ? அந்த இராஜகுமாரனைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ளலாமென்றுதான் பின்னோடு இந்த இரத்தின வியாபாரியை அழைத்து வருகிறார்.''

''ஓகோ! அப்படியானால் உறையூருக்குப் போன பிறகும் இவன் நம்முடன் வசந்த மாளிகையிலேதான் இருப்பானாக்கும்?''

''ஆமாம்.''

''ஏண்டி மரகதம், அந்த இரத்தின வியாபாரியை நீ பார்த்தாயாடி?''

''பார்க்காமலென்ன? நான்தானே அவனுக்கு மருந்து கொடுக்கிறேன்!''

''அவன் இளம் வயதாமேடி?''

''ஆமாம்; அதனாலென்ன?''

''ரொம்ப அழகாயிருக்கிறானாமே? முகத்தில் களை சொட்டுகிறதாமே?''

''அதற்காக...''

''எனக்கென்னமோ மரகதம், கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. அப்படிப்பட்டவனை நமது தேவி தன் பக்கத்தில்...''

''அடி பாவி! தேவியைப் பற்றி ஏதாவது சொன்னாயோ, உன் நாக்கைச் கட்டு விடுவேன்!''

''சண்டாளி! தேவியைப் பற்றி நான் என்னடி சொன்னேன்?''

''ஏதோ சொல்ல ஆரம்பித்தாயே!''

''சீ! தேவியைப் பற்றிச் சொல்வேனாடி? அப்படிப்பட்ட இளம் ரூபவானுக்குப் பக்கத்தில் உன்னைக் கொண்டு போய் விட்டு மருந்தும் கொடுக்கச் சொன்னால், நீ இலேசுப்பட்டவளாடி? பெரிய மாயக்காரியாச்சே! வேறு ஏதாவது மருந்து கொடுத்து விட்டாயானால்... ஐயையோ! கிள்ளாதேடி...!''

இப்படிப் பேசிக்கொண்டே பணிப் பெண்கள் இருவரும் வேலி ஓரத்திலிருந்து அப்பால் போய்விட்டார்கள்.

பொன்னன் மேற்கண்ட சம்பாஷணையில் ஒரு வார்த்தை விடாமல் மிகவும் கவனமாய்க் கேட்டான். அவன் மனத்தில் வெகுகாலமாக அறிந்திராத மகிழ்ச்சி உண்டாயிற்று. இன்னும் கொஞ்ச தூரம் வேலி ஓரமாகப் போனான். ஒரு கூடாரத்தில் கொஞ்சம் கலகலப்பாயிருந்தது. அங்கே வேலியைச் சற்று விலக்கிக் கொண்டு உற்று நோக்கினான். தீவர்த்தி

பொன்னனிடம், ''அடே முரடா! நீயும் மகாகாளியின் பக்தன் ஆகின்றாயா? உன் கஷ்டங்கள் எல்லாம் நீங்கும்'' என்றான் குள்ளன்.

வெளிச்சத்தில், கட்டிலில் விக்கிரமன் படுத்திருப்பதும், பக்கத்தில் வைத்தியர் உட்கார்ந்து கையைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு பொன்னன் அங்கிருந்து திரும்பினான்.

19.பொன்னனின் சிந்தனைகள்

பொன்னன் பராந்தகபுரத்தின் வீதியில் போய்க்கொண்டிருந்தபோது, எதிரில் இராஜ பரிவாரங்கள் வந்துகொண்டிருப்பதைக் கண்டு ஒதுங்கி நின்றான். பல்லக்கில் அமர்ந்திருந்த குந்தவி தேவியைத் தீவர்த்தி வெளிச்சத்தில் பார்த்தான். இதற்கு முன் அவன் மனத்தில் என்றும் தோன்றாத பக்தியும் மரியாதையும் அவளிடம் அவனுக்கு உண்டாயிற்று. தெய்வீக சௌந்தரியம் பொருந்திய இந்த தேவியின் உள்ளமும் தெய்வத்தன்மை கொண்டதாக வல்லவா இருக்கிறது? வழியில் அநாதையாய்க் கிடந்தவனைத் தூக்கி தன்னுடைய பல்லக்கில் ஏற்றிக்கொண்டு வருவதற்கு எவ்வளவு கருணை, தயாளம், பெருந்தன்மை வேண்டும்?

அன்றிரவு பொன்னன் அவ்வூர்க் கோயில் பிராகாரத்தில் படுத்துக்கொண்டே மேலே செய்ய வேண்டியதைப் பற்றிச் சிந்தனை செய்தான். இளவரசரோ சரியான சம்ரக்ஷணையில் இருக்கிறார். குந்தவிதேவியைக் காட்டிலும் திறமையாக அவரைத் தன்னால் கவனிக்க முடியாது. இளவரசர் எங்கே போக விரும்பினாரோ அவ்விடத்துக்கே குந்தவிதேவி அவரை அழைத்துப் போகிறார். ஏதோ சோழ வம்சத்தின் குல தெய்வமே இவ்விதம் ஏற்பாடு செய்ததென்று சொல்லும்படி எல்லாம் நடந்திருக்கிறது. எப்படியும் இளவரசருக்கு உடம்பு நன்றாய் குணமாகச் சில தினங்கள் ஆகும். அதுவரைக்கும் அவரைத் தான் பார்க்கவோ, பேசவோ சௌகரியப்படாது. பின்னர், அவருக்கு உடம்பு குணமாகும் வரையில் தான் என்ன செய்வது? பின்னோடு தொடர்ந்து போவதினாலோ, உறையூருக்குப் போய் உட்கார்ந்திருப்பதினாலோ என்ன பிரயோஜனம்? அதைக் காட்டிலும் ராணி அருள்மொழி தேவியை விடுதலை செய்ய வேண்டிய காரியத்தைப் பார்ப்பது நலமல்லவா? இதற்கு சிவனடியாரைப் போய்ப் பார்த்து, அவருடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். அருள்மொழி தேவியைப் பற்றி ஏதாவது துப்பு தெரிந்தவுடன், தம்மிடம் வந்து தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார். தம்மைச் சந்திக்க வேண்டிய இடத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். மாமல்லபுரத்துக்குச் சமீபத்தில் அடர்ந்த காட்டுக்குள் மறைந்திருக்கும் சிற்பியின் வீட்டைக் கண்டுபிடிக்கச் சொல்லியிருக்கிறார். அங்கே போய் அவரைச் சந்தித்து எல்லா விஷயங்களையும் சொல்லி, அவருடைய யோசனைப்படி நடப்பதுதான் உசிதம் என்று தீர்மானித்தான்.



மறுநாள் காலையில் இராஜ பரிவாரங்கள் பராந்தகபுரத்தை விட்டுக் கிளம்பி உறையூர்ச் சாலையில் போவதைத் தூர இருந்து பொன்னன் பார்த்து, 'பகவானே! எங்கள் இளவரசரைக் காப்பாற்று; நான் மாமல்லபுரத்திலிருந்து திரும்பி வருவதற்குள் அவர் உடம்பு பூரணமாய்க் குணமாகிவிடவேண்டும்!' என்று மனதுக்குள் வேண்டிக்கொண்டான். பரிவாரங்கள் மறைந்ததும், எதிர்த்திசையை நோக்கி நடக்கலானான்.

அவனுடைய கால்கள் மாமல்லபுரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதிலும், உள்ளம் மட்டும் இளவரசர் படுத்திருந்த பல்லக்குடன் உறையூரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

குந்தவி தேவியின் பராமரிப்பில் இளவரசர் இருப்பதினால் ஏற்படக்கூடிய அபாயம், அவனுக்கு அடிக்கடி நினைவு வந்துகொண்டிருந்தது. பல்லக்கில் படுத்திருக்கும் நோயாளி உண்மையில் சோழ நாட்டு இளவரசர் என்பதை குந்தவி அறிந்தால் என்ன ஆகும்? ஜுர வேகத்தில் இளவரசர் பிதற்றும்போது அந்த உண்மை வெளியாகிவிடலாமல்லவா? அல்லது வசந்த மாளிகையில் அவர் நல்லுணர்வு பெற்றதும், திடீரென்று பழைய இடங்களைப் பார்க்கும் வியப்பினால் தாம் இன்னார் என்பதை வெளியிட்டு விடலாமல்லவா? அதனால், ஒரு வேளை ஏதேனும் விபரீதம் விளைந்து விடுமோ?

அந்த வீட்டுக்குள் இருந்து, சிவனடியார் வெளியே வந்து புன்னகையுடன் பொன்னனை வரவேற்றார்!

குந்தவி தேவிக்கு உண்மை தெரிந்தால் அவளுடைய தமையனுக்கும் தெரிந்துதான் தீரும். பிறகு, சக்கரவர்த்திக்கும் தெரியாமலிராது. சக்கரவர்த்தியினால் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவர் அல்லவா இளவரசர்? அதை மீறிப் பொய் வேஷத்தில் வந்ததற்குச் சிட்சை மரணமேயல்லவா?

ஆனால், கடவுள் அருளால் அப்படியெல்லாம் ஒன்றும் நேராது என்று பொன்னன் தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டான். குந்தவி தேவிக்கு ஒரு வேளை உண்மை தெரிந்தால், அவர் இளவரசரைக் காப்பாற்றவே முயல்வார். முன்னம், தேசப் பிரஷ்ட தண்டனை விதிக்கப்பட்டபோதே அவருக்காக மன்னிப்புக் கோரி மன்றாடியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமே? அதைப் பற்றி சிவனடியார் அருள்மொழி ராணியிடம் எவ்வளவெல்லாம் சொன்னார்...?

சிவனடியாரையும் குந்தவி தேவியையும் பற்றிச் சேர்ந்தாற்போல் நினைத்ததும், பொன்னனுக்கு நேற்றிரவு மகேந்திர மண்டபத்தின் வாசலில் நடந்த சம்பாஷணை நினைவு வந்தது. மனத்தில் இன்னதென்று சொல்ல முடியாத கவலையும் திகிலும் உண்டாயின. சிவனடியாரைப் பிடித்துக்கொண்டு வரும்படி குந்தவி தேவி மாரப்ப பூபதிக்குக் கட்டளையிட்டிருக்கிறாராமே? இது எதற்காக?

அந்த சிவனடியார்தான் யார்? அவர் உண்மையில் உத்தம புருஷர்தானா? அல்லது கபட சந்நியாசியா? சோழ குலத்துக்கு அவர் உண்மையில் சிநேகிதரா? அல்லது சிநேகிதர் போல் நடிக்கும் பகைவரா? இளவரசர் திரும்பி வந்திருப்பது பற்றியும், இப்போது குந்தவி தேவியின் பராமரிப்பில் வசந்த மாளிகைக்குப் போயிருப்பது பற்றியும் அவரிடம் சொல்லலாமா, கூடாதா? ஐயோ அதையெல்

லாம் பற்றி இளவரசரிடம் கலந்து பேசாமற் போனோமே என்று பொன்னன் துக்கித்தான்.

இன்னொரு விஷயம் பொன்னனுக்கு வியப்பை அளித்தது. இளவரசரை ஒற்றர் தலைவன் ஆபத்திலிருந்து விடுவித்த பிறகு அன்றிரவு காட்டில் ஒரு சிற்பியின் வீட்டில் தங்கியதாக அல்லவா சொன்னார்! தன்னை சிவனடியார் வந்து காணச் சொல்லியிருப்பதும் காட்டின் நடுவில் உள்ள சிற்பியின் வீட்டில்தானே? அடையாளங்களைப் பார்த்தால் இரண்டும் ஒரே இடமாகவல்லவா தோன்றுகிறது? ஒற்றர் தலைவனுக்கும் சிவனடியாருக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

சிவனடியார் ஒரு மகான் என்ற எண்ணம் பொன்னனுக்குப் பூரணமாக இருந்தது. அவர் தன்னை ஒரு சமயம் மாரப்பனிடம் அகப்படாமல் காப்பாற்றியதை, அவன் எந்த நாளும் மறக்க முடியாது. இன்னும், அருள்மொழிராணி அவரிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்தார் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனாலும், அவர் உண்மையான சிவனடியார் அல்ல - அவ்விதம் வேஷம் பூண்டவர் என்று சந்தேகிப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருந்தன. வள்ளி இவ்விதம் சந்தேகத்துடன் அவர் யார் என்பதைப் பற்றியும் ஒரு ஊகம் கூறினாள். அதாவது, அவர் உண்மையில் பார்த்திப மகாராஜாதான் - மகாராஜா போர்க்களத்தில் சாகவில்லை - தன்னந்தனியே தாம் உயிர் தப்பி வந்ததை அவர் யாருக்கும் தெரிவிக்க விரும்பாமல் சிவனடியார் வேஷம் பூண்டிருக்கிறார் என்று வள்ளி சொன்னாள். அவளுடைய மதியூகத்தில் பொன்னனுக்கு எவ்வளவோ நம்பிக்கை உண்டு என்றாலும், இதை அவனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

அவனுடைய சந்தேகத்தை அதிகப்படுத்தும்படியான இன்னொரு சம்பவம் நேரிட்டிருந்தது. அருள்மொழிராணி தீர்த்த யாத்திரை கிளம்பிச் சென்ற பிறகு பொன்னன் பெரிதும் மனச்சோர்வு அடைந்திருந்தான். தோணித் துறைக்குச் சற்றுத் தூரத்தில் காட்டிலிருந்த ஐயனார் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்யலாமென்று அவன் போனான். அங்கே சந்நிதியில் வைத்திருந்த மண் யானைகளில் ஒன்று உடைந்து விழுந்திருப்பதைக் கண்டான். அதனருகில் அவன் சென்று பார்த்தபோது, மண் குதிரையின் வயிற்றுக்குள் ஒரு துணி மூட்டை இருந்தது. அதிசயத்துடன் அவன் அந்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதற்குள் புலித்தோல், ருத்திராட்சம், பொய் ஜடாமுடி முதலியவைகள் இருக்கக் கண்டான். அப்போது அவனுக்கு உண்டான வியப்புக்கு அளவேயில்லை. யோசிக்க, யோசிக்க இது சிவனடியாருடைய வேஷப் பொருள்கள்தான் என்பது நிச்சயமாயிற்று.



அந்த வேஷதாரி யார்? அவர் நல்லவரா, பொல்லாத சூழ்ச்சிக்காரரா? அவரை நம்பலாமா, கூடாதா? அந்தப் பயங்கர மகா கபால பைரவர் மாரப்பன் காதோடு, சிவனடியாரைப் பற்றி ஏதோ சொன்னாரே அது என்ன? கருணையும், தயாளமும் உருக்கொண்ட குந்தவி தேவி, எதற்காக அச்சிவனடியார் மேல் வெறுப்புக்கொண்டிருக்கிறாள்?

இதெல்லாம் பொன்னனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால், அவன் ஒன்று நிச்சயம் செய்துகொண்டான். இந்தத் தடவை சிவனடியாரைச் சந்தித்ததும் அவரைத் தெளிவாக 'சுவாமி! தாங்கள் யார்!'' என்று கேட்டுவிட வேண்டியதுதான். திருப்தியான விடை சொன்னால், இளவரசர் திரும்பி வந்ததைப் பற்றியும், அருள்மொழி ராணி இருக்குமிடத்தைப் பற்றியும் அவருக்குத் தெரிவிக்க வேண்டும். தகுந்த மறுமொழி கூறித் தன் சந்தேகத்தைத் தீர்க்காவிட்டால், ஒன்றும் சொல்லாமல் திரும்பி வந்துவிட வேண்டும். இளவரசருக்கு உடம்பு குணமான பிறகு, அவரை எப்படியாவது சந்தித்து கலந்து ஆலோசித்துக் கொண்டு மேற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

இவ்விதம் பலவிதமாக யோசனைகளும், தீர்மானங்களும் செய்துகொண்டு பொன்னன் வழி நடந்து சென்றான். ஆங்காங்கே போக்கு வண்டிகள் கிடைக்கும் போதெல்லாம் ஏறிக்கொண்டு போனான். கடைசியில், மாமல்லபுரம் போகும் குறுக்குப் பாதையிலும் இறங்கிச் சென்றான். காட்டின் மத்தியிலுள்ள சிற்பியின் வீட்டுக்கு சிவனடியார் மிகத் தெளிவாக அடையாளங்கள் சொல்லியிருந்தார். அந்த அடையாளங்கள் புலப்படுகின்றனவா என்று வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டு அவன் போய்க்கொண்டிருக்கையில், அவனுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் ஒரு குதிரை வருவதையும், அது சட்டென்று குறுக்கே காட்டில் புகுந்து போவதையும் பார்த்தான். குதிரை மேலிருந்த வீரன் தன்னைக் கவனித்தானா இல்லையா என்பது பொன்னனுக்குத் தெரியவில்லை. ஆனால், இளவரசர் சொன்ன அடையாளத்திலிருந்து அவன் ஒற்றர் தலைவனாயிருக்கலாமென்று தோன்றியது.

திரும்ப வேண்டிய இடத்தைப் பற்றி சிவனடியார் கூறிய அடையாளங்கள் அதே இடத்தில் காணப்படவே, பொன்னன் அங்கேயே தானும் திரும்பினான். படர்ந்து தழைத்திருந்த செடிகொடிகளை உராய்ந்து கொண்டு குதிரை போகும் சப்தம் நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த வழியைத் தொடர்ந்து பொன்னனும் போனான். ஒரு நாழிகை நேரம் இவ்விதம் போன பிறகு கொஞ்சம் திறந்த வெளி காணப்பட்டது. அதில் ஒரு அழகான சிற்ப வீடு தோன்றியது. அவன் சாலையில் பார்த்த குதிரை அவ்வீட்டின் பக்கத்தில் நிற்பதைக் கண்டான். அதே சமயத்தில் அவ்வீட்டிற்குள்ளிருந்து சிவனடியார் வெளியே வந்து புன்னகையுடன் அவனை வரவேற்றார். பொன்னனோ, அளவில்லாத வியப்புடனும் திகைப்புடனும் அவரை உற்று நோக்கினான்.

''அடி பாவி! குந்தவி தேவியைப் பற்றி ஏதாவது சொன்னாயோ. உன் நாக்கைச் சுட்டு விடுவேன்!''

(தொடரும்)

தஞ்சை பரத்வாஜ்



மேஷம்: தொட்ட காரியம் துலங்கும். பண வருவாய் பெருகும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு உண்டாகும். திருமணக் காரியங்கள் கைகூடும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். சிலருக்கு வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். புதிய வேலை வாய்ப்புக் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

ரிஷபம்: உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்பத்தில் இருந்துவந்த குழப்பங்கள் தீரும். வேலைப்பளு குறையும். பொறுப்புகள் அதிகமாகும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி பெறும். வீடு மாற்றம் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். பழைய வீடு / மனை விற்று, புதிய இடம் வாங்க நேரிடும். தடை விலகி, திருமணம் நடக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

மிதுனம்: மங்களகரமான பேச்சு வார்த்தை நடக்கும். வீடு / மனை வாங்கும் யோகம் கிட்டும். வேலையில் நற்பெயர் கிட்டும். தெய்வதரிசனம் ஏற்படும். ஆடை, ஆபரணப் பொருட்கள் சேரும். கல்வி வளம் மேலோங்கும். வெளியூர் பிரயாணம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். பரிகாரம் தேவையில்லை.

கடகம்: கல்வியில் அதிக அக்கறை எடுத்துப் படிக்கவும். குடும்ப வாழ்வில் விட்டுக்கொடுத்து, அனுசரித்துப் போவது நல்லது. கூட்டாளிகளை விட்டுப் பிரிய நேரிடும். மறைமுக எதிரிகள் இருப்பார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வழக்குச் சற்றுத் தாமதம் ஆகும். நண்பர்களிடம் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. ராகு / கேது / சனி / குரு வழிபட்டு வந்தால், நற்பலனை அடையலாம்.

சிம்மம்: பண உதவிகள் கிடைக்கும். திருமண முயற்சிகள் கைகூடும். நீண்ட நாள் முடிவு பெறாத காரியம் முற்றுபெறும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். எதிர்ப்புகள் விலகும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வந்தால், நற்பலன் கிடைக்கும்.

கன்னி: புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து இட நேரிடும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். மனச் சலனம் தீரும். உடல் ஆரோக்கியம் சீராகும். வராத நிலுவைகள் வசூலாகும். திருமணக் காரியம் கைகூடும். சத்ரு தொல்லை விலகும். நாணயம் காப்பாற்றப் படும். சனி / குரு வழிபட்டு வந்தால், நன்மை கிட்டும்.

துலாம்: நீண்ட நாள் முடிவுக்கு வராமல்

நடக்குமென்பார்; நடக்கும்!

இருந்து வந்த வழக்குகள் வெற்றிவாகை சூடும். பூமி மூலம் ஆதாயம் ஏற்படும். புதிய சொத்துகள் சேரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். புதிய தொழில் அபிவிருத்தி ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். மனக்குழப்பம் தீரும். வேலையில் நற்பெயர் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். இல்லறவாழ்வு நன்றாக இருக்கும். புதிய நபரைச் சந்திக்க நேரிடும். சத்ரு தொல்லை விலகும். வாகன யோகம் உண்டு. மகப்பேறு பாக்கியம் உண்டாகும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வந்தால், நற்பலன் கிட்டும்.

'பழனி'யில பஞ்ச் டயலாக் பேசின 'பரத்', அடுத்த எலக்‌ஷன்குள்ள கட்சி ஆரம்பிச்சுடுவாரோ?!

விருச்சிகம்: மகிழ்ச்சிகரமான வாரம். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் ஏற்படும். நீண்ட காலம் இருந்து வந்த கடன் சுமை நீங்கும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். திருமணம் கைகூடும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வந்தால், நன்மை கிட்டும்.

தனுசு: நல்ல யோகமான வாரம். சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வெளியூர் பிரயாணம் செல்ல வேண்டி இருக்கும். நீண்ட காலத் தொல்லை தீரும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வேலையில் நற்பெயர் ஏற்படும். வாக்குநாணயம் காப்பாற்றப்படும். குரு வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

மகரம்: கொடுக்கல், வாங்கலில் அதிகக் கவனம் தேவை. கணவன், மனைவிக்குள் அனுசரித்துப் போவது நற்பலனை அளிக்கும். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. கூட்டாளிகள் விலகிப் போவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கூட இருக்கும் நபரிடம் அனுசரித்துப் போவது நல்லது. ராகு / கேது / சனி / குரு வழிபாட செய்துவர, சங்கடங்கள் விலகும்.

கும்பம்: நீண்டகாலம் வராத நிலுவைகள் வந்து சேரும். பண வருவாய் பெருகும். தொழில் துறையில் புதிய யுக்தியுடன் செயல்படுவீர்கள். நீண்டகால, முடிவு பெறாத வழக்கு வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வேலையில் மாற்றம் உண்டாகும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வருதல் நற்பலன் அளிக்கும்.

மீனம்: நினைத்தது நடக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. உடல்நிலை பாதிக்காது. சத்ரு தொல்லை நீங்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வழக்கு முடிவுக்கு வரும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் ஏற்படும். குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

03.02.08 முதல் 09.02.08 வரை

மனம் ~~முடி~~ திருத்தும்

''என்னோட கடைக்குப் புதுசா முடிவெட்ட வர்றவங்களுக்குக் கொஞ்சம் வியப்பா இருக்கும். ஏன்னா... வர்றவங்க பார்வையைக் கவர்ந்து மனசைக் கெடுக்கற ஆபாசக் கவர்ச்சிப் படங்கள் கடையில இருக்காது. அதுக்குப் பதிலா, நான் வெச்சிருக்கிற நூலகம்தான் அவங்களைக் கவர்ந்து இழுக்கும். கடைக்கு யார் வந்தாலும், காத்திருக்கிற நேரத்தில் நேரா போயி, அலமாரியில ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பிச்சுடுவாங்க.

'அடுத்த நபர் வாங்க, வந்து உக்காருங்க'ன்னு கூப்பிடுவேன். 'இன்னும் பத்துப் பக்கம்தான் இருக்கு. படிச்சு முடிச்சிடறேன். எனக்கு அப்புறமா வந்தவரை உட்கார வெக்கக்குங்க'ன்னு எனக்குப் பதில் வரும்! எனக்கு அப்ப இன்னும் சந்தோஷமா இருக்கும்'' என்கிறார் திருவைக்குமரன்.

இவரது 'சிவா முடி திருத்தும் நிலையம்', திருச்சி சின்னக்கடை வீதியில் இயங்கி வருகிறது. அந்தக் கடையில்தான் இருக்கிறது நூலகம்.

பல ஆண்டுகளாக திருச்சியில் ஒரு கடையில் சம்பளத்துக்கு வேலை பார்த்தவர் குமரன். கடந்த நான்கு ஆண்டுகளாகச் சொந்தமாக இந்த முடிதிருத்தும் நிலையத்தினை நடத்தி வருகிறார்.

> ''வாசிக்கிற பழக்கம் உள்ளவர்களால் மட்டுமே, ஆக்கபூர்வமான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது என் நம்பிக்கை!''

''பள்ளியில படிக்கும்போதே, புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினது எங்க அப்பாதான். புத்தகங்கள் மூலமா அவர் போட்ட விதைதான், என்னை எல்லாப் புத்தகங்களையும் தேடித் தேடிப் படிக்க வைச்சது; கவிதை எழுத வைச்சது; சலூன் கடைக்கு உள்ளேயே, அதிசயம் போல ஒரு நூலகம் அமைக்க வைச்சது'' என்று சொல்லும் இவர் கவிதையும் எழுதுவார்.

''சிற்றிதழ்கள் பல வற்றிலும் பரவலாக

● புத்தகம் வாசிக்கும் கஸ்டமர்



என்னோட கவிதைகள் வெளி வந்திருக்கின்றன. 'கல்கி'யில யும் ஒரு தடவை கவிதைப் போட்டியில பரிசு வாங்கி யிருக்கேன். 'கவிக்காவிரி' என்ற கால இடைவெளிக்குக் கட்டுப் படாத, சிற்றிதழ் நடத்தி வர்றேன். கவிதைக்காக மட் டுமே வெளி வரும் சிற்றிதழ் அது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளில், இரு பத்தியிரண்டு இதழ்கள் உலா வந் திருக்கின்றன.



• திருவைக்குமரன்

''வாசிக்கிற பழக்கம் உள்ளவங்களால புதிய கருத்துகளை, புதிய சமூகத்தை உருவாக்க முடியும்ங்கறது என்னோட நம்பிக்கை. அதுக்காகவே இந்த நூலகத்தை உருவாக்கினேன். என் குடும்பச் செலவு போக, மீதப்படும் பெரும் பகுதி பணத்துல புத்தகங்கள் வாங்குவேன். இப்பவும் அப்படி வாங்கிக் கிட்டுத்தான் இருக்கேன். என்னோட இந்த சலூன் கடை நூலகத்துல, ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருக் கின்றன. தற்போது சலூன் கடைகள் உட்பட பெரும்பாலான கடைகள்ல, டி.வி. பெட்டியோட ஆக்கிரமிப்பு அதிகமாகிப் போச்சு. வாசிக்கும் பழக்கம் பெரும்பாலான வர்களிடம் வெகுவாகக் குறைஞ் சுட்டு வருது.

புத்தகங்களுக்கும் அவற்றைப் படிக்கிறவர்களுக்கும் இடையே பாலமாக இருப்பதற்கான ஓர் அடித் தளமே, என் கடையில் இருக்கும் இந்த நூலகம். இங்கு பல வகைப்பட்ட புத் தகங்கள் இருக்கின்றன. முன் பணம் வாங்குவது இல்லை. புத்தக வாசிப்புக்கான வாடகையும் வசூலிப்பது கிடையாது. முடிவெட்ட வர்றவங்களும், ஷேவிங் பண்ணிக்க வர்றவங்களும் அவங்களுக்குத் தேவையான புத்தகத்தை எடுத்துட்டுப் போவாங்க. மறுமுறை வரும்போது மறக்காம புத்தகத்தைக் கொடுத்துடுவாங்க'' எனக் கூறுகிறார் திருவைக்குமரன்.

செய்திச் சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

• ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருக்கின்றன...



நிலையம்!

"இது ஆரோக்கியமான சண்டை!"

இன்றைய தமிழ் சேனல்களில் மக்கள் பிரச்னைகளைப் பற்றி அலசும் நிகழ்ச்சிகளில், ஸ்டார் விஜயில் ஒளிபரப்பாகும் 'நீயா... நானா?' முன்னணியில் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளாக இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திவரும் கோபிநாத்தைச் சந்தித்தோம்...

''என்ன சார் நீயா... நானா?னு ஏதோ சண்டைக்குக் கூப்பிடுவது போல தலைப்பு இருக்கே'' என்றதும் சிரித்தபடியே,

''நீங்கள் சொல்வது சரிதான். இது சண்டைதான். ஆனால், ஆரோக்கியமான சண்டை. ஆரோக்கியமான, தேவையான விவாதங்கள் இடம் பெறுவதால், உன்னுடைய கருத்து சரியா? என்னுடைய கருத்து சரியா? என்ற போட்டிச் சிந்தனை பங்குபெறுபவர்களின் மனத்தில் இருப்பதால் நீயா... நானா? என்று பெயரிட்டோம்.

''எப்போதுமே உலகத்தில் இருக்கும் அனைத்துச் சிந்தனைகளுக்கும், மாற்றுச் சிந்தனைகளோ அல்லது இரண்டாவது கருத்தோ கண்டிப்பாக இருக்கும். இந்த இரண்டு கருத்துகளையும் கொண்ட மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதுதான் இந்த நீயா... நானா? மேடை.

''இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு மற்றுமொரு காரணம், இயக்குநர் ஆண்டனி. எங்கள் இருவருக்குமிடையே புரிதல் நன்றாக இருப்பதால், நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்த முடிகிறது. நான் கவனிக்காமல் விட்டுவிடும் விஷயங்களை இயக்குநரும், அவர் விட்டுவிடும் விஷயங்களை நானும் சுட்டிக்காட்டுவதால், எந்தவொரு முக்கியமான விஷயமும் விட்டுப் போவதில்லை.

நீயா... நானா? - பட்டிமன்றமோ, கவியரங்கமோ இல்லை. எந்தப் பிரச்னைக்கும் இதுதான் தீர்வு என்று சொல்ல நான் நீதிபதியுமில்லை. வெவ்வேறு பிரச்னைகளைக் கொண்ட மக்களை ஒரே மேடையில் அமரவைத்து, அவர்களின் பிரச்னைகளை அவர்களையே அலச வைப்பதோடு என் பணி முடிந்துவிடுகிறது. ஒரு பேச்சாளர் ஒரு பிரச்னையைப் பேசுவதைவிட, அந்தப் பிரச்னையோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்கள் பேசும்போது, அவர்களின் உள் மனத்தில் இருந்து வார்த்தைகள் வருகின்றன. வாய்ஜால அலங்கார வார்த்தைகளைவிட இவை வலிமையானவை. இந்த வலிமையான வார்த்தைகள்கூட நிகழ்ச்சியின் பெரிய வரவேற்புக்கு முக்கிய காரணம்.

–'நீயா... நானா?' கோபிநாத் பேட்டி


''உலகமயமாக்களின் பாதிப்புகள் பரவியபிறகு, வாழ்விலும் சமூகத்திலும் எத்தனையோ சூழல்கள் மாறிவிட்டன. சென்ற தலைமுறையில் மதிப்பான விஷயங்கள் என்று நாம் எண்ணியவை இன்று கேள்விக்குள்ளாக்கப் பட்டுவிட்டன.

பொதுவாக ஆடை கலாசாரத்தைப் பற்றிப் பேசும்போது பெண்களின் ஆடை மாற்றத்தைப் பற்றித்தான் பேசுவார்கள். ஆனால், எங்கள் நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு ஆண்கள் வேட்டிகட்டத் தயங்குவது ஏன்? என்ற தலைப்பில் விவாதித்தோம். தலைப்பைக் கேட்டால் ஏதோ வேடிக்கையாக இருக்கும். ஆனால், இந்த நிகழ்ச்சியின் விவாதத்தின்போதுதான் தமிழ்நாட்டு இளைஞர்கள், வேட்டி என்றால் படிக்காத கிராமத்து மக்களின் ஆடை என்ற தவறான சிந்தனையைக் கொண்டுள்ளார்கள் என்பதை உணர முடிந்தது.


''இரண்டு ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளில் எந்த ஒரு சமயத்திலும் கருத்து மோதலைத் தாண்டி, தனி மனிதத் தாக்குதல்களோ, விமர்சனங்களோ நடந்ததில்லை'' என்று சொல்லும் கோபி, யு டி.வி., ராஜ் டி.வி., ஜெயா டி.வி., என்.டி.டி.வி., சி.என்.பி.சி. போன்ற பல்வேறு சேனல்களில் செய்தியாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

''நானும் எனது சகோதரர் பிரபுவும் இணைந்து 'Talk Shop' எனும் தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வருகிறோம். எனது சகோதரர் பல்வேறு படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியுள்ளார்'' என்று சொல்லும் இவரது சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி. தமது பள்ளிப் படிப்பை திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சியிலுள்ள செயின்ட் ஜேம்ஸ் பள்ளியிலும் கற்றிருக்கிறார். ''அங்கு எனக்குக் கிடைத்த தமிழறிவுதான் இன்று உபயோகமாக உள்ளது'' என்று சொல்லும் கோபிநாத், 'தெருவெல்லாம் தேவதைகள்' என்ற கவிதைப் புத்தகத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

– ராகவ்குமார்



* கோபிநாத்



ரஜினியோடு நடிக்க கமல் தயக்கம்!

'ப்ரியா படத்தை தமிழிலும், கன்னடத்திலும் எடுங்கள். கன்னடப் படத்தை எடுக்க நான் உதவுகிறேன்' என்று முன் வந்தார் கன்னடத் தயாரிப்பாளரான ராஜண்ணா. அதுவும் நல்ல யோசனைதான் என்று ஏற்றுக்கொண்டோம். ரஜினி - ஸ்ரீதேவி ஜோடி, தமிழ், கன்னடம் இரண்டிலுமே பிரபலம் என்பதால் சௌகரியமாகப் போனது. ரஜினி நடித்த டெக்கில் கணேஷ் கதாபாத்திரத்தின் துணைப் பாத்திரமான வஸந்தாக, கன்னட நடிகர் ஒருவரை நடிக்க வைத்தால் சரியாக இருக்கும் என்று நினைத்து, அம்பரீஷை அணுகினோம். அவர் தமிழ், கன்னடம் என்று இரண்டு மொழிகளிலும் நடிக்க ஒப்புக்கொண்டார். சிவராமன் என்று கன்னடத்தில் ஒரு சிறந்த காமெடியன். அவரையே தமிழுக்கும் போட்டுக்கொண்டு, மற்ற சில பாத்திரங்களுக்கு மட்டும் தமிழுக்கும், கன்னடத்துக்கும் வெவ்வேறு நடிகர்களை ஒப்பந்தம் செய்தோம்.

ப்ரியா படம் தமிழிலும், கன்னடத்திலும் எடுக்கப்பட்டு, ஒரே சமயத்தில் தமிழ் நாட்டிலும், கர்நாடகாவிலும் வெளியானது. இரண்டு மொழிகளிலுமே படம் பெரிய அளவில் வெற்றி பெற்றது. ஒரு நாவலை, திரைப்படமாக எடுக்கும் போது, சினிமா என்ற விஷுவல் மீடியத்துக்கு ஏற்ப சில மாற்றங்கள் அவசியமாகின்றன. அந்த மாற்றங்கள் மிகச் சரியாகச் செய்யப்படும்போது, நாவலைப் போலவே திரைப்படமும் நல்ல வரவேற்பைப் பெறுகிறது. திரைப்படத்துக்காக இயக்குனர்கள் இப்படி மாற்றங்கள் செய்வதை சில எழுத்தாளர்கள் விரும்புவதில்லை. அண்மையில், தங்கர் பச்சான் தாம் எழுதிய நாவலை தாமே திரைப்படமாக எடுத்து, வெற்றி பெறச்



செய்திருக்கிறார். தமிழில் தலைசிறந்த எழுத்தாளர்கள் பலர் எழுதிய நாவல்கள் பல இருக்கின்றன. சினிமாவுக்கேற்ற நாவல்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் திரைப்படங்களாக எடுக்க இயக்குனர்கள் முன்வர வேண்டும் என்பதே என் விருப்பம்.



ஒரு நாள் ரஜினியும் நானும் வெளிப்புறப் படப்பிடிப்பை முடித்துவிட்டு, இன்னொரு படப் பிடிப்புக்காக ஏவி.எம். ஸ்டுடியோவுக்கு வந்தோம். ஏவி.எம். வளாகத்தினுள்ளே, ஏவி.எம். ராஜேஸ்வரி தியேட்டர் கட்டப் பட்டுக்கொண்டிருந்த காலம். எங்களு டைய கார் ஸ்டுடியோவுக்குள் நுழைந்த போது, தியேட்டர் கட்டுமானப் பணிகளை ஏவி.எம். அவர்கள் பார்வையிட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தேன். ரஜினியி டம், ''அதோ ஏவி.எம்.செட்டியார் நின்று கொண்டிருக்கிறார். மரியாதை நிமித்தம் அவரைப் பார்த்துவிட்டு வரலாமா?'' என்று கேட்டேன். ரஜினி உடனடியாகச் சம்மதித்தார். ரஜினியை ஏவி.எம்.மிடம் அறிமுகம் செய்து வைத்தேன். உடனே ஏவி.எம்., ''முள்ளும் மலரும் படம் பார்த் தேம்பா! ரொம்ப நல்லா நடிச்சிருக்கீங்க! உங்களுக்கு என்னோட வாழ்த்துகள்!'' என்று சொன்னார். அவரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டபோது, என்னை அழைத்தார். 'ஏம்பா! நீதான் ரஜினி, கமல் இரண்டு பேரையும் வெச்சு படம் பண்றியே! நம்ம ஸ்டுடியோவுக்கு ஒரு படம் டைரக்ட் பண்ணேன்' என்றார். 'அது என் பாக்கியம் ஐயா!' என்று பெருமையோடும் நன்றியோடும் சொன் னேன்.

அன்றைய தினம் என் வாழ்க்கையில் ஒரு முக்கிய மான தினம்! திரையுலகில் முதன்முதலில் நான் அடி யெடுத்து வைத்தது ஏவி.எம். ஸ்டுடியோவில்தான்! 1956ஆம் ஆண்டில், நான் ஏவி.எம்.மின் எடிட்டிங் டிபார்ட் மெண்ட்டில் உதவியாளராகச் சேர்ந்தேன். பிறகு அசிஸ்டன்ட் எடிட்டராகி, அப்புறம் அசிஸ்டன்ட் டைரக் டர் ஆனேன். ஏவி.எம். தயாரித்த

எஸ்.பி.முத்துராமன்

பல படங்களை இயக்கிய பீம்சிங், கிருஷ்ணன்-பஞ்சு, யோகானந்த் போன்ற பல இயக்குனர்களுக்கு உதவி இயக்குனராகப் பணியாற்றினேன். 'வீரத் திருமகன்' படத்தினை இயக்குனர் திருலோகசந்தர் இயக்க வந்தபோது, அவரிடம் உதவி இயக்குனராக என்னை சரவணன் சேர்த்து விட்டார். அதன் பிறகு இயக்குனர் திருலோகசந்தர் படங்களுக்கு மட்டுமே உதவி இயக்குனராக இருந்தேன். இப்படி பல நிலைகளிலும், பல இயக்குனர்களி டமும் பணியாற்றி, சினிமா பற்றித் தெரிந்துகொண்டுதான் இயக்குனர் ஆனேன். சிரத்தையுடன் தொழில் கற்றுக் கொண்டு, கடுமையாக உழைத்துத்தான் நான் இன்று இந்த நிலையை எட்டியிருக் கிறேன் என்பதை இன்றைய இளைய தலைமுறையினருக்கு, குறிப்பாக, சினி மாவில் சேர விரும்பும் இளைஞர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் உதவியாளராக சினிமா வாழ்க்கை யைத் தொடங்கிய ஏவி.எம். நிறுவனத்தி லேயே ஒரு படத்தை இயக்கும் வாய்ப் பைப் பெறுவது என்பது எத்தனை பெரு மைக்குரிய விஷயம்! அதுவும் படம் எடுப்பதையே நிறுத்தி இருந்த ஏவி.எம். நிறுவனம் ஒன்பது ஆண்டு இடை வெளிக்குப் பிறகு, ஒரு படத்தை எடுக்கும்போது அந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத் தது என்றால், அது எவ்வளவு பெரிய பாக்கியம்! ஆனால், துரதிர்ஷ்டவசமாக, நான்



ஏவி.எம். ஸ்டுடியோவுக்காகப் படம் இயக்க வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்ட ஏவி.எம்., அடுத்த சில மாதங்களிலேயே இயற்கை எய்தினார். எங்களுக்கெல்லாம் தாங்க முடியாத அதிர்ச்சி. அந்த மாமனிதருக்கு எனது நன்றிக்கடனைச் செலுத்தும் வாய்ப்பாக, அவரது இறுதி யாத்திரையின்போது, அவரது பூத உடலைச் சுமந்து செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

சுமார் மூன்று மாதங்கள் கழித்து, ஏவி.எம். சரவணனிடமிருந்து அழைப்பு வந்தது. நான், ஏவி.எம்.முக்காக ஒரு படத்தை இயக்க வேண்டும் என்று முன்னர் அவரது தந்தையார் சொன்னதை, அவர் நினைவுபடுத்தினார்.

ஏவி.எம். நிறுவனம் இந்தியில் தயாரித்த 'பாய் பாய்' என்ற படம் மிகப் பெரிய வெற்றி கண்டது. அதனை தமிழில் கமல், ரஜினி இருவரையும் நடிக்க வைத்து எடுக்கலாம். ''நீங்கள் கமல், ரஜினி

'ப்ரியா' படம் தமிழிலும் கன்னடத்திலும் எடுக்கப்பட்டு, இரண்டிலுமே பெரிய அளவில் வெற்றி பெற்றது!



இருவரிடமும் பேசி, சம்மதம் பெற்றுவாருங்கள்!'' என்று ஏவி.எம்.சரவணன் என்னிடம் கூறினார். நான் ரஜினியைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னபோது, ரஜினி பெரிதும் மகிழ்ந்தார். உடனடியாகத் தமது சம்மதத்தைத் தெரிவித்துவிட்டார்.

அடுத்து, கமலைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னபோது, ''எனது பிறந்த வீடாக நான் கருதுகிற ஏவி.எம்.மின் படத்தில் நடிப்பதற்கு எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். ஆனால், நாங்கள் இருவரும் இணைந்து நடிக்கணுமா?'' என்று கேட்டார். நான், ''ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? என் படத்திலேயே நீங்கள் இருவரும் நடித்திருக்கிறீர்களே!'' என்றேன். சில நிமிடங்கள் யோசித்த கமல், ''இப்படிச் செய்தால் என்ன?'' என்று ஒரு புதிய ஐடியா சொன்னார். அது என்ன? அடுத்த வாரம் சொல்கிறேன்.

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம்: **எஸ்.சந்திரமௌலி**

ரசிகர் மன்ற ராஜாக்கள்

சென்னையைப் பூர்வீகமாகக் கொண்ட சையதுக்கு ரஜினிமேல் கிரேஸ் ஏற்படக் காரணமே அவரது ஸ்டைலான நடிப்புத்தானாம்.

''நான் அடிப்படையில் ஒரு கார் டிரைவர்ங்க. நமக்கு உண்மை, நேர்மை, கடமை தவறாமை இது தாங்க முக்கியம். படிக்காதவன் படத்துல வர்ற ரஜினி மாதிரிதாங்க எனக்கும் படிப்பு வாசனை கம்மி. ஆனால், தொழில் மேல் பக்தி அதிகம். அதுக்குக் காரணமே ரஜினிதான். அந்தப் படத்துல அவர் ரொம்ப நேர்மையான கார் டிரைவரா நடிச்சிருப்பாரு. அந்தப் பாதிப்புலதான் இந்தத் தொழிலுக்கே வந்தேன். என்னோட எட்டு வருஷ இந்த சர்வீஸ்ல யாருகிட்டயும் அநியாயமா பணம் வாங்கினது கிடையாது. இதுக்கெல்லாம் காரணமே நம்ம தலைவர் நடிப்புதான். பிரசவத்துக்கு ஒரு ஏழைத் தாயை சரியான நேரத்துக்குக் கொண்டு போய் ஆஸ்பிட்டல் சேர்த்துட்டு அவங்க சொந்தகாரங்களுக்கு ஃபோன் பண்ணிச் சொன்னேன். அந்த நாள் முழுக்க எனக்கு ரொம்ப நிம்மதியா போச்சு'' என்று பேசுகிறார் சையது.

உங்க ஆசைதான் என்னங்க என்றால், ''என்னைக்காவது ஒரு நாள் ரஜினி சாருக்கு கார் ஓட்டணும். அது மட்டும் என்னோட நீண்ட நாள் ஆசை'' என்கிறார்.



- கமலி

சுஜாதா



8 புறம் புல்குதல்

கண்ணனின் பால்ய லீலைகளை, பெரியாழ்வார் போல ரசித்துச் சொன்னவர் எவரும் இல்லை. பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வகையை ஆரம்பித்தவரே அவர்தான் என்று சொல்லலாம். தளர் நடைப் பருவம், செங்கீரைப் பருவம், அச்சோப்பருவம், பூச்சிகொட்டி விளையாடுதல் என்று ஒரு சின்னக் குழந்தை என்னவெல்லாம் அழகழகாகச் செய்யுமோ அவற்றை எல்லாம் பத்துப் பத்துப் பாடல்களாக அனுபவித்துப் பாடியிருக்கிறார்.

அதில், புறம் புல்குதலும் உண்டு. தன் முதுகை வந்து தழுவும்படி கண்ணனை அழைக்கும் பாடல்கள். ஒரு தாய்க்கு இதைவிட இன்பம் இருக்க முடியாது. ஏதோ ஒரு வேலையில் இருக்கும்போது, குழந்தை பின்னாலிருந்து வந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு அணைப்பது. அந்தப் பிள்ளை தெய்வப் பிள்ளையாக இருந்து விட்டால், யசோதை பெறும் சந்தோஷத்துக்கு அளவே இருக்காது. இந்தப் பாசுரத்தைப் பாருங்கள்.

பொத்த உரலைக் கவிழ்த்து, அதன் மேல் ஏறி,
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறு ஆர விழுங்கிய
அத்தன் வந்து என்னைப் புறம்புல்குவான்,
ஆழியான் என்னைப் புறம்புல்குவான்.

(பொத்த உரல் - விரிந்த உரல் அல்லது பள்ளமுள்ள உரல், தடா - தவலை)

'உரலைக் கவிழ்த்துப் போட்டு அதன்மேல் ஏறிக்கொண்டு, தித்திப்பான பாலும் உறியில் தொங்கும் வெண்ணெயையும் வயிறார விழுங்கிவிட்டு, அந்தச் சிறுவன் வந்து என்னைப் பின்னாலிருந்து அணைத்துக்கொள்வான்'. புறம் புல்கும் இந்தப் பத்துப் பாடல்களிலும் கண்ணனை கோவிந்தன், எம்பிரான், ஆயர்களேறு, உம்பர்கோன், வாமனன், பார் அளந்தான், ஆழியான் என்று பல பெயர்கள் சொல்லிப் பெருமைப்படுகிறார்.

(படிக்கலாம்)

வாரம் ஒரு பாசுரம்

பாகம் - 2

எந்தப் பாத்திரத்தில் நடித்தாலும் பிளந்து கட்டும் பிரகாஷ்ராஜ், வாழ்க்கையில் நடிக்காதவர் என்பதை உணர்த்துகிறார் இந்தப் பேட்டியில்...

சாதிச்சிருக்கறதா நினைக்கிறேன். இந்தச் சினிமா உலகத்துல முப்பது, நாற்பது வருஷங்கள் வரை நீடிச்ச இருந்து சாதனை பண்ணினவங்க எத்தனை பேர் இருக்காங்க!''

சினிமா, உங்களுடைய வாழ்வில் எந்தவிதமான மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது?

''எனக்குப் பயணம் செய்வது மிகவும் பிடிக்கும். வாழ்க்கை என்ற பாதையில் பயணம் செய்கிற ஒரு பயணியாகத்தான் நான் என்னைப் பார்க்கிறேன். நான் புறப்படும் இடம் எனக்குத் தெரிந்திருக்கிறது; ஆனால், எந்த இடத்துக்குப் போய்ச் சேரவேண்டும் என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனாலும், என்னோட பயணத்தின் ஒவ்வொரு நிமிஷத்தையும் ரசிக்கிறேன். இந்த உலகம் என்னை எந்த அளவுக்கு மாற்றி இருக்கு என்பதைவிட, இந்த உலகத்தில் என்னால் எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்த முடிகிறது என்பதுதான் எனக்கு முக்கியம்.''



நான் வியாபாரி

பெரிய அளவுக்கு வளர்ந்துவிட்ட இன்றைய நிலையில், கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறபோது என்ன தோன்றுகிறது?

''நேற்றுதான் பெங்களூர்ல இருந்து சென்னைக்கு சினிமா கனவோட வந்தது போல இருக்கு. அதற்குள்ளே வருடங்கள் ஓடிவிட்டன. நான் ஏதோ நிறையபண்ணிட்டதாகவோ, சாதிச்சிட்டதாகவோ நினைக்கலை. இன்னமும் தொடக்கத்தில் இருப்பதாகவே எனக்குத் தோணுது. என்ன செய்யணும்னு ஆசைப்பட்டேனோ, அதுல அஞ்சு

சினிமாவில் நீங்கள் வெற்றிகரமான மனிதராக விளங்குவதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

''எது வெற்றி என்பதை எப்படி நாம் தீர்மானமாகச் சொல்வது? மக்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கை; அதன் காரணமாக ஏற்பட்டிருக்கும் எதிர்பார்ப்பு; இவற்றால் எனக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரம் - இதையெல்லாமே நான் வெற்றியாகக் கருதுகிறேன். இந்தச் சுதந்திரம் எனக்கு மிகுந்த பொறுப்புணர்வையும் ஏற்படுத்தி இருக்கு. அதனால்தான், 'மொழி' மாதிரியான படங்களை என்னால் எடுக்க முடிகிறது. 'மயிலு', 'அபியும் நானும்' போன்ற படங்களை எடுக்கிற தைரியத்தைக் கொடுக்குது.

ஒரு மனிதரிடம் அதிகார பலம் மிக அதிகமா சேரும்போது, அவர் சர்வாதிகாரியாக மாறுவதைச் சரித்திரத்தில் பார்த்திருக்கோம். அப்படித்தான் ஒருவருடைய பலமே,

- மனம் திறக்கும் பிரகாஷ்ராஜ்

அவருடைய பலவீனமாகவும் நாளடைவில் மாறிவிடக்கூடும். எனக்கு அப்படி நேர்ந்துவிடக்கூடாது என்பதில் நான் மிகவும் கவனமா இருக்கேன்.''

நீங்கள் சினிமாவில் சம்பாதிப்பதை, சினிமாவிலேயே ஏன் முதலீடு செய்கிறீர்கள்?

எனக்குப் பண நெருக்கடி ஏற்பட்ட ஒரு சமயத்தில் சினிமா சம்பந்தப்பட்ட ஒரு மனிதர், ''உங்களுக்கு உதவணும்னு நினைக்கிறேன்; ஆனா, அப்படிச் செய்யறதில்லைன்னு ஒரு கொள்கை வெச்சிருக்கேன்'' என்று சொன்னார். அதற்கு நான்,

அல்ல..!



''சார், அது உங்கள் கொள்கை இல்லை; குணம். அதுல தப்பு இல்லை; நீங்க சம்பாதிச்ச பணத்தை யாருக்குக் கொடுக்கலாம்; கொடுக்கக் கூடாதுன்னு முடிவு பண்றது உங்க உரிமை'' என்று சொன்னேன். அதுபோல, சினிமாவுல சம்பாதிச்சதை, சினிமாவுல முதலீடு செய்யறது என் கொள்கை இல்லை; குணம்.

''என்னிடமிருக்கும் அதிகப்படியான பணத்தைத்தான் நான் முதலீடு செய்கிறேன். என்னுடைய சந்தோஷத்துக்காக, திருப்திக்காக இதைச் செய்யறேன். இதுல என்னோட சுயநலமும் இருக்கு என்பதை நான் மறைக்க விரும்பலை.''

சினிமாவின் மூலமாக வெற்றியையும், வசதிகளையும் கொடுத்த இந்தச் சமூகத்துக்கு நீங்கள் செலுத்தும் நன்றி?

''நான் அன்னை தெரசாவாக என்னை நினைக்கவில்லை; ஏழைக்கு நூறு ரூபாய் கொடுக்கிறவருக்கு அந்த ஏழையின் கஷ்டத்தைப் போக்குவதன் மூலம் ஆனந்தமும் கிடைக்கிறது இல்லையா? பிறருக்கு உதவுவதன் மூலம் சந்தோஷம் அடைவதுகூட ஓரளவு சுயநலம் சார்ந்ததுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, நிறைய திறமைசாலிகளுக்கு வாய்ப்புத் தருவதாக என்னைப் பலரும் பாராட்டும்போது, எனக்குள் இலேசான குற்ற உணர்வு வருகிறது.

காரணம், திறமைசாலி என்று தெரிந்துதான் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். அவர்களின் திறமை வெளிச்சத்துக்கு வரும்போது, எனக்கும் சேர்த்து தானே பேரும் புகழும் கிடைக்கிறது: இது ஒரு விதத்தில் சுயநலம்தானே?''

உங்களுடைய வாழ்க்கை அனுபவத்தை அவ்வளவு



வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டீர்களே, அதற்கு என்ன அவசியம்?

''அது, நான் எனக்குள்ளேயே பேசிக்கொண்டது. பத்திரிகையின் வாயிலாக ஏராளமானவர்களைச் சென்றடைந்தது. எனது அனுபவங்களையும், உறவுகள் பற்றிய கருத்துகளையும், மற்றவர்கள் படிக்கிறபோது, அவர்களை அது யோசிக்க வைக்கக்கூடும்; அவர்கள் வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என்று நான் நினைத்தேன். எனவேதான் இதுவரை சொல்லாத சில உண்மைகளைச் சற்று உரக்கப் பேசினேன். என் அம்மாவைப் பற்றி எழுதினதைப் படித்துவிட்டு, கும்பகோணத்திலிருந்து ஒருவர் ஃபோன் செய்து, ''நான் என் அம்மாவிடம் பேசி மூணு வருஷமாச்சு. அதை நினைக்கும்போது எனக்கு வெட்கமா இருக்கு. உடனே கிளம்பி என் அம்மாவைப் பார்க்க ஊருக்குப் போகிறேன்'' என்று சொன்னபோது, 'அட பரவாயில்லையே' என்று தோன்றியது.''

வெற்றி பெறும் படம்தான் எடுக்க வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறபோது, நீங்கள் மட்டும் நல்ல படமாக எடுக்க வேண்டும் என்று நினைக்கிறீங்களே ஏன்?

''நான் வியாபாரி அல்ல! நான் ரசிக்கிற விஷயங்களை மட்டுமே படமா எடுக்கணும்னு நினைக்கிறேன். 'மொழி' நான் படைச்ச விஷயமில்லை; ரசிச்ச விஷயம். மற்றவர்களோட சிந்தனைகள் எனக்குப் பிடிக்கிறபோது, அவற்றை சினிமாவாக ஆக்கும் வாய்ப்பை என்னால் உருவாக்கித் தர முடியும் என்கிறபோது, சந்தோஷமாகச் செய்கிறேன். மேலும், சில கதைகளைக் கேட்டவுடன் எனக்குள்ளே பொறி தட்டுகிறது; அப்படிப்பட்ட கதைகளைப் படமாக எடுக்கிறேன்.


கே.பி., ஓர் அபாரமான சிற்பி. அதனால்தான் அவர் செதுக்கியபோது ஏற்பட்ட வலிகளைத் தாங்கிக்கொள்ளும் சக்தி எங்களுக்கு இருந்தது.

பிரகாஷ்ராஜை உருவாக்கியதில் டைரக்டர் கே.பாலச்சந்தர் பங்களிப்பு என்ன?

''எல்லோரும் ஜோக் நீர்வீழ்ச்சியைப் பார்த்ததற்கும் விஸ்வேஸ்வரய்யா அதைப் பார்த்ததற்கும் வித்தியாசம் உண்டு. இத்தனை தண்ணீரும் வீணாகிறதே என்று நினைத்தார். அதைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க வழி செய்தார்! அதேபோல கமலஹாசன், ரஜினி மற்றும் என் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர் பாலச்சந்தர். 'உங்களுடைய உயர்வுக்கு நீங்கள்தான் காரணம்' என்று சொல்வது அவரது பெருந்தன்மை. அவர் அபாரமான ஒரு சிற்பி. எங்களை எல்லாம் மிக நன்றாகச் செதுக்கி இருக்கிறார். அதனால்தான் அவர் செதுக்கியபோது ஏற்பட்ட வலிகளைத் தாங்கும் சக்தி எங்களுக்கு இருந்தது.

- எஸ். சந்திரமௌலி

அட்டை மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**





ஆவலைத் தூண்டும் ஆதாரங்கள்!

பூமிப் பந்தின் புதிர்கள்- க.பொன்முடி, விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 02. விலை ரூ.45

கண்டங்கள் நகரவில்லை; உயர்கின்றன என்ற, தமது ஆய்வில் தோன்றிய கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர். பூமி கிரகத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள விரும்பும் பல விவரங்களைத் தக்க புகைப்படங்கள், சில ஆதாரங்களுடன், ஆவலைத் தூண்டும் வண்ணம் எழுதியுள்ளார்.

இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்! உண்மை நிலை என்ன? - ஆ.கோபண்ணா, சூர்யா பப்ளிகேஷன்ஸ், 573, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 06. விலை ரூ.50

இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் குறித்து எழுந்த பலவிதமான கருத்துகள், தாக்குதல்களுக்கு விளக்கம் கூறும் வகையில் அமைந்துள்ள நூல். மக்களுக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும் என்பதற்காக கேள்வி - பதில் வடிவில் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஒழுக்கம் உலகில் மிக உயர்ந்தது - ஆரிசன் ஸ்வெட் மார்டன்; தமிழில் : பேராசிரியர் பெ.இளவரசு, கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.30

ஒழுக்கமே மிக உயர்ந்த பண்பு என்பதை பல அறிஞர்களின் கதைகள் வாயிலாக, எளிமையான நடையில் விளக்கியுள்ளார் நூலாசிரியர். ஒழுக்கம் இல்லாமல் பிறப்புக்குப் பெருமையில்லை என்பதை மனத்தில் ஆணித்தரமாக உணர வைக்கும் நூல்.

வர்மக்கலை புதுமையான தற்காப்பு முறைகள் - மதுரை ஆர்.ராஜேந்திரன், மேகதூதன் பதிப்பகம், ப.எண்.7, பு.எண்.-13, சின்னப்ப ராவுத்தர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 05. விலை ரூ.30

வர்மக் கலையை அடிப்படையிலிருந்தே கற்றுக்கொள்வதற்குரிய பல அரிய விஷயங்களை இந்நூலில் வழங்கியுள்ளார் ராஜேந்திரன். குரு இல்லாமல் எளிதாகப் பயிலும் வகையில், கலையைப் பற்றிய நுணுக்கங்களுடன் வெளிவந்திருக்கும் புத்தகம்!

- மித்ரா

பாரதியார் தம் நண்பர்கள் குழுவோடு அமர்ந்து சில சமயம் தாம் எழுதிய கவிதைகளைப் படித்துக் காண்பிப்பார். தமாஷாகக் கதைகள் சொல்வார். ஒரு நாள் கதை சொல்லும் மூடில் இருந்தார். ''ஒரு குடியானவனும் ஒரு செட்டியாரும் நடைப் பயணமாய் ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் பயணமாகிக்கொண்டு இருந்தார்கள். வழியில் காட்டுப் பாதையைக் கடக்க வேண்டும். அங்கே திருடர் பயம் அதிகம். இருந்தாலும் வேறு வழியில்லை. இருட்டு நேரத்தில் காட்டு வழியே நடக்கலானார்கள்'' என்று சொல்லிவிட்டு, ''என்ன செட்டியாரே, திருடர்கள் இப்போது வரலாமா? இல்லை இன்னும் கதை போன பிறகு வரலாமா?'' என்று அங்கே அமர்ந்து கொண்டிருந்த வெல்லச் செட்டியாரைக் கேட்டார். அவர் சிரித்துக்கொண்டே, ''எனக்கு என்ன பயம்? நான்தான் பாரதியுடன் இருக்கிறேனே!'' என்றார். உடனே பாரதி கதையைத் தொடர்ந்தார். ''அப்படியானால் சரி, திருடர்கள் பார்த்தார்கள். குடியானவன் நன்றாக அடி வாங்கினான். செட்டியாரோ ரொம்பச் சாமர்த்தியமாய், ஏற்கெனவே அடிபட்டுக் கிடப்பதைப்போல் கிடந்தார். திருடர்கள் அவரைத் தொட்டுப் பார்த்துவிட்டு, கட்டை போல இருக்கிறதே என்றார்கள். உடனே செட்டியார், 'எந்தக் கட்டையாவது மடியில் பத்து ரூபாய் நோட்டு வைத்திருக்குமா?' என்று கேட்டாராம்!''

பாரதியார் இப்படிக் கதை சொல்லவும், வெல்லச்செட்டி எழுந்து வந்து, தம் மடியில் இருந்த பத்து ரூபாய் நோட்டை பாரதியிடம் கொடுக்க, கதை அத்துடன் முடிந்தது.

பாரதி வாழ்ந்த காலத்தில் மிகுந்த வறுமையில் வாழ்ந்தார். ஆனால், யாரும் அவரை நெருங்கி 'ஐயோ! பாவம்' என்று உதவி செய்ய விடமாட்டார். வெல்லச் செட்டி போல பலரிடம் தாமே பெற்றுக் கொள்வார். கவிச்சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டும் தோரணையில்தான் அவர்கள் தர வேண்டும். இல்லையேல் பாரதிக்கு உதவி செய்ய முடியாது. அவரும் பெற்றுக்கொள்ள மாட்டார்.

வறுமை மிகக் கொடியது. வறுமையில் இருப்பவர்களைப்





பயமே பகைவன்!

பண ஆசை காட்டி, இன்று, என்ன பொய் சாட்சி வேண்டுமானாலும் சொல்ல வைக்க முடியும் என்பதைப் பார்க்கிறோம். 'நான் வறியன்; நான் என்ன செய்ய முடியும்' என்று நம் நிலைமையை நாம் நொந்து கொண்டே காலம் தள்ளவும் முடியும். 'நொந்தது சாகும்' என்ற பாரதியின் வரிகள், நொந்துகொண்டு இருப்பவர்கள் சாவை நெருங்கிக்கொண்டு இருப்பவர்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

காந்திஜி தென் ஆப்பிரிக்காவுக்கு இரண்டாவது முறை சென்றபோது, பலத்த எதிர்ப்பு காத்திருந்தது. அதுவும் இந்த முறை மனைவி, மக்களையும் அழைத்துக் கொண்டு சென்று இருந்தார். அவரைக் கொல்லவும் துணிந்த கூட்டம், அங்கே டர்பன் துறைமுகத்தில் காத்திருந்தது. முதலில் கப்பலைக் கரை சேரவே விடாமல் முட்டுக்கட்டை போட்டனர். பல நாட்கள் வேறு வேறு காரணங்கள் சொல்லி இந்தியாவிலிருந்து வந்த இரண்டு கப்பல்களை இருபத்து மூன்று நாட்கள் கடலில் நிற்க வைத்துவிட்டார்கள். காந்திஜி இந்தியாவிலிருந்து பலரை அழைத்து வந்து, தென் ஆப்பிரிக்காவில் நிரப்பப் பார்க்கிறார் என்ற எண்ணத்தில் வெள்ளையர்கள் செய்த சதி இது. ஆனால், உண்மையில் காந்திஜிக்கு, தன் குடும்பத்தினரைத் தவிர, இன்னும் இரண்டு மூன்று பயணிகளைத்தான் தெரியும். 'அப்படியே திரும்பிப் போங்கள். இல்லையேல் கடலில் தள்ளி விடுவோம்' என்ற மிரட்டல் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. காந்திஜி எல்லாப் பிரயாணிகளையும் சந்தித்து அமைதி காக்க அறிவுறுத்தினார். கிறிஸ்துமஸ் விழாவும் கடலிலேயே கொண்டாடப்பட்டது.

இந்த இருபத்து மூன்று நாள் சத்தியாக்கிரகத்துக்குப் பின்னால் கப்பல்கள் துறைமுகத்தில் அனுமதிக்கப்பட்டு, பிரயாணிகளை இறங்க அனுமதித்தார்கள். பிரச்னை இருக்கும் என்பதால், காந்திஜியின் குடும்பத்தார் மட்டும் முதலில் தனியாக வெளியே சென்று, ஒரு நண்பர் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். பிறகு காந்திஜி இறங்கி வந்ததும் பிரச்னை ஆரம்பமானது. ரிக்ஷாவில் காந்திஜி ஏறப் போனால், ரிக்ஷாக்காரனைக் கொன்றுவிடுவோம் என்று ஒரு கும்பல் மிரட்டியதால், அவன் பயந்து ஓடிவிட்டான். பின்னர்

காந்தியின் மீது சரமாரியாகக் கற்களும் அழுகின முட்டைகளும் வீசப்பட்டன. போலிஸ் அதிகாரி அலெக்ஸாண்டரின் மனைவி வந்து, கூட்டத்தில் புகுந்து, காந்திஜியைக் காப்பாற்ற குடையை விரித்துப் பிடித்துக்கொண்டார். பின், இரவு ஒரு நண்பர் வீட்டில் தங்கப் போனால், அங்கேயும் கூட்டம் கூடி காந்திஜியைத் தாக்க முயற்சி நடந்தது. காந்திஜி இவை யனைத்தையும் எதிர்கொண்டுதான் தென் ஆப்பிரிக்க வாழ்க்கையின் இரண்டாம் இன்னிங்ஸ் துவங்கினார்.

உண்மையையும் நேர்மையையும் வழியாய்க் கொண்டு வாழும் யார் வாழ்க் கையிலும் எதிரிகள் வன்முறையைக் கட்ட விழ்த்துவிடுவது சுலபம்! காந்திஜி அன்று பயந்து போய் திரும்பி இருந்தால், இன்று தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர்களுக்கு, இந்தியர் களுக்கு விடுதலை இல்லை. நல்ல காரியம் செய்ய நினைத்துச் செயலில் இறங்கி யிருக்கும் எல்லோருக்கும் இப்படிப்பட்ட சோதனைகள் வருவது இயற்கை. நமக்கு ஏன் இந்த நிலைமை? நாம் நல்லதுதானே செய்ய வந்தோம் என்று நொந்து சாகிற வர்களும் உண்டு. இது போன்ற சமயங் களில் தைரியமாக நிலைமையை சமாளிக் கிறவர்கள்தான் தலைவர்கள் ஆகிறார்கள்.

ஒரு செயலைச் செய்யும்போது வரக் கூடிய இடையூறுகள், அந்தச் செயலை நாம் இன்னும் நன்றாகச் செய்வதற்காகவே ஏற்பட்ட வாய்ப்புகள். இதைச் சரியாகப் புரிந்துகொண்டு வாய்ப்புகளைப் பயன் படுத்திக்கொள்பவர்கள், வெற்றி பெறுகிறார்கள். இடையூறு வந்து விட்டதே என்று நொந்துகொண்டு இருப்பவர்கள் எதையும் செய்ய முடியாமல் இடையூறுகளினால் சிறைபட்டுப் போகிறார்கள். நொந்து சாகும் என்பதாலே, நாம் நொந்து கொள்வதை விட்டுவிட்டு வாழத் துவங்குவோம்.

(அடுத்த இதழில் நிறையும்)



உண்மையையும் நேர்மையையும் கொள்கையாய்க் கொண்டு வாழும் எவர் வாழ்க்கையிலும் எதிரிகள் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவது சுலபம்.

வட்டமேஜை

'பாரத ரத்னா', 'ஜல்லிக்கட்டு' பற்றி சொன்ன தராசு ஒரு தீர்க்கதரிசி!

- கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

நாளுக்கு நாள் மெருகேறி வரும் கல்கிக்குத் திருஷ்டி சுற்றிப் போடுங்கள்! கண் பட்டுவிடப் போகிறது!

- கே.சேதுராமன், பம்மல்

'நானோ' கார் மட்டும் பயன்பாட்டுக்கு வரட்டும். குறை சொல்கிறவர்கள், க்யூவில் நிற்கத்தான் போகிறார்கள்!

- க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

முதுகெலும்புக்கும் கழுத்துக்கும் முடிச்சு உள்ளது என்பதை ப்ரிஸ்கிரிப்ஷன் பகுதி மூலம் அறிய முடிந்தது.

- செல்வராஜா, சேலம்

'சுட்டபழம் வேண்டுமா... சுடாத பழம் வேண்டுமா?' - இரேவதி மோகனின் பதில் மெய் சிலிர்க்க வைத்தது.

- வி.பாலசுப்ரமணியன், தஞ்சாவூர்

பழுதான ஓர் அச்சு இயந்திர யூனிட்டால், கல்கி புனர்ஜென்மம் எடுத்தது, வியக்க வைக்கிறது!

- ஜே.துரைராஜ், சென்னை - 16

காதலென்றால் காதல் அல்ல! - கதைக்காக கேமராவா? கேமராக்காக கதையா? அசத்தல்!

- வே.ஈஸ்வரன், இராஜபாளையம்



அழகான அஞ்சலி!

'பழனி' பட விமர்சனத்தை, பழனி பஞ்சாமிர்தத்துடன் ஒப்பிட்டது, மிகவும் பொருத்தம்!

- பரதன் திருவாரூர்

மார்ட்டின் லூதர் கிங்கின், காந்திஜி பற்றிய நிலைப்பாட்டை வெளியிட்டு, அண்ணலுக்கு அழகான அஞ்சலியைச் செலுத்திவிட்டீர்கள்.

- க.சுந்தர், நெய்வேலி

ஸ்பீடு போஸ்ட்

'கலைஞரின் முடிவே எனக்கு சீட் கிடைக்க வழி வகுத்திருக்கும்' என்ற சல்மாவின் பதில், நேர்மைக்கு உதாரணம்.

- சிவராமசுப்பிரமணியன், தூத்துக்குடி - 2

தவறுகளை அரசுக்குச் சுட்டிக்காட்டுவதும், ஆலோசனைகள் சொல்வதும் தான் பத்திரிகை தர்மம் அதை நிரூபித்துவிட்டீர்கள் தலையங்கத்தில்.

- ரேவதி ப்ரியன், ஈரோடு



டாலர்

கார்த்திக்

"ஹலோ, கோல்ட் லைன் டிராவல்ஸ்? ஐ அம் கதிர்ராஜன் ஸ்பீக்கிங்." தனது விலாசத்தைச் சொல்லி, விமான நிலையத்துக்குச் செல்ல டாக்ஸி 'புக்' செய்தான் - சரளமான ஆங்கிலம் பேசி.

"........"

"ஓகே. தாங்க்யூ" செல்லை மடக்கி டேபிளில் வைத்துவிட்டு, டீ கோப்பையுடன் ஜன்னலருகே சென்று, மெல்பேர்ன் நகரில் விழும் மழைத்தூறலை ரசித்தபடி, சுமதியைப் பற்றிய யோசனையில் மூழ்கினான் கதிர்ராஜன்.

ஹெச்.சி.எல்.லின் சாஃப்ட்வேர் ப்ரொகிராமர் வேலை கிடைத்ததால், அப்பாவின் உத்தரவை மீறி பட்டுக்கோட்டையிலிருந்து சென்னை வந்து, இரண்டு மாதத்திலேயே அலுவலகம் மூலமாக ஆஸ்திரேலியாவுக்குப் பறந்து வந்தவன். சென்னைக்கு வரவே உத்தரவு தராத ரங்கராஜன், ஆஸ்திரேலியா என்றவுடன் ருத்ர தாண்டவமே ஆடி விட்டார். அவருக்கு உடல்நிலை சரி யில்லை என்று அண்ணன் சிவராமன் தகவல் கொடுத்ததால், இப்போது இந்தியா செல்கிறான். இந்தியா என்றதுமே அவன் நினைவுக்கு வருவது சுமதிதான்!

சென்னையில் பிரம்மச்சாரிகளுக் காகவே ஒதுக்கப்படும் மொட்டைமாடி போர்ஷன்கள் ஒன்றில் அவன் தங்கி யிருந்தான். பக்கத்து வீட்டில் இருந்தவள் தான் சுமதி. ஒவ்வொரு நாளும் இவன் பேச்சுக் கொடுக்க நினைத்தாலும், வார்த்தை கள் ஒத்துழைக்காததால் முடியாமல் போனது. அப்படித்தான் அன்று ஒரு நாள், காய்ந்த துணிகளை எடுத்துக்கொண்டிருந் தவள், திடீரென இவன் பேரைச் சொல்லி அழைக்க, இவன் நிஜமாகவே அதிர்ந்து போனான்.

"உங்க வீட்டுப் பக்கம் குடிதார் ஷால்



கனவுகள்!

விழுந்துடுச்சு. கொஞ்சம் எடுத்துக் கொடுங்களேன். ப்ளீஸ்.''

தன்னை இயல்பு நிலைக்கு வரமைழத்துக்கொண்டு ஷாலை எடுத்துக் கொடுத்தான்.

''எப்போதும் பாரதியார் கவிதைகளையே படிக்கறீங்க. கவிதை பிடிக்குமோ?'' வெகுநாள் பழகியவன் போல படபடவெனப் பேசினாள்.

''என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' ஏதோ பேச வேண்டியதால், ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

''அம்மா சொன்னாங்க.''

''உங்க பெயரைத் தெரிஞ்சுக்கலாமா?'' தயக்கத்துடன் கேட்டான்.

''நீங்க சொல்லியா உங்க பெயரைத் தெரிஞ்சுக்கிட்டேன்? கண்டுபிடிங்க பார்க்கலாம்.''

குறும்புக்காரியா இருப்பா போலிருக்கே என்று நினைத்துப் பேச்சை மாற்றினான். ''உங்களுக்கும் கவிதை பிடிக்குமா?''

''பிடிக்கும். சிச்சவேஷன் கவிதைகள் பிடிக்கும். இதோ இந்த சிச்சவேஷனுக்கு ஏதாவது கவிதை படித்த நினைவிருந்தா, சொல்லுங்க பார்க்கலாம்.''

புத்தகத்தை மூடிவிட்டு சிறிது யோசித்தவன்,

''நீ எடுத்து
மடித்து வைக்க வேண்டிதான்
பக்கத்து ஊர் துணிகளும்
பறந்து வந்து விடுகின்றன
மேகங்களாய்.''

''சொந்தக் கவிதையோ?'' கலகலவெனச் சிரித்து, ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கீழிறங்கி ஓடிவிட்டாள். பார்வையா அது! அப்பா! அவனுக்குள் உணர்வுப் புரட்சியை உண்டாக்கிய பார்வை. அதன் பின் பல முறை பார்த்துப் பார்த்துப் பழகியதால் அதன் மொழிகள் புரியத் தொடங்கின. கண்கள் கல்லூரியில் கல்லாமல் தேர்வது, காதல் பாடத்தில் மட்டுமே!

இப்படியாக ஒரு மாதம் இருக்குமா? அந்த மழை வரும் மாலை நேரம் மாடி ஏறி வந்தவன், தன் மனத்தின் காதல் சொற்களைக் காதில் விடுத்தாள். என்ன பிரயோஜனம்? மறுநாளே அலுவலகம் அவனை நாடு கடத்தத் திட்டம் போட்டு





விட்டது. மறுவாரமே தன் திட்டத்தைச் செயல்படுத்தியும்விட்டது. இன்று வரை அவனிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை. அவனும் தொடர்புகொள்ள வில்லை. அவனது நினைவலையை செல்ஃபோன் கலைத்தது.

''கதிர், அப்பா இறந்துட்டார்ரா...'' அண்ணன் சிவராமனின் சொற்களைக் கேட்டதும் உடைந்து போனான். டிராவல்ஸுக்கு ஃபோன் போட்டு, ஏற்கெனவே எடுத்த டிக்கெட்டை கேன்சல் செய்து, மதியம் ஃப்ளைட்டுக்கு டிக்கெட் எடுத்தான்.

''என் பேச்சை மீறிப் போறல்ல. இனி என் மூஞ்சிலேயே முழிக்காதடா. புள்ளையாடி வளர்த்திருக்கே?'' பாவம் அம்மாவுக்குத் திட்டு விழும். அப்பாவை நினைத்தாலே அவர் கோபமாகத் திட்டுவதுதான் நினைவுக்கு வரும். இப்போதுதான் முதன்முதலாக அப்பாவை நினைத்துக் கண் கலங்கினான்.

''அவனை ஏன் திட்டுறீங்க? அவனுடைய படிப்புக்கு எந்த ஊர்ல வேலை கிடைக்குமோ அங்கதான் போயாகணும்.'' அண்ணன் சப்போர்ட்டுக்கு வரவே அப்பா இன்னும் டென்ஷனாகிக் கத்தினார்.

கதிருக்குக் கோபம் வந்து வீட்டை விட்டு வெளியில் வந்தவன் இப்போதுதான் செல்கிறான். ஆனால், அப்பா இல்லையே என்று மனத்துக்குள் அழுதான்.

''அழுதுக்கிட்டே இருந்தா போனவரு திரும்பியா வந்திடப் போறாரு? சிவராமா எழுந்திருய்யா. ஆக வேண்டிய காரியத்தப் பாரு'' என்று தெருப் பெரியவர் சொல்ல, சிவராமன் செல்ஃபோனில் கதிர்ராஜனைத் தொடர்புகொண்டான்.

''கதிர், என்னடா ஆச்சு?''

''நான் வந்துட்டிருந்த ஃப்ளைட்ல ஏதோ ப்ராப்ளம்னு சிங்கப்பூர்ல இறக்கிட்டாங்க. இன்னிக்கு மதியம்தான் அனுப்புவோம்னு சொல்றாங்க. கொஞ்சம் வெயிட் பண்ணுடா. கடைசியா ஒரு தடவைப் பார்த்துக்கறேன்'' இடம் பொருள் பாராமல் அழுதேவிட்டான்.

''எப்பதான் வீட்டுக்கு வருவே?''

''விடிகாலை ஆகும்னு நினைக்கிறேன்'' என்ற பதிலைக் கேட்டு சிவராமன் கொஞ்சம் தயங்கினான். ''சாரிடா கதிர், வேற வழியில்லை. நேத்திக்குக் காலைல இறந்தவரை, இன்னும் வெச்சுக்கிட்டு இருக்கறது சரியில்லன்னு எல்லாரும் சொல்றாங்கடா. இன்னும் ஒரு மணி நேரத்துல எடுத்துடணும்னு சொல்லிட்டாங்க.''



இடி சிரிப்ஸ்

''வாய்ப்புக் கிடைச்சா, வேலை நிறுத்தம் செய்வேங்கிறியே, எங்கே வேலை செய்யறே?''

''எனக்கு இன்னும் வேலையே கிடைக்கலை!''

- வெ.சீதாராமன்

அப்போதுதான் முதன்முறையாக ஊரைவிட்டு வெளிநாட்டுக்கு வந்ததை நினைத்து வருத்தப்பட்டான்.

மறுநாள் அதிகாலை பாதி இருள் சூழ்ந்திருந்தது. வீட்டுக் கதவைத் தட்டினான்.

கதவு திறந்ததும் எதிரில் பார்த்த கதிருக்குத் தலைசுற்றியது. திக்கித் திணறி, ''கமதி'' என்றான். அண்ணன் வெளியில் வந்து, ''என்னடா திகைச்சு நிக்கிற? இவள் உன் அண்ணி'' என்றான். வாசற்படியிலேயே அமர்ந்துவிட்டான். அம்மா, வெளியில் வந்து கதிரைக் கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

மறுநாள், துக்கச் சடங்குகள் அனைத்தும் முடிந்து, ஒரு சில நெருங்கிய உறவினர்கள் தவிர, அனைவரும் சென்றுவிட வீடு காலியாகிப் போனது.


ஒரு யதேச்சையான தனிமையில் கமதி சொன்னாள் ''நான் உங்களை எந்த அளவுக்கு நேசிச்சனோ, அந்த அளவுக்கு நீங்க ஆஸ்திரேலியாவையும், டாலரையும் நேசிச்சு இருக்கீங்க கதிர். ஊருக்குப் போறேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போனதோடு சரி. அப்புறம் இருக்கீங்களா... வருவீங்களா? எதுவுமே தெரியலை. எந்த நம்பிக்கையில காத்திருக்கிறது? பெத்தவங்க உணர்வுகளையும் நான் மதிச்சாகணுமில்லையா? அதான்...'' என்றபோது அவள் குரலில் நியாயம் இருந்தது. கதிர் அமைதியாகத் தலையாட்டிக்கொண்டான்.

''**அ**ப்பா உன் மேல இருந்த கோபத்துல அம்மாகிட்டக்கூட ஒரு வார்த்தை சொல்லாம எல்லாமே பேசி முடிச்சு, மறு தையிலேயே கல்யாணத்தை நடத்திட்டாரு. உனக்குப் பத்திரிகை அனுப்பிவெச்சேன். கற்பகவள்ளின்னு பேரு. வீட்ல கமதின்னு கூப்பிடுவாங்களாம்'' என்றான் அண்ணன் வேறொரு சமயத்தில்.

''சிவா, ஆஸ்திரேலியா போகவேண்டாம்னுதான் வந்தேன். ஆனா, நான் இனியும் இங்கே இருக்கறதுல அர்த்தமில்லை. அதனால திரும்ப அங்கேயே போகலாம்னு இருக்கேன்'' உறுதியாய்ப் பேசினான் கதிர்.

''என்னடா பேசுற? இங்க இருக்கறதில் என்ன அர்த்தமில்லை?'' பரபரப்பானான் சிவராமன்.

''சிவா, உனக்கு ஞாபகமிருக்கா? அப்பாவுக்குப் பிடிக்கலைங்கறப்ப, 'ஏன் போறே? இங்கேயே இருந்து கிடைக்கிற வேலையைப் பாரு'ன்னு நீ சொன்னே. 'திறமையும் அதிர்ஷ்டமும் ஒண்ணா வாய்க்கறது அபூர்வம், அது எனக்குக் கிடைச்சிருக்கு. இதை வேண்டாம்னு சொன்னா என்னைவிட பைத்தியக்காரன் யாரும் இருக்கமாட்டாங்க'ன்னு நான் சொன்னேன். ஃப்ளைட்ல ஆகாயத்துல பறக்கும் போதும், டாலர் மதிப்பில் சம்பள செக்கை வாங்கும்போதும் ரொம்ப அதிர்ஷ்டக்காரன்னு கர்வப்பட்டேன். ஆனா, உண்மையான அதிர்ஷ்டக்காரன் நீதான். அப்பாவோடு காடு வரைக்கும் போனே. நல்ல மனைவி கிடைச்சிருக்காங்க. இங்கேயே இருந்தா என் குற்ற உணர்வு அதிகமாகும். அதனால நாளைக்கே கிளம்பறேன். முடிஞ்சப்போ வர்றேன்'' என்றான். ●



கிரேஸியைக் கேளுங்கள்

● **மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்**

ஓர் ஆண் மகனுக்கு மீசை எது வரையில் அழகு....?

அதில் மண் ஒட்டாத வரையில்.....

● **சுந்தர், அரக்கோணம்**

'கட்டிப்பிடி' வைத்தியம் வாழ்க்கைக்கு உதவுமா....?

வசூல் ராஜாவின் 'கட்டிப்பிடி' சினிமா வைத்தியம் வாழ்க்கைக்குக் 'கட்டுப்படி' ஆகாத வைத்தியம். சினிமாவைப் பார்த்துச் சூடு போட்டுக் கொண்டு, வாழ்க்கையில் 'கட்டிப்பிடி' வைத்தியத்தைக் கையாண்டால், 'எட்டி - உதை' ஃபீஸ்தான் கிடைக்கும்.

● **கா.சங்கர், சாலை அகரம்**

கலைகளில் நீங்கள் எந்தக் கலையைச் சேர்ந்தவர்....?

ஆய கலைகளை விடுங்கள். வைணவக் குலத்தில் வட'கலை', தென் 'கலை' என்று இரு பிரிவுகள் உண்டு. வடகலை பிரிவைச் சேந்தவர்கள் பின்பற்றும் தத்துவத்துக்கு, 'மர்கட கிசோரம்' என்று பெயர். அதாவது 'குரங்குக் குட்டி நியாயம்'. கிளைக்குக் கிளை தாவும் போது, குரங்குக் குட்டி தன் தாய் குரங்கின் வயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். அதுபோல 'நீ' அதாவது 'you' கடவுளை விடாது கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். இதை நினைவூட்டுவதற்காக வடகலைக்காரர்கள் நெற்றியில் 'U' வடிவத்தில் நாமம் இட்டுக் கொள்வார்கள். தென்கலையின் தத்துவம் 'மார் ஜார கிசோரம்.' அதாவது 'பூனைக் குட்டி நியாயம்.' பத்திரமான இடத்தில் தாய்ப் பூனையே வந்து தன்னைக் கவ்வி எடுத்துச் செல்வாள்; அது வரையில் நான் 'ஏன்' அதாவது 'why' கவலைப் பட வேண்டும் என்று குட்டிப் பூனை நிம்மதியாகத் தூங்கும். இதை உணர்ந்த தென்கலைக்காரர்கள் நெற்றியில் 'y' வடிவத்தில் நாமம் இட்டுக் கொள்வார்கள். நான் எனது நாடகக் கலையைக் காப்பாற்றும், மயிலை கற்பகாம்பாள் கோயில் விபூதியை, 'ABCD' என்று Z வரை, ஒவ்வொரு நாளும் அவசரத்தில் ஒவ்வொரு வடிவத்தில் இட்டுக் கொள்ளும் வீர வைணவன்.

● **ஜே.துரைராஜ், சென்னை**

அமெரிக்கர்கள் நிலாவில் ஏக்கர் கணக்கில் நிலம் வாங்குகிறார்களாமே....?

பூமியில் ஒரு சுகம்கூட விடாமல் அனுபவித்து அனுபவித்து, அமெக்கர்களுக்குப் 'புவி ஈர்ப்பு' குறைந்துவிட்டதோ என்னவோ....? நிலாவில் குடியேறும் அமெரிக்க மம்மிமார்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சாதம் ஊட்டும்போது, 'பூமி பூமி ஓடிவா.... புரண்டு புரண்டு ஓடி வா' என்று ஆங்கிலத்தில் பாடி ஊட்டலாம். அப்படியும் சாப்பிட மறுக்கும் பிள்ளைகளைப் பயமுறுத்த, 'பூச்சாண்டிகிட்ட பிடிச்சுக் கொடுத்துருவேன்' என்று கூறி 'புஷ்' படத்தைக் காட்டலாம்!

● **வே.ந. கதிர்வேல், வேலூர்**

அந்தக் காலத் திரைப்படங்களை

பூச்சாண்டி

'ரீ மேக்' செய்வதுபோல, அந்தக் கால நாடகங்களையும் 'ரீ மேக்' செய்தால் என்ன...?

'ரீ மேக்', 'ரீ மிக்ஸ்' எல்லாம் சினிமா பாஷை. நாடகம் தாய் மொழி. நாடகத்தை ஆங்கிலத்தில் play என்பார்கள். என்னுடைய அந்தக் காலத்தில், அதாவது, 1979ல் அரங்கேற்றிய 'அல்லாவுதீனும் 100 வாட்ஸ் பல்பும்' playஐ, இன்றும் வெற்றிகரமாக எனது குழு, மீண்டும் மீண்டும் 'ரீ-ப்ளே' செய்து கொண்டிருக்கிறது. சுயப் பிரதாபம் நிற்க. என்னைப் பொறுத்தவரையில், ஒரு மீடியாவிலிருந்து இன்னொரு மீடியாவுக்கு, ஒரு படைப்பை ஜீவன் கெடாமல் எடுத்துச் செல்வதே 'ரீ மேக்.' இந்தக் கோணத்தில் பார்த்தால், வடமொழி வால்மீகி ராமாயணம் தமிழில் கம்ப ராமாயணமானது. ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்', கொத்தமங்கலம் சுப்புவின் 'தில்லானா மோகனாம்பாள்' போன்ற கதைகள் சினிமாவாயின. பாலசந்தரின் 'மேஜர் சந்திரகாந்த்', 'எதிர் நீச்சல்', வியட்நாம் வீடு சுந்தரத்தின் 'வியட்நாம் வீடு' போன்ற நாடகங்கள் சினிமாவாயின' என்று பிறக்கும் இந்த 'ரீ மேக் காலம்'..? பின் குறிப்பு: 'பாட்டி சுட்ட வடை' கதையையும் 'ரீ-ஹிட்'செய்து நாடகமாகவோ, சினிமாவாகவோ எடுத்துப்பார்க்கலாம்.

● **அ.ஷண்முக சுந்தரம், பெங்களூரு**

விரைந்து வரும் எமனுக்கு மெதுவாகச் செல்லும் எருமை வாகனம், வேண்டாத விருந்தாளியான சனீஸ்வரனுக்கு விருந்தை அழைக்கும் காகம் வாகனம்.... ஏன் இந்த முரண்பாடு....?

வாகனத்தில் வரும்போது, 'இன்னார் உயிரை எடுக்கலாமா? வேண்டாமா?' என்று நிதானமாக யோசித்துச் செயல்பட வசதியாக எமன், மெதுவாகச் செல்லும் எருமையை வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். நாம்தான் ஹெல்மெட் போடாமல், 'எமஹா' மோட்டார் பைக்கில் வேகமாகச் சென்று, குறுக்கே வந்த எருமையுடன் மோதி, எமன் வேலையைத் துரிதப்படுத்துகிறோம். சனி பகவான் வேண்டாத விருந்தாளி அல்ல. சனி வந்தால்தானே ஜாலியான விடுமுறை ஞாயிறு வர முடியும்.

● **என்.கோமதி, நெல்லை**

வெற்றிக்குச் சிறந்த வழி 'வாக்கு வாதமா'? 'பிடிவாதமா'...?

வெற்றிக்கு உழைப்பின் வழியே 'உத்தரவாதம்.'

●



புஷ்!?

ரிஷி அளித்த விளக்கத்தைக் காட்டு விலங்குகள் ஏற்றுக்கொண்டன. மக்களுக்கும் மாக்களுக்கும் இடையேயான வித்தியாசத்தை வள்ளுவர் சொல்லுவார்: மாக்களுக்கும் ஐம்புலன்கள் உண்டு. யானைக்குத் தொட்டு உணரும் சக்தி உண்டு. நாய்க்கு ருசி தெரியும்; ரொம்ப சூடாக இருந்தால் உடனே கண்டுபிடித்துவிடும். இந்த ஐந்து பொறிகளை - பஞ்ச இந்த்ரியங்களை - வழி நடத்தக்கூடிய மனம் - அந்த மனம் என்பது விலங்குகளுக்குக் கிடையாது. மனிதனுக்கு மட்டுமே மனம் உண்டு. இதுதான் இருவருக்குமிடையேயான பெரிய வித்தியாசம். அதனால்தான் மனிதனுக்கு இருப்பது ஆறாவது அறிவு என்று சொல்கிறோம். ஆறாவது அறிவு என்பது, ஐம்புலன்களுடன் கூட இருக்கக்கூடிய மனம். அந்த மனம் வளர்ச்சி அடைந்து, சித்தமாகப் போய் நிற்க வேண்டும் என்றால், அதைப் பக்குவப் படுத்துவது எது? கல்வி பக்குவப்படுத்த வேண்டும். அப்படிப் பக்குவப்படுத்தும் போது, ஏற்கெனவே மனத்திலே கொஞ்சம் வக்கிரம் இருந்தாலும் கல்வி அதை மாற்றிவிடும். ஆனால், எப்போது கல்வி வக்கிரத்தை அடக்கவில்லையோ அப்போது மனம் ராக்ஷஸத் தன்மை எடுத்துவிடும்!

இது எப்படித் தெரியும் என்று கேட்டால், ராக்ஷஸர்கள் என்று நாம் அடையாளம் காட்டக்கூடிய எல்லோருமே நன்றாகப் படித்தவர்கள். ராக்ஷஸத்தன்மை படைத்த ராவணன் ஸாம கானம் இசைத்தால், கைலையங்கிரியே உருகிப் போகும்! படித்த விஷயங்களை ராக்ஷஸத் தன்மைக்கு மாற்றாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மனத்தின் வக்கிரத்தை வளர்க்கப் பயன்படுத்துவோர்தான் ராக்ஷஸர்கள். அப்படிப்பட்ட ராக்ஷஸர்களுக்கு அக்னியாக இருக்கக்கூடியவள் அம்பாள். எனவே, **ராக்ஷஸாக்னி** என்று அவளுக்குத் திருநாமம்.

அனைத்து ஸ்த்ரீகளும் அம்பாள்

ராமா - ராமா என்று சொன்னால் ஸ்த்ரீ ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள் என்பது ஓர் அர்த்தம். உலகத்திலே இருக்கக்கூடிய எல்லா ஸ்த்ரீ ஸ்வரூபங்களிலேயும் அம்பாள் ஆவிர்பவித்திருக்கிறாள். அதனால்தான், பார்க்கிற பெண் வடிவங்களையெல்லாம் காளியின் வடிவங்களாகக் கண்டார் ஸ்வாமி விவேகானந்தர். பார்க்கிற பெண் வடிவங்களெல்லாம் திருவானைக்கா அகிலாண்டேச்வரியின் வடிவங்கள் என்றார் தாயுமானவர்.

நாம் என்று சொன்னாரே, அது ஆண் வடிவம் எடுத்தால் நாராயணன் என்று பெயர்; பெண் வடிவம் எடுத்தால் அம்பிகை பரமேச்வரி என்று பெயர். இதை விளக்கும் திருநாமம் ***ராமா***.

ரமண லம்படா - தன்னுடைய பர்த்தாவாக - கணவராக இருக்கக்கூடிய சிவகாமேசுவரருக்குப் ப்ரீதியாக இருக்கக் கூடியவள்.

காம்யா

காம்யா என்றால், பக்தர்களின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றக்கூடியவள். பக்தர்களின் மனத்தில் நல்ல விருப்

உயர்ந்த ஆசைகளை அருள்பவள்!

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி




பங்கனையே தோற்றுவிக்கக்கூடியவள். எப்படி முத்துஸ்வாமி தீக்ஷிதரின் மனைவிக்கு ஆபரணங்கள் பேரில் இருக்கக்கூடிய ஆசைகளைப் போக்குவித்து, அதே சமயத்தில் அம்பாளைத் தரிசிக்க வேண்டும் என்கிற ஆசையைக் கொண்டு வந்தாளோ, அப்படி நல்ல ஆசைகளைத் தரக்கூடியவள். **காம்யா காம கலா ரூபா** - எல்லா விதமான கலைகளுக்கும் இருப்பிடமானவள் அம்பாள்.

கதம்ப வன கிருஹத்தில்...

கதம்ப குஸுமப்ரியா - அம்பாளுக்கே கதம்ப வன வாஸினி என்று பெயர் உண்டு. கதம்ப (கடம்ப) வனத்தையே தனது விலாஸமாக வைத்திருக்கக்கூடியவள். மதுரையில் ஸ்தல விருக்ஷமே கடம்ப மரம்தான். நீப உப வனத்தில் இருக்கக்கூடியவள் அவள். நீபம் என்றால் கதம்ப மரம் - பெரிய கதம்ப வனம் - காடு!

'சுதா ஸிந்தோர் மத்யே' என்பார் ஆசார்யர். சிந்து என்றால் கடல் - பெரிய கடல்; அமுதக் கடல் அது! அதற்கு நடுவிலே ஒரு மணி த்வீபம் இருக்கிறது. அந்த மணி த்வீபத்தில் என்ன இருக்கிறது என்றால், சுற்றிலும் பெரிய காடு இருக்கிறது. என்ன காடு...? தேவ லோகத்தில் இருக்கக்கூடிய மரங்கள் நிறைந்த காடு. அந்த காட்டுக்கு நடுவிலே ஒரு சிறிய தோட்டம் இருக்கிறது - உத்தியான வனம். என்ன வனம் என்றால் கடம்ப வனம்! அந்த கடம்ப வனத்துக்கு நடுவிலே சிந்தாமணி கிருஹம். அந்த சிந்தாமணி கிருஹத்தில் ஸ்ரீமன் நகர நாயிகாவாக இருக்கக்கூடியவள் அம்பாள்.



கடம்ப வனத்திடம் அவளுக்குப் ப்ரீதி அதிகம். கடம்ப மலர்களை அவள் விரும்புவதால் **கதம்ப குஸுமப்ரியா**.

கல்யாணி - மங்களங்களைத் தரக்கூடியவள். மங்கள ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள்.

ஜகதீகந்தா - இந்த உலகம் அண்டம் - அண்டத்தின் வடிவமாக இருக்கக்கூடியவள். கந்தம் என்றால் ஸ்வரூபம் என்று ஒரு பொருள் உண்டு. ஜகத்தின் கந்தம் என்றால் உலகத்தின் - சிருஷ்டியின் ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள்.

சொல்லி மாளாத கண்ணழகு

இப்படி, பலவிதமான திருநாமங்களால் அவளை வர்ணித்துக்கொண்டே வந்து **வரதா** என்று குறிப்பிடுகிறது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். வரங்களைத் தரக்கூடியவள். பக்தர்கள் என்ன கேட்டாலும் வரமாகத் தரக்கூடியவள்.

வாம நயனா - அழகான கண்களைப் படைத்தவள்.

அம்பாளுடைய கண்களுக்கு, திருப்பித் திருப்பி, ஸஹஸ்ரநாமத்திலே பலவிதமான முக்கியத்துவம் வரும். ஏனென்றால், அந்தக் கடைக்கோடி பார்வை - அந்தக் கடாக்ஷத்தினால்தான் அவள் தன்னுடைய பக்தர்களைக் காப்பாற்றுகிறாள்.

அம்பாளுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் ஒரே விதமான வர்ணம், ஒரே விதமான ராகம், ஒரே விதமான ரூபம் - அதனால்

தான் நாராயணி, பத்மநாப சகோதரி என்று பெயர்கள் இருப்பதைப் பார்த்தோம்.

எப்படி அம்பாளுடைய கண்கள் எப்போதும் அலைந்துகொண்டே இருக்கின்றனவோ, அப்படி மஹாவிஷ்ணுவின் கண்களும் எப்போதும் அலைந்து கொண்டே இருக்கின்றன என்று ஓர் ஐதீகம். இதை திருப்பாணாழ்வார் பாடுகிறார் - ஸ்ரீரங்கத்தில் இருக்கக்கூடிய பெருமாள் - பள்ளிகொண்ட பெருமாள் - அவரை அப்படியே பாதாதி கேசம் வர்ணித்துக்கொண்டே வருவார் திருப்பாணாழ்வார். சாதாரணமாக மரபு என்னவென்றால், ஆண் தெய்வங்களை வர்ணிக்கிறபோது பாதாதி கேசம் வர்ணிக்க வேண்டும். பெண் தெய்வங்களைக் கேசாதி பாதம்

பெருமாளின் கண்கள் பிரகாசமானவை. அதோடு அந்தக் கண்களில் இலேசாக செவ்வரி ஓடியிருக்கிறது. அப்படிபட்ட கண்கள், இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டேயிருக்கின்றன.

வர்ணிக்க வேண்டும். அதனால்தான் சௌந்தர்ய லஹரியில் கேசத்திலேயிருந்து ஆரம்பித்து அந்த வர்ணனை போகும்.

அப்படி பாதாதி கேசமாக பெருமாள் ஸ்வரூபத்தை வர்ணிக்கும்போது திருப்பாணாழ்வார், மேலே திருமார்பைப் பார்ப்பார், கண்ணுக்குப் போய் அதை வர்ணிக்க முற்படுவார்.

எப்படி ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் அவள் கண்களை வர்ணிக்க என்ன சொன்னாலும் முழுதாகச் சொன்னதாகாதோ, அந்த மாதிரிதான் திருப்பாணாழ்வாரின் அனுபவமும் இருக்கிறது. ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம், 'ஆயிரம் கண்ணுடையாள்' என்கிறது; 'இமைத்தல் இல்லாத, நிரந்தரமாகத் திறந்திருக்கும் கண்களையுடையவள்' என்கிறது; அவளுடைய நேத்திரங்கள் மீன் மாதிரி - சலன் மீனாபலோ சனி என்று சொல்கிறது... இப்படி விதவிதமாகச் சொன்னாலும் முழுதாக வர்ணித்ததாக இல்லை.

அதே மாதிரி திருப்பாணாழ்வாரும் ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லி முயற்சி பண்ணுகிறார். பெருமாளின் கண்கள் எப்படி இருக்கின்றன? கரிய கண்கள் மட்டுமல்ல; பிரகாசமான கண்கள். அதோடு அந்தக் கண்களில் இலேசாகச் செவ்வரி ஓடியிருக்கிறது. அப்படிப்பட்ட கண் இப்புறமும் அப்புறமும் பார்த்துக் கொண்டே இருக்கிறது!

கரியவாகி, புடை பரந்து,
மிளிர்ந்து, செவ்வரி ஓடிய
பெரியவாய கண்கள் என்னைப்
பேதைமை செய்தனவே

என்கிறார் ஆழ்வார்!

எவ்வளவு வர்ணனைகள் அந்தக் கண்களுக்கு!

இதைத்தான் இளங்கோவடிகளும் பாடுகிறார்:

'செய்ய கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே?' என்கிறார்!

செய்ய கரியவன் என்றால், சிவந்த கண்களையுடைய கரிய திருமேனி படைத்திருக்கக்கூடியவன். அந்தக் கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே!

கரிய கண்கள், பெரிய கண்கள், செவ்வரி ஓடிய கண்கள், மிளிர்கின்ற கண்கள், பிரகாசமான கண்கள் - இதோடு சேர்ந்து புடை பரந்த கண்கள். புடை பரந்த என்றால், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய கண்கள்.

நாராயணியுடைய ஸ்வரூபமாகவே இருக்கக்கூடிய நாராயணனும், தன்னுடைய பக்தர்கள் எங்கே இருக்கிறார்கள் எங்கே இருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டே இருப்பாராம்!

இதே மாதிரிதான், அம்பாளுடைய கண்களின் அழகை எவ்வளவு சொல்லியும் முழுசாகச் சொல்லி முடிக்க முடியவில்லை.

வாம நயனா - அழகான கண்கள் படைத்தவள். **(வளரும்)**

தி.மு.க.வில் உட்கட்சி ஜனநாயகத்துக்கு வலுசேர்க்கும் வகையில், அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை உட்கட்சித் தேர்தல்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் சத்தமில்லாமல் துவங்கிவிட்டன. அறிவாலயத்தில் ஸ்விட்ச் போட்டால், குமரியில் லைட் எரியும் என்று தி.மு.க. உட்கட்சி கட்டமைப்பைச் சொல்வார்கள். கிட்டத்தட்ட 85,000 கிளைக் கழகங்கள், ஒரு கோடிக்கும் மேல் கழக உறுப்பினர்கள். ஐந்து வருடத்துக்கு ஒரு முறை தேர்தல். அண்ணா காலத்தில் கட்டுப்பாடாகவும் வன்முறையில்லாமலும் நடந்து வந்த தேர்தல்களில், காலப்போக்கில், கலாட்டாவும் வன்முறையும் தலைதூக்க ஆரம்பித்துவிட்டன...

"எங்கள் கட்சியில் உட்கட்சித் தேர்தல் என்பது மிகப் பெரிய நடைமுறை. கிளைக் கழகச் செயலாளரி





கட்சித்

ஸ்டாலின் - அழகிரி

லிருந்து, மேலே தி.மு.க.வின் தலைவர் தேர்தல் வரை நடத்தி முடிக்க ஆறுமுதல் எட்டு மாதங்கள் ஆகலாம்" என்கிறார் தேர்தலுக்கு பொறுப்பான அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன். மேலும், "இந்தியாவிலேயே தேர்தல் கமிஷனின் ஆணைக்கேற்ப உட்கட்சித் தேர்தலை நடத்தி முடிக்கும் ஒரே கட்சி தி.மு.க.தான். நியமனம் என்பது மேல்மட்ட நிர்வாகக் குழு. மற்றும் செயற்குழுவில் சாத்தியமே தவிர, மாவட்ட அளவில் எந்தப் பதவிக்கும் நியமனம் முற்றிலுமாகத் தவிர்க்கப்படுகிறது.

ஒவ்வொரு கிளைக் கழகத்திலும், குறைந்தது இருபத்தைந்து பேராவது உறுப்பினர்களாக இருக்கவேண்டும். இந்த உறுப்பினர்கள் வோட்டுப் போட்டு, கிளைக் கழகத்துக்கான அவைத் தலைவர், செயலர், துணைச் செயலர், பொருளாளர், மற்றும் இரண்டு கிளைக் கழகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். மாவட்டம் என்றால், கிளைக்கழகம். மேலும், நகரம், ஒன்றியம், மாவட்டம் என்று உயர் அடுக்குகள்.

இதுவே சென்னை போன்ற மாநகராட்சிகளாக இருந்தால், வட்டக் கழகம், பகுதிக் கழகம் மற்றும் மாவட்டம். அடிமட்டமான கிளைக்கழகம், மற்றும் வட்டக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், மேலே, ஒன்றியம் அல்லது பகுதிக் கழகத்துக்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அதேரீதியில் கீழ் மட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், உயர் மட்டத்துக்குத் தேர்தல்களில் வாக்காளர்களாக இருப்பர். இறுதியில் மாவட்டச் செயலாளர்கள் கூடி, கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கட்சி நாளேடான முரசொலியில் கிளைக் கழகங்களின் பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது" என்கிறார் இளங்கோவன்.

"அண்ணா காலத்தில், ஒரு மாவட்டத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்களை நடத்தி வைக்க, அண்டை மாவட்டத்

தையும் சேர்ந்தவர்களைக் கொண்டு மூவர் குழு அமைக்கப்படும். இடையில் அதை மாற்றி, சென்னையிலிருந்து ஆணையாளர்களை நியமித்து, அவர்களை அனுப்பி தேர்தலை நடத்தினார்கள். இப்போது பழைய முறையையே மீண்டும் கடைபிடிக்கப் போவதாகச் சொல்கிறார்கள்''என்கிறார், பலமுறை கழகத் தேர்தல்களை நடத்தி அனுபவம் பெற்ற பெரம்பூர் கந்தன்.

சென்னையிலிருந்து ஆணையர்களை அனுப்பி கிளைக் கழகத் தேர்தல் நடத்தியதில் பல குளறுபடிகள் நடந்துவிட்டதாம். உதாரணமாக, ஒன்றியத்தில் பொறுப்பில் வர விரும்பியவர்கள், கிளைக் கழகமே இல்லாத ஊரில் இருப்பதாகக் கணக்குக் காட்டி, அதற்குத் தேர்தல் நடந்ததாகப் பொய் சொல்லி, ஆணையரிடம் கையெழுத்து வாங்கிவிட்டார்களாம். இந்த வகையில் நடந்த குளறுபடிக்காக, சென்னை முன்னாள் மேயர் சா.கணேசன் தேர்தல் பணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டாராம்.

தேர்தலா? மோதலா?

தலைமை நிர்வாக அளவில் வாரிசுகளின் முகாமாகிவிட்ட தி.மு.க.வில், மாவட்ட அளவிலும், சீனியர்களின் வாரிசுகளே பதவிகளைக் கைப்பற்ற திட்டம் தீட்டத் துவங்கிவிட்டார்கள். வீரபாண்டி ஆறுமுகத்தின் மகன், முன்னாள் அமைச்சர் பெரியசாமியின் மகனும், அமைச்சருமான ராஜா ஆகியோர் மாவட்டச் செயலாளர் பதவியைக் கைப்பற்ற முனைந்து வருகிறார்கள். இப்படி, கிட்டதட்ட எழுபது சதவிகிதம் மாவட்டங்களில், வாரிசுகள் கோதாவில் குதிக்க இருக்கிறார்கள். இப்போது சில மாவட்டங்களில் அமைச்சர்களே மாவட்டச் செயலாளர்களாக உள்ளனர். அப்படியில்லாமல் கட்சிப் பொறுப்பு வகிப்பவர், அரசில் எந்தப் பொறுப்பும் வகிக்காத வகையில் சட்டவிதிகள் திருத்தப்படவேண்டும் என்று சொல்கிறார்கள் உடன்பிறப்புகள்.

மாவட்டச் செயலாளர் பொறுப்புகளைப் பொறுத்த மட்டில் ஸ்டாலின், அழகிரி இரு கோஷ்டியினரும் தங்களுக்கு வேண்டியவர்களே தேர்ந்தெடுக்கப்பட, திரைமறைவு வேலைகளைத் துவங்கிவிட்டார்கள் என்கின்றனர்.

''மதுரை நகரம், புறநகர், சிவகங்கை, ராமநாதபுரம், தேனி ஆகிய மாவட்டங்களில் அண்ணன் அழகிரி சொல்பவர்தான் செயலாளராக வர முடியும்'' என்று சொல்கிறார் மதுரை உடன் பிறப்பு ஒருவர்! எதிர்காலத்தில் கட்சியைத் தோள்களில் சுமக்கத் தயார் செய்யப்படும் ஸ்டாலின், இப்போது பல மாவட்டங்களில் இளைஞர் அணி செயலாளர்களாக இருப்பவர்களை, மாவட்டச் செயலாளர் அளவுக்கு உயர்த்திப் பார்க்க ஆசைப்படுவதாகவும் தெரிகிறது.



இந்த முறை நடக்கும் கட்சித் தேர்தலில் கீழ் மட்ட மோதல்களைத் தவிர, ஸ்டாலின் - அழகிரி இடையேயான மோதல்களும், பகிரங்கமாக அரங்கேறக்கூடும் என்கிறார்கள் உடன் பிறப்புகள்.

- ப்ரியன்



வாழ்த்துகள்

● 'காதலுக்கு மரியாதை' காதலைச் சுத்தத் தமிழில், அழகாகச் சொல்ல ஆசைப்பட்டிருக்கிறார்கள். மொத்த படக் குழுவும் கைகொடுக்க, வாழ்த்தை மிகச் சுலபமாக நம்மிடமிருந்து அள்ளிவிடு கிறார்கள்.

● குடும்பத்தை, சமூகத்தை நேசிக்கும் ஆற்றாளனாக மாதவன். நண்பனின் இல்லம் படும்பாட்டில் உருக்குலைந் தவரின் உள்ளத்தை, பாவனா மூலம் மீட்டெடுக்க நினைப்பது சுவாரஸ்யம். காதல் வந்ததும் குழந்தையாகிவிடுகிறார். காதலியின் இல்லத்துக்குள்ளேயே பணி யாளனாகச் சேர்ந்து, பட்டாம்பூச்சிகளைப் பறக்கவிடுவது காதல் ரசவாதம். கொண்ட நேசத்தில் இறுதிவரை உறுதி யாக இருந்து பாவனாவைக் கைப் பிடிக்கும்போது பரவசப்படுத்துகிறார்.

● பாவனாவா இது! வசீகரிக்க வைக் கும் அழகோடு, நடிப்பாற்றலும் மிளிர்கிறது. சின்னச் சின்ன முகபாவங்களில்கூடப் பளிச் சிட வைக்கிறார். தாத்தாவிட மும் மாதவனிடமும் மாட்டிக் கொண்டு படும்பாட்டை, மிக இயல்பாக வெளிப்படுத்தி விடுகிறார்.

● நிறைய புது முகங் கள். கூத்துப்பட்டறை முத்து சாமி நிறைவாகச் செய்திருக் கிறார். பேரன்பும் பெருங் கோபமும் கொண்ட மரியாதை மனிதர். பாசம் காட்டிய பேத்தி பரிதவிக்க வைத்துச் செல்ல, மகன்களும் அதையே பிரதிபலிக்கும்போது வெளிப் படும் அவருடைய நடிப்பில் ஆழம் அதி கம். மருது, வேல்முருகன் எம்.எல்.ஏ., இளவரசு என்று பல இதமான பாத்தி ரங்கள்.

● யுவன் சங்கர் ராஜாவின் இசையில், கவிதை கலந்த பாட்டுகள் காதுக்குள் தேன். ஒளிப்பதிவு சஞ்சய். கண்ணுக்கும் மனதுக்கும் மகத்தான விருந்து. வசனங் களின் கூர்மை, உறுத்தாத உற்சாகம். சீமானின் இயக்கத்தில் 'வாழ்த்துகள்' வித்தியாச சினிமா. படம் முழுக்க தமிழ் மணத்தைப் படரவிட்டதற்கு, ஒரு பூங்கொத்து.

● விறுவிறுப்பில்லாத காட்சிகள், மெதுவான, யூகிக்க வைக்கும் திரைக் கதை எல்லாம் சேர்ந்து, படத்தைப் பின்னுக்கிழுப்பதைத் தவிர்க்க முடிவ தில்லை. இதைக் கவனத்தில் கொண்டி ருந்தால், வாழ்த்துகள் மறக்க முடியாத படமாக அமைந்திருக்கும்.

காளை

* பாட்டியைக் கொன்றவனை பேரன் பழிவாங்கும் தாத்தா காலத்துக் கதை. அதைச் சுடச்சுடச் சொல்ல முயன்று ஆற வைத்துப் பரிமாறியிருக்கிறார்கள். விறைப்பின் விளைநிலமாக சிம்பு. படம் முழுக்க 'பில்ட் அப்' கொடுத்துக் கொடுத்தே சோர்ந்துவிடுகிறார். சண்டைக் காட்சிகள் அவருக்குப் பிறந்த வீடு; பாடல் காட்சிகளோ சொந்த வீடு!

* கதாநாயகி வேதிகா. ஆடுவதும் பாடுவதும் சிம்புவைத் தூக்கித் தூக்கிக் காதலிப்பதும்தான் இவருக்கு வேலை. வேறு எதற்கும் 'நோ'தான். துறுதுறுவென்று இருந்தும் பாத்திரப் படைப்பின் பலவீனத்தால் பரிதாபமாகக் காட்சியளிக்கிறார். இன்னொரு ஹீரோயின் சங்கீதா. எவ்வளவோ பரவாயில்லை. கத்துவது, மிரட்டுவது, கண்கள் தெறித்து விழுந்துவிடுவதுபோல் பார்ப்பது என்று ஏதோ செய்கிறார். ஆனால், மனத்தில் ஒட்டவில்லை.

* வெற்றிலை குதப்பிய வாயோடு சீமாவின் என்ட்ரி ஜோர். பெண் தாதா வேடத்தைக் கச்சிதமாகச் செய்திருக்கிறார். இனி தமிழ் சினிமாவில் சீமா டைப் லேடி தாதா கம்பல்ஸரி கதாபாத்திரமானால் ஆச்சர்யப்படுவதற்கில்லை!

* போலீஸ் ஆபீஸராக வரும் லால், பிய்த்து உதறியிருக்கிறார். சீமாவை மையப்படுத்தி அவர் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் அசாத்தியமானவை. வில்லன் தருண் சத்ரியா சுமார் ரகம். காமெடிக்கு சந்தானம் ஊறுகாய். அங்கங்கே 'யாரையோ' குத்துவதைத் தவிர்த்திருக்கலாம்.

* ஜி.வி.பிரகாஷ் இசையில் இரண்டு பாடல்கள் ஓ.கே. பின்னணியில் அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறார். ஆர்.டி.ராஜசேகரின் ஒளிப்பதிவில மின்னல் வேகம். கார் சேஸிங், பாடல்களில் அதிரடி அழகியலோடு மிளிர்கிறார்.

* இயக்குநர் தருண்கோபி, படத்தைத் தடாலடியாக எடுக்க நினைத்துத் தடுமாறி விட்டாரா, தடுமாறி விட்டதால் தடாலடி கிடைக்கவில்லையா எனத் தெரியவில்லை. படம் முழுக்க ஒரே 'ஜீவா' குழப்பம். மூன்று பாத்திரங்களுக்கு 'ஜீவா' பெயர் வைத்துச் சுற்றவிட்டது சோகம். திரைக்கதையில் வேகம் இருந்தாலும், விவேகம் மிஸ்ஸிங். 'திமிரு' பட வாசனை தூக்கலாகத் தெரிகிறது!

– மதுமிதா



என்ன? என்ன? என்ன?

இது
என்ன?

இது
என்ன?

இது
என்ன?

உங்களைக் கேட்டா வட்டம்,
சதுரம், அறுகோணம்னு
சொல்வீங்க. ஆனா 'கோகுலம்'
படிக்கிற குட்டீஸ்களைக் கேட்டா,
அவங்க சொல்வாங்க
இதெல்லாம்...

பரிசுப் பெட்டிகள்!



உங்கள் பிள்ளைகளின் அறிவையும் கற்பனையையும் வளர்க்கும்
புதுமையான 'பரிசுப் பெட்டிகள்' போட்டி!

தனிப்பிரதி ரூ.8/-

ஓர் ஆண்டு சந்தா ரூ.96/-

இப்போது
கடைகளில்
பிப்ரவரி 2008

கோகுலம்

சந்தாவை எம்.ஓ., டி.டி. அல்லது உள்ளூர்
காசோலையாக அனுப்ப வேண்டிய முகவரி
சர்க்குலேஷன் மேனேஜர்,
கோகுலம் - தமிழ்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No. TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08*Registered as a Newspaper in Srilanka.

